காற்றில் பறந்த மேடை  பக்கம் 02

தண்ணீருக்கும் போராட்டமா..?  பக்கம் 17

இறுதிப் போட்டிக்கு காமாட்சி  பக்கம் 22

சம்பியனானது ஸ்பெயின்  பக்கம் 23

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

★ உதயன்

பக்கங்கள் : 26

சுடர் 27
கதிர் 220

வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 19 செவ்வாய்க்கிழமை (03/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

### பல்கலை மாணவன் டெங்கினால் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 3
டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பல்கலைக் கழக மாணவன் சிகிச்சை பயனளிக்காது நேற்று முன்தினம் இரவு அங்கு மரணமானார்.

சம்பவத்தில் கொழும்பு பல்கலைக் 04

# கை, கால்கள் முறிந்த நிலையில் மகர சிறையில் வவுனியாக் கைதிகள்

வவுனியா,ஜூலை 3
வவுனியா சிறைச்சாலையில் இருந்து அரசியல் கைதிகள் 30 பேரில் 27 பேர் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் மகர சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த 27 பேரும் கை, கால்கள் முறிந்த நிலையிலும், இரத்தம் தோய்ந்த உடைகளுடனும் அங்கு உள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அவர்கள் காயங்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படாமலும் உணவு வழங்கப்படாமலும் அங்கு தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 30 பேரில் மிகுதி 3 பேர் மிகவும் மோசமான நிலையில் ராகம அல்லது கம்பஹா பிரதேசத்தில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

### தப்பினார் எஸ்.பி.

மட்டக்களப்பு,ஜூலை 3
மட்டக்களப்பு மாவட்டத்தில் கிழக்குப் பல்கலைக் கழக சௌக்கிய சுகாதாரப் பிரிவுக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க நேற்று கலந்து கொண்டிருந்தபோது அங்கே அமைக்கப்பட்டிருந்த மேடை சரிந்தது. எனினும் அமைச்சருக்குக் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களில் தற்போது பலத்த காற்று வீசுகிறது.

உயர்கல்வி 04

# சுயநிர்ணய உரிமைக்கென தனி நிகழ்ச்சி நிரல் தேவை

## ஐ.நா. மனித உரிமைச் சபையில் வலியுறுத்தினார் சர்வதேச சட்டவாளர் கரன் பார்கர் அம்மையார்

ஜெனிவா,ஜூலை 3
ஒடுக்கப்பட்ட இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கான தனியான நிகழ்ச்சி நிரலொன்றை ஐ.நா மனித உரிமைகள் சபை ஏற்படுத்த வேண்டுமென, சர்வதேச சட்டவாளர் கரன் பார்கர் அம்மையார் ஜெனிவாவில் வலியுறுத்தியுள்ளார். ஐ.நா மனித உரிமைகள் சபையின் 20 ஆவது கூட்டத் தொடரில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

இலங்கை அரசு தனது நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் காணப்படும் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதை, ஐ.நா பிரதிநிதிகள் கண்காணிக்க வேண்டும் என்று ஐ.நா மனித உரிமைகள் சபை தனது 19ஆவது தொடரில் நிறைவேற்றப்பட்ட பிரேர 04



### சிறுமி படுகொலை சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூலை 3
கிருலப்பனைப் பகுதியில் வசித்து வந்த கிருஷ்ணகுமார் துஷாந்தினி (வயது - 3) என்ற சிறுமியைத் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தி படுகொலை புரிந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களான 16 வயது சிறுவனையும், 18 வயது இளைஞனையும் கிருலப்பனைப் பொலிஸார் புதுக்கடை நான்காம் இலக்க நீதிமன்றில் நேற்று முன்னிலைப் படுத்தினர்.

கடந்த சனிக்கிழமை இரவு கிருலப்பனைப் பகுதியில் குறித்த சிறுமியைக் கால் 04



நேற்று நயினை நாகபூஷணி அம்மனின் தேர் உற்சவத்தில் பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

### வேம்படி புதிய அதிபராக வேணுகா நேற்று பதவியேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3
யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக நியமனம் செய்யப்பட்ட வேணுகா சண்முகரத்தினம் நேற்று திங்கட்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அவர் பதவியேற்றுக் கொண்டதை உறுதிப்படுத்திய யாழ்.கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி சிவபாலன் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் பொதுச் சேவை 04

### கைதிகளின் நிலைமை குறித்து கொழும்பில் அவசரக்கூட்டம்

கொழும்பு, ஜூலை 3
வவுனியா சிறைச்சாலை அசம்பாவிதங்களை அடுத்து தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமை பற்றி ஆராய்ந்து உடன் நடவடிக்கை எடுப்பதற்காக அனைத்துத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும், இந்த விவகாரத்தில் அக்கறை கொண்டுள்ள செயற்பாட்டாளர்களினதும் அவசரச் சந்திப்பு ஒன்று நாளை புதனன்று கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இந்த அவசர சந்திப்பை மக்கள் கண்காணிப்புக்குழு ஏற்பாடு செய்துள்ளது.

இதுகுறித்து மக்கள் கண்காணிப்புக் குழு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

வவுனியா சிறைச்சாலை அசம்பாவிதங்களின் பின்னர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள தமிழ் 04

### சண்டையின்போதே பிரபா உயிரிழந்தார்

#### இப்படிக் கூறுகிறார் பொன்சேகா

கொழும்பு, ஜூலை 3
சண்டையின் போதே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழந்ததாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பிரபாகரன் உயிரிழந்ததாகவும், பின்னர் அவரது சடலம் கிடைக்கப் பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

[illegible] ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரபாகரனின் இளைய புதல்வர் பாலச்சந்தி 04


### கிழக்கு மாகாணத் தேர்தலில் மு.கா. தனித்துப் போட்டி?

#### ஹக்கீம் தலைமையில் இன்று அவசரமாகக் கூடுகின்றது உயர்பீடம்

கொழும்பு, ஜூலை 3
கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அரசுடன் இணைந்து போட்டியிடுவதா அல்லது தனித்துப் போட்டியிடுவதா என்பதைத் தீர்மானிப்பதற்கான முக்கியத்துவம் வாய்ந்த கூட்ட 04

### டிப்ளோமா பட்டதாரிகள் நேற்று ஆர்ப்பாட்டம்

#### நியமனம் வழங்குமாறு கோரி



யாழ்ப்பாணம், ஜூலை 3
தமக்கும் பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று கோரி உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பட்டாதாரி பயிலுநர் நியமனத்துக்கான நேர்முகத் தேர்வு 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழ் அகதிகளால் நிறைகிறது கிறிஸ்மஸ் தீவு

கான்பரா,ஜூலை 3

இலங்கையில் இருந்து வந்ததாக நம்பப்படும் மற்றொரு அகதிகள் படகு நேற்றுமுன்தினம் இரவு கிறிஸ்மஸ்தீவுக்கு அருகே இடைமறிக்கப்பட்டுள்ளதாக ஆஸ்திரேலிய உள்துறை அமைச்சர் ஜாசென் கிளெர் தெரிவித்துள்ளார்.

இந்தப் படகில் 39 அகதிகள் இருப்பதாக முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் பாதுகாப்புச் சோதனைகளுக்குப் பின்னர், கிறிஸ்மஸ் தீவுத் தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர். இந்த அகதிகள் படகு ஆஸ்திரேலிய கடற்படையினரால் கிறிஸ்மஸ்தீவு நோக்கி கொண்டு செல்லப்படுகிறது.

**ஆபத்தான பயணம்**

இலங்கையில் இருந்து அகதிகளை ஏற்றிவரும் படகுகள் ஆபத்தான கடற்பயணத்தை மேற்கொள்வதாக ஆஸ்திரேலிய அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

சிறிய மீன்பிடிப் படகுகளிலேயே இலங்கைத் தமிழ் அகதிகள் ஆயிரம் கிலோமீற்றருக்கும் அதிகமான தூரத்தைக் கொண்ட கடற்பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இவர்கள் பயணம் செய்யும் மீன்பிடிப் படகுகள் சிறியதாக இருப்பதாகவும், ஆழ்கடல் பயணத்துக்கு ஏற்றவாறு தரமானதாக இல்லை என்றும் அந்த அதிகாரிகள் கூறியுள்ளனர்.

**தமிழ் அகதிகளுக்காக காத்திருக்கும் கொக்கோஸ் தீவு**

ஆஸ்திரேலியாவின் கொக்கோஸ்தீவுக்கு இலங்கையில் இருந்து மேலும் பல அகதிகள் படகுகள் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுவதால், அங்கு அவசரமாக விமான மூலம் உதவிப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை மற்றும் தென்னிந்தியாவில் இருந்து தமிழ் அகதிகள் மேலும் வரலாம் என்று நம்பப்படும் நிலையிலேயே, ஆஸ்திரேலியா அதிகாரிகள் கொக்கோஸ் தீவுக்கு அகதிகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பொருள்களை நேற்றுமுன்தினம் அனுப்பி வைத்துள்ளனர்.

நோயாளர் காவு கட்டில்கள், சலகை இயந்திரங்கள், உலர்த்திகள், கிருமி கொல்லி மருந்துகள் மற்றும் ஏனைய பொருள்களை ஏற்றிய விமானம் கிறிஸ்மஸ் தீவில் இருந்து கொக்கோஸ் தீவுக்குச் சென்றது.

இலங்கை மற்றும் தென்னிந்தியாவுக்கு நெருக்கமாக கொக்கோஸ் தீவு இருப்பதால், இங்கு மேலும் அகதிகள் படகுகள் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**67 தமிழ் அகதிகள் கொக்கோஸ் தீவில்**

இலங்கையில் இருந்து 67 தமிழ் அகதிகளுடன் புறப்பட்ட படகு ஒன்று நேற்றுமுன்தினம் கொக்கோஸ் தீவை சென்றடைந்தது.

கடந்த ஒரு மாதத்தில் இலங்கையில் இருந்து கொக்கோஸ் தீவை வந்தடைந்த நான்காவது அகதிகள் படகு இதுவாகும்.

இந்தப் படகில் வந்த 67 தமிழ் அகதிகளுமே ஆண்களாவர். இவர்களில் இருவர் பதின்ம வயதினர்.இவர்கள் கொக்கோஸ் மற்றும் கீலிங் சமூக மன்றத்தில் ஒரு நாள் இரவு மட்டும் தங்கவைக்கப்பட்டனர்.

**இலங்கை அகதிகளை வெறுக்கும் கொக்கோஸ் வாசிகள்**

கொக்கோஸ் தீவுக்கு அடுத்தடுத்து வரும் இலங்கை அகதிகள் படகுகளை அங்குள்ள மக்கள் வெறுப்புடன் பார்க்கின்றனர். இந்தத் தீவில் கொக்கோசியன் இன மக்களும், மலாய் இனத்தவருமாக மொத்தம் 600 பேர் வாழ்கின்றனர்.

கொக்கோஸ் மற்றும் கிலிங் சமூக மன்றத்தில் அகதிகள் தங்க வைக்கப்படுவது உள்ளூர் வாசிகளை வெறுப்பேற்றுகிறது. இங்கு அகதிகள் தங்க வைக்கப்படுவதால், தாம் கொக்கோஸ் மற்றும் கிலிங் சமூக மன்றத்தைப் பயன்படுத்தும் உரிமையை இழந்து வருவதாக இவர்கள் விசனமடைந்துள்ளனர். இதனால் ஒவ்வொரு படகு வரும் போதும் அவர்கள் கோபத்துடன் பார்க்கின்றனர்.

**வாடகை விமானத்தில் கிறிஸ்மஸ் தீவு பயணம்**

கொக்கோஸ் தீவை கடந்த சனிக்கிழமை சென்றடைந்த தமிழ் அகதிகள் 67 பேரும் நேற்றுமுன்தினம் காலை வாடகைக்கு அமர்த்தப்பட்ட விமானம் ஒன்றின் மூலம் கிறிஸ்மஸ் தீவுக்கு அழைத்து வரப்பட்டனர்.

கிறிஸ்மஸ் தீவு விமான நிலையத்தில் வந்திறங்கிய தமிழ் அகதிகள் புன்முறுவலுடன் காணப்பட்டனர்.

இவர்களுடன் இலங்கையில் இருந்து 53 அகதிகளுடன் புறப்பட்ட மற்றொரு படகு கிறிஸ்மஸ் தீவை வந்தடைந்தது குறிப்பிடத்தக்கது.

**அம்மை நோயுடன் வந்த தமிழ் அகதி**

இலங்கையில் இருந்து கடைசியாக வந்தடைந்த இரண்டு படகுகளில் ஒன்றில் வந்த தமிழ் அகதி ஒருவர் அம்மை நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.இதையடுத்து இலங்கை அகதிகளைக் கையாளும் அதிகாரிகள் கவனமாக இருக்கும்படி சுகாதார எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பெருமளவு முகவரமைப்புகளும், அதிகாரிகளும் இலங்கை அகதிகளைக் கையாளும் பணியில் ஈடுபட்டுள்ளதால், மருத்துவமனையில் குறித்த நோயாளிக்குத் தனியாக சிகிச்சை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை அங்குள்ள நிலைமை குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்படுவதாகவும், தேவைப்பட்டால், இலங்கையில் இருந்து வந்த அகதிகள் தனிமைப்படுத்தப்பட்ட இடத்தில் தங்க வைக்கப்படுவார்கள் என்றும் ஆஸ்திரேலிய குடிவரவு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (த)

## மற்றுமொரு படகும் கிறிஸ்மஸ் தீவுக்கு

கான்பரா,ஜூலை 3

கிறிஸ்மஸ்தீவின் சிறு குடாவின் கரைக்கு அண்மையில் பெரும்பான்மையாக ஆண்கள் அடங்கிய 39 பேரை ஏற்றிவந்த மிகவும் பழைய மீன்பிடிப் படகொன்று தற்போது நங்கூரமிட்டுள்ளது. இப்படகில் 5 கடற்படையினரும் காணப்படுகின்றனர்.

இந்தப் படகிலிருந்தவர்கள் நேற்றுக் காலை தமது படகில் நின்றவாறு கைகளை அசைத்துக் கொண்டு புன்னகையுடன் காணப்பட்டனர்.

இவர்கள் வந்த படகு முதல் நாள் இரவு வழிமறிக்கப்பட்டு கிறிஸ்மஸ் தீவின் சிறு வளைகுடாவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இவர்களைக் கரைக்கு கொண்டு வந்து கிறிஸ்மஸ்தீவிலுள்ள புகலிடம் கோருவோரால் ஏற்கெனவே நிரம்பி வழிகின்ற முகாம்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த வியாழக்கிழமை இரவிலிருந்து 24 மணித்தியாலங்களுக்குள் வந்த 4 படகுகளில் இது கடைசியாக வந்த படகாகும். நேற்றுமுன்தினம் 53 இலங்கையர்களுடன் வந்த இன்னுமொரு படகு பிளையிங்பிஷ் வளைகுடாவுக்கு கொண்டு வரப்பட்டது.

இது மட்டுமன்றி நேற்றுமுன்தினம் 67 இலங்கையர்கள் கிறிஸ்மஸ்தீவின் விமான நிலையத்தில் வந்திறங்கினர். கடந்த வெள்ளிக்கிழமை கொக்கோஸ்தீவைச் சென்றடைந்த இவர்கள் விமானம் மூலம் கிறிஸ்மஸ்தீவுக்கு அழைத்துவரப்பட்டனர்.

இதேவேளை, இனங்காணப்படாத 41 பேரை ஏற்றிவரும் இன்னுமொரு படகு வெள்ளிக்கிழமை ஆஷ்மோர்தீவுகளில் வழிமறிக்கப்பட்டு கிறிஸ்மஸ்தீவுக்கு அழைத்துவரப்படுகின்றது.

கடந்த வாரம் புகலிடம் கோருவோரை ஏற்றிவந்த படகில் ஒரு இலங்கையர் பொக்களிப்பான் நோயால் பாதிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்பட்டதைத் தொடர்ந்து சுகாதார அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த)

## துப்பாக்கி சுடும் போட்டியில் முன்னாள் போராளி பங்கேற்பு

கொழும்பு, ஜூலை 3

விடுதலைப்புலிகள் அமைப்பில் சிறந்த துப்பாக்கி சூட்டுத் திறமையைக் கொண்டிருந்த ஒருவர் தற்போது இலங்கையின் தேசிய துப்பாக்கி சுடும் போட்டியில் பங்கேற்கவுள்ளார்.


> முன்னாள் போராளிகளில் 131 பேர் இலங்கையின் தேசிய விளையாட்டுக்களுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

விஜயன் என்ற இந்த விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர், இலங்கை இராணுவத்துக்கு எதிராக பல சண்டைகளில் ஈடுபட்டவராவார்.

புனர்வாழ்வு பெற்று வெளியேறியுள்ள விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகளில் 131 பேர் இலங்கையின் தேசிய விளையாட்டுக்களுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் குறி பார்த்துத் துப்பாக்கி சுடும் பயிற்சியை பெற்று வரும் விஜயன் தாம் தற்போது துப்பாக்கி சுடுவதில் தொழில் நுட்பங்களைக் கற்று வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர, 12 விடுதலைப்புலிகள், கரப்பந்தாட்டம், கிரிக்கெட், கபடி, கால்பந்தாட்டம், நீச்சல் போன்ற விளையாட்டுத் துறைகளிலும் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)



மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களில் நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் பலத்த காற்றுவீசியது. இதனால் மட்டக்களப்பு பிள்ளையாரடியில் கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய சுகாதாரப் பிரிவுக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க உரையாற்றிய மேடையும் சேதமடைந்தது.

## இலங்கைக்கு ஜி.எஸ்.பி. வரிச்சலுகை வழங்குவது புத்திசாலித்தனமானதல்ல

கொழும்பு,ஜூலை 3

இலங்கைக்கு ஜி.எஸ்.பி வரிச்சலுகையைத் தொடர்ந்தும் வழங்குவதற்கு அமெரிக்கா எடுத்துள்ள தீர்மானம் புத்திசாலித்தனமானது இல்லை என்று இலங்கை சுதந்திர வர்த்தக வலய தொழிற்சங்கங்கள் சம்மேளனத்தின் செயலாளர் அன்ரனி மார்க்கஸ் கூறுகிறார்.

நாட்டில் தொழிலாளர்களின் ஒன்றுகூடுவதற்கான உரிமைகள் மற்றும் பேரம் பேசுவதற்கான சுதந்திரம் போன்றவற்றை முன்னேற்றுவதற்கான எந்தவித செயற்பாடுகளையும் இன்னும் இலங்கை அரசு நிறைவேற்றவில்லை என்றும் அவர் விசனம் தெரிவித்தார்.

கட்டாய வேலைவாங்கலில் இருந்து சுதந்திரம், சிறார்கள் வேலைவாங்கப்படுவதை தடுத்தல், குறைந்த பட்ச ஊதியம் மற்றும் வேலைத்தளங்களில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான உரிமை போன்ற விடயங்களில் இலங்கை இன்னும் அடிமட்டத்தில்தான் இருக்கிறது என்றும் அன்ரனி மார்க்கஸ் கூறினார்.

அமெரிக்க தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க அமைப்புகளின் சம்மேளனம் முன்வைத்த மனுவில் உள்ள அடிப்படைக் கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

2007 இல் சர்வதேச தொழில் நிறுவனம் முன்வைத்த கோரிக்கைளை இன்னும் இலங்கை அரசு நிறைவேற்றவில்லை என்றும் அரசு நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெற்று தொழிலாளர்களின் போராட்டங்களை நசுக்குவதற்கு நடவடிக்கை எடுப்பது தொடர்வதாகவும் அன்ரனி மார்க்கஸ் கூறினார்.

இது தொடர்பான முறைப்பாட்டை அமெரிக்க தொழிற்சங்கங்கள் சம்மேளனத்தினூடாக முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (த)

## ஒலிம்பிக் நேரடி ஒலிபரப்புக்கு எம்.ரி.வி நிறுவனத்துக்கு தடை

கொழும்பு, ஜூலை 3

லண்டனில் இடம்பெறவுள்ள 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை இலங்கையில் நேரடி ஒளிபரப்புச் செய்யும் அதிகாரத்தை இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தைத் தவிர வேறு எந்த நிறுவனத்துக்கும் வழங்கக்கூடாதென தெரிவித்துக் கொழும்பு வணிக மேல் நீதிமன்றம் விதித்திருந்த இடைக்காலத் தடைஉத்தரவு நிரந்தரமாக்கப்பட்டுள்ளது.

> மனுவை பரிசீலித்த நீதிமன்றம் எம்.ரி.வி நிறுவனத்துக்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடை உத்தரவை நிரந்தரத் தடை உத்தரவாகப் பிறப்பித்துள்ளது.

ஏற்கனவே விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவைக் கொழும்பு வணிக மேல்நீதிமன்றம் நேற்று நிரந்தரத் தடை உத்தரவாக அறிவித்துள்ளது.


இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் முன்வைத்த மனுவொன்றை பரிசீலித்த நீதிமன்றம் எம்.ரி.வி நிறுவனத்துக்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடை உத்தரவை நிரந்தரத் தடை உத்தரவாகப் பிறப்பித்துள்ளது.

நேற்று விதிக்கப்பட்ட நிரந்தரத்தடை உத்தரவு எதிர்வரும் ஒகஸ்ட் 27ஆம் திகதிவரை நடைமுறையில் இருக்கும் என கொழும்பு வணிக மேல்நீதிமன்ற நீதிபதி காமினி அமரசேகர உத்தரவிட்டார்.

ஒலிம்பிக் நேரடி ஒளிபரப்பு அனுமதி தமக்கு வழங்கப்பட்டதாக எம்.ரி.வி நிறுவனம் அண்மையில் உத்தியோகபூர்வமாக அறிவித்ததோடு நேரடி ஒளிபரப்புத் தொடர்பான முன்னோட்டங்களையும் ஒளிபரப்புச் செய்துவந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடியார்கள் புடைசூழ நயினையில் தேர் பவனி



யாழ்ப்பாணம்,ஜூலை 03

சரித்திரப் பிரசித்தி பெற்ற நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

அதிகாலை 4.30 மணிக்கு விசேட பூசைகள் ஆரம்பமாகி காலை 7 மணிக்கு வசந்த மண்டப பூசைகள் இடம்பெற்றன. காலை 9 மணிக்கு அம்பாள் தேருக்கு எழுந்தருளினர். வீதியுலா காலை 9.15 மணிக்கு ஆரம்பமானது.

தேர்த்திருவிழாவான நேற்றைய தினம் யாழ்.குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் தென்பகுதியில் இருந்தும் பெருந்திரளான மக்கள் ஆலயத்துக்கு வருகை தந்திருந்தனர்.

நேற்று மட்டும் சுமார் பதினைந்தாயிரத்துக்கும் அதிகமானவர்கள் திருவிழாவில் கலந்துகொண்டனர். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சப்பரத் திருவிழாவுடன் தேர்த்திருவிழாவிலும் கலந்து கொண்ட மக்கள் தொகை நாற்பதாயிரம் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றையதினம் ஐம்பது படகுகள் வரை சேவையில் ஈடுபட்டிருந்தன. மக்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொள்ளுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டதால் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறாது கண்காணிப்பதில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். பொலிஸார் சீருடையிலும் சாதாரண உடைகளிலும் பெண் பொலிஸார் சேலை கட்டியும் கடமையில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் சப்பரத் திருவிழாவன்று முதல் தடவையாக தீ மிதிப்பு இடம்பெற்றுள்ளது. வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவர் தனது நேர்த்திக் கடன் கழிக்கும் பொருட்டு தீ மிதித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-7-17)

## நிகழ்வுகள்

### ஆண்டு நிறைவு

சுதுமலை ஈஞ்சடி நாவலர் பாலர் பாடசாலையின் எட்டாம் ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த விளையாட்டுப் போட்டியும் பிற்பகல் 2.30 மணிக்கு ஈஞ்சடி பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆரம்ப பிள்ளைப்பருவ கல்விப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையாவும் விசேட விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குகநேசனும் கலந்து கொள்வர்.(ம-14)

## நயினையில் கடமையில் செஞ்சிலுவைத் தொண்டர்

யாழ்ப்பாணம், ஜூலை 3

நயினாதீவு இறங்குதுறைகளிலும் ஆலயச் சூழலிலும் 24 மணி நேர சேவையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

செஞ்சிலுவை யாழ். கிளைச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கத்தின் நேரடி மேற்பார்வையின் கீழும் சிரேஷ்ட தொண்டர் இ.சற்குருநாதன் தலைமையிலும் இந்தச் சேவை இடம்பெறுகின்றது.

சுமார் 100 இற்கும் மேற்பட்ட தொண்டர்களின் சேவை குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்து நடைபெறுகிறது.

இதேவேளை-

கடற்படையினரும் ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களையும் நயினாதீவில் இருந்து வரும் பக்தர்களையும் படகுகளில் ஏற்றும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ம-50)

## பிரதேச செயலகங்களில் கடமைகள் ஏற்பு

தென்மராட்சி,ஜூலை 03

பட்டதாரிகளை அரச சேவையில் இணைக்கும் திட்டத்தில் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வில் கடிதங்களைப் பெற்ற 100இற்கும் அதிகமான பட்டதாரிகள் நேற்று நண்பகல் தொடக்கம் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு வந்தனர்.

பயிலுநர்களாக பிரதேச முகாமைத்துவ மற்றும் அபிவிருத்திப் பிரிவுக்கு நேற்றுத் தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளதால் நியமனக் கடிதங்கள் பெற்றவர்கள் பிரதேச செயலகத்துக்கு வந்திருந்தனர்.

ஆறு மாதங்கள் பயிலுநர்களாக பிரதேச அபிவிருத்தி செயல்திட்டங்களில் கடமையாற்றவுள்ள இவர்களுக்கு மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா படியாக வழங்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நியமனக் கடிதங்கள் பெற்றவர்கள் அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு சென்று கடமைகளைப் பொறுப்பேற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# எமது மக்களுக்காக அர்ப்பணிப்புடன் சேவை செய்வதற்குப் புறப்படுங்கள்

## நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கு யாழ்.அரச அதிபர் அறிவுரை





யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்.மாவட்டத்தில் 4 பிரதேச பிரிவுகளில் ஆளணிப்பற்றாக்குறை காணப்படுகின்றது. இந்தப் பிரதேச செயலர் பிரிவுகளுக்கு நியமனம் செய்யப்படுகின்ற பயிலுநர் பட்டதாரிகள் தியாக உணர்வுடனும், அர்ப்பணிப்புடனும், இது எங்களுடைய பிரதேசம், எங்களுடைய மக்கள், எங்களுடைய சமூகம் என்ற அடிப்படையில் சேவையாற்ற வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில்வேலையற்ற பட்டதாரிகளுக்கு, பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கும் நிகழ்வு வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் 2 ஆயிரத்து 39 பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தலைமை உரையாற்றும் போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் அரச சேவையில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்பும் நோக்குடன் உங்களுக்கான நியமனங்கள் வழங்கப்படுகின்றன. 2011 ஆம் ஆண்டு வரையில் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்களுக்கு இந்த நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

உங்களிடம்பெரியபொறுப்புக்கள் இன்றிலிருந்து தரப்படுகின்றன. எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்தையும் சரியான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு புள்ளி விவரங்கள் அவசியமானவை. அந்தப் புள்ளி விவரங்களைப் பெறும் தகவல் சேகரிக்கும் பணிகளையே நீங்கள் மேற் கொள்ளவுள்ளீர்கள்.

ஆறு மாத காலத்துக்கு இந்தப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவீர்கள் அதன் பின்னர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு, தெங்கு அமைச்சு, விவசாய அமைச்சு போன்றவற்றில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு உள்வாங்கப்படுவீர்கள்.

யாழ்.மாவட்டத்தில் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை, மருதங்கேணி ஆகிய 4 பிரதேச செயலகங்களும் ஆளணிப் பற்றாக் குறையுடன் இயங்கி வருகின்றன என்று தெரிவித்தார். (ம-5-17)

## இடைநிறுத்திய பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு தீர்மானம்

தென்மராட்சி,ஜூலை 3

அண்மைக்காலமாக நிறுத்தப்பட்டுள்ள 769 மார்க்க பாடசாலை பேருந்து சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு இ.போ.சபை கோண்டாவில் சாலையினரிடம் கோரிக்கை விடுக்க சாவகச்சேரி நகரசபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து தென்மராட்சி பிரதேச மாணவர்களுக்கென காலை 6.30 மணிக்கு புறப்படும் பாடசாலை சேவை அண்மைக் காலமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலை மாணவர்கள் வீதிகளில் காத்திருந்து பாடசாலைகளுக்கு தாமதமாகச் செல்கின்றனர். இந்த பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு நகர சபை உறுப்பினர் சுதர்சன் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் முன்மொழிந்தார்.

இதனை சபை உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டதை அடுத்து இது தொடர்பாக இலங்கை போக்குவரத்துச் சபை கோண்டாவில்சாலை முகாமையாளருக்கு கடிதம் அனுப்புவதென தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார்.(ம-9)

## எழுதுமட்டுவாழில் குடியமர்ந்தோருக்கு அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை

தென்மராட்சி,ஜூலை 3

எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து எட்டு மாதங்களாகியும் இன்னமும் உரிய வசதிகள் எவையும் செய்து கொடுக்கப்படவில்லை என்று மக்கள் விசனம்தெரிவித்துள்ளனர்.

2000ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் திகதி பளை தொடக்கம் முகமாலை வரை இடம்பெற்ற போரால் எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவில் இருந்து 283 குடும்பங்கள் இடம் பெயர்ந்து தென்மராட்சி, வலிகாமம், வடமராட்சி போன்ற இடங்களில் தஞ்சமடைந்தனர்.

2002ஆம் ஆண்டு தென்மராட்சிப் பிரதேசமக்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளத் திரும்பியபோது தாமும் மீளக்குடியமர தமது இருப்பிடங்களுக்கு செல்லலாமென்ற ஆர்வத்துடன் காத்திருந்த மக்களுக்கு மிருசுவிலுக்கு அப்பால் மீளக்குடியமர்வு இல்லையென அறிந்து ஏமாற்றமடைந்தனர்.

2008ஆம் ஆண்டு தொடக்கம் தென்மராட்சி கிழக்குப் பிரிவு மக்களுடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எழுதுமட்டுவாழ் தெற்கு பிரிவு மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குச் செல்ல அனுமதி கிடைத்தது.

நிறைந்த எதிர்பார்ப்புடன் குடியமர்ந்துள்ள நிலையில் பெரும்பாலான பகுதிகள் மணல் வீதியாக மாறியுள்ளதால் பெரிதும் சிரமமடைகின்றனர். மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களில் செல்வோர் பல இடங்களில் இறங்கி நடந்து செல்ல வேண்டியுள்ளது. சுமார் இரண்டு கிலோ மீற்றர் நீளமான இந்த வீதி 50 வருடங்களுக்கு மேலாக எந்தவித புனரமைப்புமின்றிக் காணப்படுகிறது.

இந்த வீதியை மீள செப்பனிட்டு வழங்குமாறு உரிய அதிகாரிகளுக்கும் சாவகச்சேரி பிரதேச சபையினருக்கும் பல தடவைகள் அறிவித்தும் பயன் கிடைக்க வில்லை எனவும் தெரிவித்தனர். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்டையின்போதே பிரபா உயிரிழந்தார்

01↘ ரனின் சடலம் இறுதிக் கட்ட யுத்தத்தின் போதுகிடைக்கப் பெறவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பிரபாகரன் மற்றும் அவரது சிரேஷ்ட புதல்வர் சாள்ஸ் அன்ரனி ஆகியோரின் சடலங்களைப் படையினர் மீட்டதாகவும், அவரது குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்கள் பற்றிய தகவல்கள் தெரியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சில சிறுவர் போராளிகள் உள்ளிட்ட ஏனைய போராளிகளின் சடலங்கள் கிடைக்கப் பெற்றதாகவும், அநேக மானவர்கள் சயனைட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் எந்தவொரு போராளியும் வெள்ளைக்கொடியுடன் சரணடையவில்லை எனவும், அவ்வாறு சரணடைந்திருந்தால் அவர்களுக்கு அடைக்கலம் வழங்குமாறு படையினருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்ததாகவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (த)

# சுயநிர்ணய உரிமைக்கென தனி நிகழ்ச்சி நிரல் தேவை

01↘ ணையில் கூறியிருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

அங்கு தற்போது, பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தப்படுவது தோல்வி கண்டிருப்பது மட்டுமல்ல, தமிழ்மக்கள் மீது பல புதிய பாரதூரமான மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன.

தமது விருப்பத்துக்கு மாறாக, இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட தமிழ்மக்கள், கைதுசெய்யப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு விசாரணையற்ற மரணதண்டனை கொடுக்கப்பட்டிருப்பதால், அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட 40 தமிழரை, பிரிட்டன் அரசு நாடுகடத்துவதை, அந்த நாட்டு உயர் நீதிமன்றொன்று செல்லுபடியற்றதாக்கியிருப்பதை இங்கு நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தங்கள் காணிகளும், உடமைகளும் பறிமுதல் செய்யப்படுவதிலிருந்து , அவற்றைக் காப்பாற்றிக் கொள்ள முயன்ற தமிழர்கள் மிரட்டப்படுகிறார்கள்.அவர்களுக்கு கூடுவதற்கும், பேசுவதற்குமான சுதந்திரங்கள் கூட மறுக்கப்படுகின்றன.

ஆகையால் ஐ.நா. மனித உரிமைகள் சபையால் விடப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று தூண்டும் அதே நேரம், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பிரதிநிதிகள் இலங்கை நிலவரங்களை மீளாய்வு செய்யும் போது, நல்லிணக்க ஆணைக் குழுவின் சிந்தனைத் தடங்களுக்குள் தங்களை மட்டுப் படுத்திக்கொள்ளாமல், சர்வதேச மனித உரிமைகள், மனித சட்டங்களின் சிந்தனைத் தடங்களை பின்பற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்-என்றார். (த)

# டிப்ளோமா பட்டதாரிகள் நேற்று ஆர்ப்பாட்டம்

01↘ கடந்த மாதம் இடம்பெற்றது. இதில் தேர்வு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கான நியமனங்கள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து நேற்று வழங்கப்பட்டன.

பட்டதாரிப் பயிலுநர் நேர்முகத் தேர்வுக்கு தோற்றி நியமனம் வழங்கப்படாத உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிளே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எச்.என்.டி.ஏ. பட்டதாரிகளின் எதிர்காலம் என்ன? உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் சான்றிதழின் பெறுமதி என்ன? பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 46(90) சுற்றறிக்கை வெறும் காகிதமா? என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, வீரசிங்கம் மண்டபத்தில் பட்டதாரிகள் நியமனம் வழங்குகின்ற நிகழ்வில் பங்கு பற்றுவதற்காக வந்துகொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவர்களைச் சந்தித்துக் கலந்துரையானார்.

ஏனைய மாவட்டங்களில் உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறி பட்டதாரிகள் பட்டதாரி பயிலுநர் நியமனத்தில் உள்ளவாங்கப்பட்டுள்ள போதும் இங்கு மட்டும் எதுவித காரணங்களுமின்றி நிறுத்தப்பட்டிருக்கிறோம் என்று பட்டதாரிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக நான் ஜனாதிபதியிடம் கதைத்துள்ளேன். நாளை மறுதினம் இடம்பெறுகின்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பில் கதைக்குமாறு கூறியுள்ளார். ஏனைய இடங்களில் வழங்கப்பட்டதை நிறுத்துமாறு உத்தரவிடப்பட்டதாக நான் அறிகிறேன். ஏனைய இடங்களுக்கு வழங்கப்பட்டிருக்குமானால் இங்கேயும் கட்டாயம் கிடைக்கும் என்றார் அமைச்சர். இதன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியாக இருந்தனர். (த-5-17)

# கிழக்கு மாகாணத் தேர்தலில் மு.கா. தனித்துப் போட்டி?

01↘ மொன்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இன்று அவசரமாக நடத்தவுள்ளார்.

அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை வாபஸ்பெற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட வேண்டுமென்று கட்சி உறுப்பினர்கள் விடுத்துவரும் வேண்டுகோள் வலுவடைந்துவரும் பரபரப்பான சூழ்நிலையில், இந்தக் கூட்டம் கூட்டப்படுகின்றது. கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்துக்கு கிழக்கு மாகாணசபையின் மு.கா. முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

''இன்று இந்த ஆட்சியாளர்களால் முஸ்லிம் சமூகம் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகிறது. பதவி, பட்டங்களா, சமூகமா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. வரலாற்றில் நாம் சமூகத்துக்குத் துரோகமிழைத்தவர்களாக அடையாளம் காணப்பட்டுவிடக் கூடாது. எனவே, கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்களின் நன்மை கருதித் தலைவர் சரியான தீர்மானத்தை எடுப்பாரென நம்புகிறோம்'' - என்று முஸ்லிம் காங்கிரஸின் உயர் மட்டப் பிரமுகர் ஒருவர் நேற்றிரவு 'உதயனிடம்' தெரிவித்தார்.

''மாகாணங்களுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்கள் மற்றும் முஸ்லிம் முதலமைச்சர் பதவி என்பன தொடர்பில் அரசின் உறுதியான பதில் எமக்குத் தேவை. வெறும் வாய்மொழி உறுதிகளை நம்புவதற்கு நாம் இனியும் தயாரில்லை. பதவிகளுக்காக அரசில் இருப்பதா, சமூகத்தின் நன்மைக்காக வெளியேறுவதா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டியுள்ளது. கிழக்கில் மட்டுமல்ல, நாட்டிலுள்ள ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் முஸ்லிம் காங்கிரஸ் என்ன முடிவை எடுக்கப் போகிறது என்பதனையே எதிர்பார்த்து நிற்கின்றது'' - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மேற்படி நடைபெறும் இன்றைய கூட்டத்தின் பின்னர் கட்சியின் தீர்மானங்கள் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜனாதிபதி மஹிந்தவுடன் முக்கியம் மிக்க சந்திப்பொன்றை நடத்துவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## தப்பினார் எஸ்.பி.

01↘ அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க உரையாற்றிக் கொண்டிருந்த போது கடும் காற்று வீசத்தொடங்கியதால் அமைச்சர் உடனடியாக மேடையிலிருந்து பாதுகாப்பாக கீழிறக்கப்பட்டார்.

அதன்பின் மேடையில் அமர்ந்திருந்த அதிதிகள் மற்றும் பிரமுகர்கள் மேடையிலிருந்து உடனடியாக இறங்கியதும் மேடையும் சரிந்து விழுந்தது.எனினும் இதனால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவை பிரதியமைச்சர் முரளிதரன் பாதுகாப்பாக அழைத்துச் சென்றார்.

இதேவேளை கடந்த சில நாள்களாக வாழைச்சேனை, ஏறாவூர் முதலான பல பகுதிகளிலும் பலத்த காற்று வீசுகிறது. (த)

## சிறுமி படுகொலை சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

01↘ வாயில் தள்ளி படுகொலை செய்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் சிறுமியின் உறவினரான 16 வயது சிறுவனையும், 18 வயது இளைஞனையும் கிருலப்பனை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

இதேவேளை சிறுமியின் இறுதிக் கிரியை இன்று கிருலப்பனை பொது மயானத்தில் மாலை 3 மணிமுதல் 5 மணி வரை இடம்பெறவுள்ளது.

கிருலப்பனை கிருலபுர பகுதியில் கிருஷ்ணகுமாரின் குடும்பத்தவர் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு 11 வயதில் ஒரு மகனும், 6 வயதில் ஒரு மகளும் உள்ளனர். கிருஷ்ணகுமாரின் மனைவியும், பிள்ளைகள் இருவரும் கடந்த சனிக்கிழமை வெள்ளவத்தை சித்தார்த்த வீதி புனித அந்தோனியார் ஆலய திருச்சொரூப பவனியைக் காணச் சென்றுள்ளனர்.

இதில் கலந்துகொண்டுவிட்டு வீடு செல்லும் வழியில் தமது உறவினரின் வீட்டுக்கு கிருஷ்ணகுமாரின் மனைவி தனது இரு பிள்ளைகளுடன் சென்றுள்ளார். அங்கு சென்று சிறிது நேரத்தில் அவரது 6 வயது மகளான துஷாந்தினி காணாமற்போயுள்ளார்.

காணாமற்போன தனது மகளைத் தாயார் தேடியலைந்துள்ளார். இதன்போது அவ்விடத்திற்கு வந்த உறவினரான 16 வயது சிறுவனிடம் இதுகுறித்துக் கேட்டபோது தான் சிறுமியைக் காணவில்லை எனக் கூறி அவர்களுடன் சேர்ந்து அவரும் சிறுமியைத் தேடியுள்ளார்.

இதனையடுத்து கிருலப்பனை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தனர். அவர்கள் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது கிருலப்பனைப் பகுதியிலுள்ள கால்வாயொன்றில் சிறுமியின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து கடற்படையினரின் உதவியுடன் குறித்த சிறுமியின் சடலம் மீட்கப்பட்டு தந்தையால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இரு சந்தேக நபர்களை கிருலப்பனைப் பொலிஸார் கைதுசெய்து புதுக்கடை நான்காம் இலக்க நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்துள்ளனர். அத்துடன், மேலதிக விசாரணைகளையும் நடத்தி வருகின்றனர்.

# பல்கலை மாணவன் டெங்கினால் சாவு

01↘ கழகத்தில் கற்கும் இமையாணன் மேற்கு உடுப்பிட்டியைச் சேர்ந்த தவபாலன் கிரிதரன் (வயது-22) என்ற மாணவனே மரணமானவராவார்.

கொழும்பில் தங்கியிருந்தபோது டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டு களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுப் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கடந்த 27 ஆம் திகதி மாற்றமாகி வந்து விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே 4ஆவது நாளான நேற்று முன்தினம் அங்கு மரணமானார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4)

# வேம்படி புதிய அதிபராக வேணுகா நேற்று பதவியேற்பு

01↘ கள் ஆணைக்குழுவுக்கும் கல்வி அமைச்சின் செயலாளர் தேசியப் பாடசாலையின் பணிப்பாளர் ஆகியோருக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

வேணுகா சண்முகரத்தினம் நேர்முகப் பரீட்சையின் பின்னர் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டார்.

இந்த விடயத்தில் அமைச்சர் ஒருவர் தலையிட்டமையால் புதிய அதிபர் தனது பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதில் இடையூறுகள் இருந்து வந்தன. கடந்த வாரம் புதிய அதிபர் பதவியேற்கச் சென்ற போது கல்லூரியின் பதில் அதிபராக இருக்கும் ராஜினி முத்துக்குமாரன் அதற்கு ஒத்துழைக்காமையால் அவர் பதவியைப் பொறுப்பேற்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவை புதிய அதிபர் சந்தித்துப் பேசியதையடுத்து இந்த மாதம் 2ஆம் திகதி கல்லூரிக்குச் சென்று பதவியேற்குமாறு கல்வியமைச்சர் பணித்திருந்தார். இதன்படி நேற்று அவர் பதவியேற்றுக்கொண்டார்.

நேற்று அவர் பதிவேட்டில் உத்தியோகபூர்வமாக கையெழுத்திட்டு பதவியேற்றுக்கொண்டார். எனினும் கல்லூரியின் பதில் அதிபர் ராஜினி முத்துக்குமரன் கடந்தவாரம் அதிபர் அலுவலகத்தைப் பூட்டிச் சென்றிருந்தார். நேற்று அவர் கல்லூரிக்குச் சமூகமளிக்கவில்லை. நாளை புதன்கிழமை அவர் அதிபர் அலுவலகத் திறப்பு உள்ளிட்ட ஆவணங்களை புதிய அதிபரிடம் கையளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை அலுவலக திறப்பு உள்ளிட்ட ஆவணங்கள் புதிய அதிபரிடம் ஒப்படைக்கப்படாத பட்சத்தில் உரிய வசதிகள் ஒழுங்குகளை எற்படுத்திக் கொடுப்பது வலயக்கல்விப் பணிமனையின் பொறுப்பு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாணப் பாடசாலையிலிருந்து தான் விலகுவது தொடர்பிலான கடிதத்தை மாகாணக்கல்வித் திணைக்களத்திடம் வேணுகா சண்முகரத்தினம் கோரியிருந்தார். அதன்படி திணைக்களம் அந்தக் கடிதத்தை மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளது.

எனினும் இந்தக் கடிதத்தை மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இதுவரை வேணுகா சண்முகரத்தினத்திடம் வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனுடன் தொடர்புகொள்ள முயற்சி மேற்கொள்ளப்பட்டபோதும் அது பயனளிக்கவில்லை. (த-4)

# கைதிகளின் நிலைமை குறித்து கொழும்பில் அவசரக் கூட்டம்

01↘ அரசியல் கைதிகளின் உறவினர்கள், தமது உறவுகளை கைவிட்டு விட்டீர்களா என தமிழ் அரசியல் தலைவர்களை நோக்கி கேள்வி எழுப்புகின்றார்கள்.

29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சம்பவத்தின் பின்னர் கைதிகள் வவுனியா சிறைக்கூடத்திலிருந்து அனுராதபுரம், மஹர ஆகிய சிறைச்சாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர் எனவும், இந்த கைதிகளில் பலர் காயமடைந்து உள்ளனர் எனவும், உரிய மருத்துவ வசதிகள் வழங்கப்படாமல் அவர்கள் பழி வாங்கப்படுவதாகவும், சிலர் எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள் எனத் தெரியாத நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் வெளியாகியுள்ள செய்திகளையடுத்து இந்த பதற்ற நிலைமை கைதிகளின் குடும்ப உறவினர் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமையை பற்றி ஆராய்ந்து உடன் நடவடிக்கை எடுப்பதற்காக அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும், இந்த விவகாரத்தில் அக்கறை கொண்டுள்ள செயல்பாட்டாளர்களினதும் அவசரச் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் களையும், மக்கள் பிரதிநிதிகளையும், கட்சிகளின் பிரதிநிதிகளையும், சிவில் சமூக செயல்பாட்டாளர்களையும் இந்தச் சந்திப்பில் தவறாமல் கலந்து கொள்ளும்படி மக்கள் கண்காணிப்புக் குழு ஏற்பாட்டாளர் மனோ கணேசனும், இணைத்தலைவர் சிறிதுங்க ஜயசூரியவும், ஐ.தே.கவின் துணை செயலாளர் மற்றும் கட்சியின் மனித உரிமை பொறுப்பாளர் ஜெயலத் ஜெயவர்த்தன எம்.பியும் விடுத்துள்ள கூட்டு அழைப்பில் கோரியுள்ளனர்.

இந்தக் கூட்டம் கொழும்பு, கொள்ளுப்பிட்டி, எலோ அவனியூ, இலக்கம் 6 இல் அமைந்துள்ள CHRD என்ற மனித உரிமை இல்ல அலுவலகத்தில் ஜூலை 4 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என அனைத்து அழைப்பாளர்கள் சார்பாகவும் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடக்கு, கிழக்கு தேர்தல்களும் பிரசார உத்திகளும்

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி அந்த மாகாண மக்களின் கைகளில் அந்தப் பகுதியின் நிர்வாகத்தைக் கொடுத்து விடுங்கள். போருக்குப் பின்னரான மீள் நல்லிணக்கத்துக்கான பெரிய நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு விட்டது. அது போல் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஏனைய பரிந்துரைகளும் நடைமுறைக்கு வரும் என்பதாக சர்வதேச சமூகத்தையும் ஐ.நா. மனித உரிமை சபை உறுப்பு நாடுகளையும் திருப்திப் படுத்தலாம் என்ற வகையில் இந்திய தேசிய பாதுகாப்புத் துறை ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் இலங்கை அரசுக்கு புத்திமதி கூறிவிட்டு சென்றுள்ளதாக இலங்கை ஊடகங்களில் வரும் செய்திகளின் மூலமாக அறியக் கூடியதாக இருக்கிறது.ச்

அதே சமயம் இந்திய தரப்பிலிருந்து வரும் செய்திகளின் படி, போர் முடிவுற்று மூன்று ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் உண்மையான தேசிய நல்லிணக்கத்துக்கான திட்டம் ஒன்று இலங்கை அரசிடம் கிடையாது என்ற மனக் குறையுடனேயே மேனன் குழுவினர் இந்தியாவுக்கு திரும்பியிருப்பதாக அறியமுடிகின்றது.

கிழக்கு மாகாணம், வடமத்திய மாகாணம் மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல்களை இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் நடத்தி முடிப்பதற்கு தீர்மானித்திருக்கும் அரசு வடக்கு மாகாண சபை தேர்தலை மட்டும் நடத்துவதற்கு பின்னடிப்பதன் உண்மையான நோக்கம் என்ன என்பது குறித்து அறிவதற்கு சகல தரப்பினரும் அங்கலாய்த்துக்கொண்டிருக்கிறார்கள். கண்ணிவெடிகள் இன்னமும் அகற்றப்பட வேண்டியிருக்கிறது. மீள்குடியமர்வு முற்றுப் பெற வேண்டும். வாக்காளர் பதிவுகள் சீர் செய்யப்பட வேண்டும். இவ்வாறான பல காரணங்கள் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாமைக்கு அரசு தரப்பில் முன்வைக்கப்படும் நொண்டிக் காரணங்களாகும். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போதும் பொதுத்தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களின் போதும் கூட இதே நிலைமைதான் -இன்னும் இதை விட மோசமான நிலைமை என்று கூட கூறலாம். ஆனால் எதுவித பாதகமுமின்றி அவைகளை நடத்தி முடிக்க முடிந்த தென்றால் இந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலை மட்டும் ஏன் நடத்த முடியாது என்பது எதிர்க்கட்சிகளின் சார்பில் முன்வைக்கப்படும் கேள்விகளாக உள்ளன.

அரசு கபடமான ஒரு நோக்குடனேயே இந்தத் தேர்தலை நடத்தத் தயங்குகிறது என்பது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் குற்றச் சாட்டு. தனக்கு தோல்வி ஏற்பட்டுவிடுமே என்று அரசு பயப்படுகின்றது என்கிறது ஐ.தே.கட்சி. ஜனதா விமுக்தி பெரமுன நேற்று முன்தினம் விடுத்த மிகக் காட்டமான ஓர் அறிக்கையில், பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பெரும் எடுப்பில் அரசுக்கு எதிராகக் கிளர்ந்து எழுவதை திசைதிருப்பவே இந்த மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் கருத்தை அளவிடுவது தான் நோக்கமென்றால் எல்லா மாகாண சபைகளின் தேர்தல்களையும் அரசு ஒரே சமயத்தில் நடத்த முன்வர வேண்டும் என்று சாடியிருக்கிறது.

எதுவானாலும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் கருத்தை அதன் உள்ளார்ந்த அர்த்தத்துடன் ஏற்றுக் கொண்டு அரசு செயற்படுமா என்பது தெரியவில்லை. அவ்வாறு செயற்படுமானால் இந்த வருடமே வடக்கு மாகாண தேர்தலும் நடைபெறுவது சாத்தியம். அது மட்டுமல்ல சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு சரிவுகள் ஏதும் இடம் பெறும் பட்சத்தில் இந்தியாவின் உதவியை அது எதிர்பார்க்க முடியும்.

தேர்தல் என்று வரும் போது வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கும் தென்னிலங்கையில் உள்ள மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கும் நிறையவே வித்தியாசம் உண்டு. கடந்த உள்ளூராட்சி சபைகள் மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் பலவகையிலும் அச்சுறுத்தலுக்குள்ளானார்கள். பிரசாரக் கூட்டங்களுக்குள் சீருடையினர் அடாவடியாக நுழைந்து தாக்கியதும் பிரதேச சபை வேட்பாளர் ஒருவரின் வீட்டு வாசலில் இனந்தெரியாதவர்களால் நாயின் கொய்யப்பட்ட தலை தொங்க விடப்பட்டிருந்ததும் நினைவுக்கு வருகின்றன. பொதுத் தேர்தல் முடிந்த சில நாள்களிலேயே கிறீஸ் பூதம் ஒன்று கிளம்பிப் பொது மக்களை கதிகலங்க வைத்ததும் உண்டு.

தென்னிலங்கையைப் பொறுத்த வரை விலைவாசிகள் உயர்வையும் வாழ்க்கைத் தரம் சீர் குலைந்திருப்பதையும் எதிர்க்கட்சிகள் தமக்கு சாதகமான பிரசாரக் கருவிகளாகப் பயன்படுத்திக் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அரசைப் பொறுத்த அளவில் இருக்கவே இருக்கிறது 30 ஆண்டுகால பயங்கர வாதத்தை ஒழித்து கட்டி வெற்றிவாகை சூடிய பெருமை. இன்னும் பல தேர்தல்களுக்கு இந்தப் 'பெருமை' கைகொடுக்கும் என்பது அரச தரப்பினரின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருக்கும்.

வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி வேலைகளை அரசு திட்டமிட்டு செயல்படுத்தி வருவதை மறுக்க முடியாது. போரினால் அழிந்த, அழிக்கப்பட்ட பிரதேசங்களை மீண்டும் எந்த வகையாலும் கட்டியெழுப்ப வேண்டியது அரசின் கடமை. அதனையே தேர்தல் பிரசாரமாக முன்னெடுப்பதன் மூலம் மக்களை வளைத்துவிட முடியாது.

60 வருடங்களுக்கு மேலாக அவர்கள் போராடிக் கோரி வரும் அபிலாசைகளில் ஒரு சிலவற்றையேனும் வழங்குவதற்கு இந்த அரசு கரிசனைகாட்டுமானால் அதுவே பெரிய காரியம். அந்த வகையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடனடியாக அரசு துரிதமாக செயல்படுத்த வேண்டும். அந்த மாதிரியான நடவடிக்கைகளே தமிழர்களை திருப்தி கொள்ள செய்வதற்கான மார்க்கம்.

# வடக்கில் அதிபர்களுக்கு பற்றாக்குறை நிறைவேற்று அதிபர்களாக ஆசிரியர்கள்

## 520 பேர் நியமிக்கப்பட்டனர்

**வடமாகாணத்தில் அதிபர்கள் பற்றாக்குறை வலிகாமம் மற்றும் கிளிநொச்சி வலயங்களிலேயே அதிகம் நிலவுகிறது.**

யாழ்ப்பாணம், ஜூலை 3

வடமாகாணத்தில் அதிபர்கள் பற்றாக்குறை பிரச்சினை தொடரும் நிலையில் ஆசிரியர் தரத்திலுள்ள 520 பேர் கடமை நிறைவேற்று அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று கல்வித் திணைக்களத் தரவுகள் தெரிவிக்கின்றன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அதிபர்கள் பற்றாக்குறை வலிகாமம் மற்றும் கிளிநொச்சி வலயங்களிலேயே அதிகம் நிலவுகிறது. கிளிநொச்சி வலயத்தில் 62 ஆசிரியர்கள் கடமைநிறைவேற்று அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். வலிகாமம் வலயத்தில் 61 ஆசிரியர்கள் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.வலயத்தில் இவ்வாறு 45 ஆசிரியர்களும், வவுனியா வடக்கு வலயத்தில் 48 பேரும் , வவுனியா தெற்கு வலயத்தில் 44 பேரும், வடமராட்சி வலயத்தில் 43 பேரும் மன்னார் வலயத்தில் 41 பேரும், துணுக்காய் வலயத்தில் 40 பேரும், தீவக வலயத்தில் 37 பேரும், தென்மராட்சி வலயத்தில் 34 பேரும், மடு வலயத்தில் 33 பேரும், முல்லைத்தீவு வலயத்தில் 32 பேரும் கடமை நிறைவேற்று அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடமாகாணத்தில் நெடுங்காலமாகவே அதிபர்களுக்குப் பற்றாக்குறை நிலவி வருகிறது. அதிபர் தரத்துக்கு முன்னேறுபவர்களின் வீதமும் குறைவாகவே இருப்பதாக அதில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-4)

## சிறுவர் நீதிமன்ற பொறுப்பதிகாரி சிவகரன்

யாழ்ப்பாணம், ஜூலை 3

வடமாகாண சிறுவர் நன்னடத்தை அதிகாரியாக கடமையாற்றிய சி.சிவகரன் வடமாகாண சிறுவர் நீதிமன்ற பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் குருநகரில் ஆரம்பிக்கப்படவுள்ள சிறுவர் நீதிமன்றின் பொறுப்பதிகாரியாக முதலாம் திகதி தொடக்கம் மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தால் இவர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## நயினாதீவு மணிபல்லவ கலாமன்றக் கலைவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 3

நயினாதீவு மணிபல்லவ கலாமன்றத்தின் கலைவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். மணிபல்லவ கலாமன்றத்தின் தலைவர் இ.சிவபாதசேகரம் தலைமையில் கலைவிழா மன்ற அரங்கில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவனும் சிறப்பு விருந்தினராக வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசனும் கலந்து கொள்வர். சிறப்புரைகள், பட்டிமன்றம், கலைநிகழ்வுகள் என்பனவும் இடம் பெறவுள்ளன. (ம-7)

## ஒலிபெருக்கி திருட்டு

தென்மராட்சி, ஜூலை 3

ஆலய மகா கும்பாபிஷேகத்துக்காக வீதியில் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கி நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் களவாடப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் மட்டுவில் மத்தியில் இடம்பெற்றது.

அப்பகுதியில் உள்ள வேம்படி கந்தசாமி ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை நடைபெறவுள்ள நிலையில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்டிருந்தது.

இதில் ஒரு ஒலிபெருக்கியை திருடிய திருடர்கள் அதில் பொருத்தப்பட்டிருந்த கருவியை கழற்றிக் கொண்டு குழாயை அங்குள்ள பற்றைக்குள் வீசிவிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஒலிபெருக்கி உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ம-9)

## முகாம்களில் திருமணம் புரிந்த தம்பதியருக்கு விசேட கடன்

### புனர்வாழ்வு அதிகாரசபை வழங்குகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 3

போர் காரணமாக நலன்புரி நிலையங்களில் வசித்த காலத்தில் திருமணம் முடித்த தம்பதியரை சுயதொழில் மூலம் உயர்வடையச் செய்வதற்கு விசேட கடன் கொடுப்பனவு புனர்வாழ்வு அதிகார சபையால் வழங்கப்படவுள்ளது.

இதற்கான விவரங்கள் அந்தந்தப் பிரதேச செயலகங்களால் திரட்டப்பட்டு வருகிறது.

திருமண சுபீட்சக் கொடுப்பனவு பெறுவதற்கு தகைமையுடையவர்களின் பெயர் விவரங்களை தனித்தனியாக பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் தெரிவித்துள்ளார்.

அப்போதைய கப்பல் துறை, துறைமுகங்கள் மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சால் 1994.02.05 ஆம் திகதி வெளியிடப்பட்ட எம்.ஆர்.ஆர்./7/1/48/94 ஆம் திகதிய சுற்றறிக்கைப் பிரகாரம் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

நலன்புரி நிலையங்களிலிருந்து வெளியேறி தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்த தகைமையுள்ள தம்பதிகள் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் பெயர் விவரங்களைப் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-9)

## முதியோருக்கு ஆயிரம் ரூபா ஆரம்ப நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 3

அரசால் அறிவிக்கப்பட்ட 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங்கும் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ள மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் கடமையாற்றும் சமூக சேவைகள் உத்தியோகத்தர், முதியோர் மேம்பாட்டு உதவியாளர், சமூக அபிவிருத்தி உதவியாளர் ஆகியோரில் ஒருவரை அனுப்பி வைக்குமாறு முதியோர் தேசிய செயலக பதில் பணிப்பாளர் எம்.டி.சி.ஜயமான்ன தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் திரட்டப்பட்ட முதியோர் கொடுப்பனவு விவரங்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் இதற்குரிய அனுமதி கிடைத்ததும் ஜூன் மாதம் தொடக்கம் நிலுவையுடன் வழங்கப்படுமென பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-9)

## நேர்முகத் தேர்வுக்கு தோற்றாதோருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3

பட்டதாரி பயிலுநர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு, நேர்முகத் தேர்வுக்கு தோற்றாதவர்களை யாழ். மாவட்ட செயலகத்துக்கு நாளை புதன்கிழமை வருகை தருமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் வேலையற்ற பட்டதாரிகளை அரச சேவையில் ஈர்க்கும் முகமாக பட்டதாரிப் பயிலுநர் நேர்முகத் தேர்வுகள் நடைபெற்றன.

யாழ். மாவட்டத்திலும் கடந்த மாதம் 5 ஆம், 6 ஆம், 7 ஆம் திகதிகளில் இந்த நேர்முகத் தேர்வுகள் நடந்து முடிந்தன.

பட்டதாரி பயிலுநர் நேர்முகத் தேர்வுக்கு விண்ணப்பித்து, அரச அதிபரால் நேர்முகத் தேர்வுக்கு வருமாறு கடிதம் அனுப்பப்பட்டவர்களில், நேர்முகத் தேர்வுக்கு வருகை தராதவர்களையே நாளை நேர்முகத் தேர்வுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் நேர்முகத் தேர்வுக்கு வருகை தராமைக்குரிய காரணங்கள் ஆராயப்பட்டு விவரங்கள் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டு அமைச்சினூடாக மேற்கொண்டு என்ன செய்வதென்பது தீர்மானிக்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்போர் முடிவடைந்து மதப் போர் உருவாகிவிடும் பீதி நிலையில் நாம்

## அச்சம் வெளியிடுகிறார் மன்னார் சர்வமதப் பேரவைத் தலைவர்

மன்னார், ஜூலை 3

இனப்போர் முடிவடைந்து மீண்டும் ஒரு மதப்போர் இந்த மண்ணில் உருவாகி விடுமோ என்று அஞ்சுமளவுக்கு இன்று நிலைமைகள் மோசமாக மாறிக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு அச்சம் வெளியிட்டுள்ளார் மன்னார் சர்வ மதப் பேரவையின் தலைவரும் சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குநருமான தமிழ்நேசன் அடிகளார்.

கிழக்கு மாகாணச் சர்வ மதப் பேரவையினர் மன்னாருக்கு வந்திருந்தபோது அவர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இந்த அச்சத்தை வெளியிட்டுள்ளார்.

மிகவும் கொடுமையான ஓர் இனப்போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில் நாம் நிம்மதிப் பெருமூச்சுவிடுகின்றோம். ஆனால் இனப்போர் முடிந்து மீண்டும் ஒரு மதப்போர் இந்த மண்ணில் உருவாகி விடுமோ என்று அச்சம் கொள்ளும் அளவுக்கு இன்று நிலைமைகள் விரைவாக மாறிக்கொண்டிருக்கின்றன.

நாட்டின் யாப்பிலே அரசின் ஆதரவும் பாதுகாப்பும் பெற்றுள்ள பெரும்பான்மை மதம் இந்நாட்டில் உள்ள சிறுபான்மை மதங்கள்மீது மேலாண்மை செலுத்துகின்ற நிலைப்பாடு ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதல்ல.

இந்த நிலைமை தொடருமானால் இந்த நாட்டில் மீண்டும் குழப்பமும் பிரச்சினைகளும் ஏற்பட வாய்ப்புண்டு. நல்மனம் கொண்ட அனைத்து மக்களும் இது தொடர்பாக ஆழ்ந்த அக்கறை செலுத்த வேண்டும். சமயத் தலைவர்கள் முதலில் தங்களுக்குள் உறவையும், தொடர்பையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

மதங்களுக்கிடையில், மதவாதிகளுக்கிடையில் புரிந்துணர்வை, நல்லிணக்கத்தை ஏற்படுத்த நாம் எவ்வளவோ செய்யவேண்டி உள்ளது. மத நல்லிணக்கம் என்பது நீண்ட பயணம். அதை உடனடியாக நாம் எட்டிவிட முடியாது. இப்படியான நல்லெண்ண வருகைகள், சந்திப்புக்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

இதன் மூலம் படிப்படியாக நாம் மத நல்லிணக்கத்துக்கான அடித்தளத்தைப்போட முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மன்னாருக்கு வருகை தந்திருந்த கிழக்கு மாகாணக் குழுவினருக்கு மன்னார் பிரதிநிதிகள் நினைவுச் சின்னங்களை வழங்கினர்.

மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மற்றும் குருநாகல் மாவட்டங்களைச் சார்ந்த 35 பேர்கொண்ட சமய மற்றும் சமூகத் தலைவர்கள் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

(க-12)

## அவலங்களையே வாழ்வாகக் கொண்ட கொக்கிளாய், கருநாட்டுக்கேணி மக்கள்

முல்லைத்தீவு, ஜூலை 3

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி மக்கள் மீளக்குடியமர்ந்த நிலையில் பல்வேறு அவலங்களுடன் வாழ்வதை நேரில் காண முடிகின்றது.

இப்போது கூட இவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் எவையும் பூர்த்தி செய்யப்படாமலேயே உள்ளன. இவர்கள் காட்டினுள் வாழ்கின்ற நிலையிலேயே தற்போது உள்ளனர்.

கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி மக்களில் ஒரு சிலரைத் தவிர ஏனையோருக்குத் தற்காலிக வீடுகள் கூட வழங்கப்படாத நிலையே காணப்படுகின்றது.

மருத்துவ வசதி, குடிதண்ணீர் வசதி என்பனவும் போதியளவு இல்லை. இங்குள்ள பாடசாலைகள் இயங்குகின்றபோதிலும் ஆசிரியர்களுக்கான தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையால் அவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில் மிகவும் மோசமாகக் காட்சியளிக்கின்றன. இதனால் சைக்கிளைக் கூட சில இடங்களில் தள்ளிக் கொண்டு தான் செல்ல முடிகின்றது. போரினால் பல்வேறு இடர்களை எதிர்கொண்ட தாம் தற்போது மீளக்குடியமர்ந்த நிலையிலும் பெரும் அவலங்களை எதிர்கொள்வதாக இந்த மக்கள் கண்ணீர் மல்கக் கூறுகின்றனர். (க-500)

## கிளிநொச்சி கிருஷ்ணர் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் ஞாயிறன்று

கிளிநொச்சி, ஜூலை 3

கிளிநொச்சி கிருஷ்ணர் ஆலயத்தில் மகாகும்பாபிஷேக நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.47 முதல் 9.52 வரை இடம்பெறவுள்ளது.

இந்த ஆலயத்தின் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நாளை மறுதினம் புதன்கிழமை காலை கர்மாரம்ப பூசைகள் ஆரம்பமாகிக் கும்பாபிஷேகம் இடம்பெறும் நாள்வரை விசேட பூசைகளும், கிரியைகளும், தேவ பாராயண ஓதலும் சிறப்பாக இடம்பெறவுள்ளன.

பிரதம குருவான சிவஸ்ரீ ஜெக.ஜெகதீஸ்வரக் குருக்கள் உட்பட நாட்டின் பல பாகங்களில் இருந்தும் குருக்கள், சிவாச்சாரியார்கள் பலர் கலந்துகொண்டு கும்பாபிஷேக பூசைகளைச் சிறப்பிக்கவுள்ளனர்.

கும்பாபிஷேகம் இடம்பெறும் நாளுக்கு முதல் நாளான 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.30 முதல் மாலை 6 மணிவரைக்கும் அடியார்களின் எண்ணெய்க் காப்புச்சாத்தல் இடம்பெறவுள்ளது.

இந்த கும்பாபிஷேக நிகழ்வில் மகாதேவா ஆச்சிரமத்தைச் சேர்ந்த சிறிமத் கணேசானந்த சுவாமிகள் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் ஆகியோர் கலந்து கொண்டு ஆசியுரைகளை வழங்கவுள்ளனர்.

கிளிநொச்சியில் மேற்படி கிருஷ்ணர் ஆலயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (க-426)

## கிளிநொச்சி மத்திய கல்லூரியின் மாடிக் கட்டடம் இடிப்பு



கிளிநொச்சி, ஜூலை 3

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று இடிக்கப்பட்டு வருகின்றது.

போரால் சேதமடைந்த இந்தக் கட்டடம் ஏ-9 வீதிக்கருகில் காணப்படுகின்றது. விடுதலைப் புலிகளின் காலத்தில் அப்போதே சேதமடைந்திருந்த இந்தக் கட்டடம் அவர்களால் போர் நினைவுச் சின்னமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தது.

இறுதிப் போரின் பின்னர் இந்தக் கட்டடத்தைப் புனரமைப்பது தொடர்பாக விசேட குழுக்கள் அமைக்கப்பட்டன. இந்தக் கட்டடத்தை அப்படியே இருக்கத்தக்கவாறு புனரமைப்புச் செய்யலாமெனப் பரிந்துரைகள் தெரிவிக்கப்பட்டதாகவும் அப்போது தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சியின் ஏ-9 வீதிக்கருகில் சேதமடைந்த நிலையில் இந்தக் கட்டடம் இருந்தமை சிலரின் கண்களை உறுத்தியதால் மறைப்புக்களும் இடப்பட்டன.

பலரும் இந்தக் கட்டடம் இடிக்கப்படாது இருந்தவாறே புனரமைக்கப்படுமென எதிர்பார்த்தனர். ஆனால் கடந்த வெள்ளியன்று இதன் இடிப்பு வேலைகள் ஆரம்பமாகின. இந்தக் கட்டடத்தின் முன்னைய அத்திபாரத்திலிருந்து புதிய கட்டடம் அமைக்கப்படுமெனவும் சிலர் கூறுகின்றனர். ஆனால் உண்மை நிலையை எவராலும் அறிய முடியவில்லை. எது எப்படியோ மிகவிரைவில் 290 அடி நீளமான இந்த மாடிக் கட்டடம் எழுந்து நிற்க வேண்டும் என்பதே இங்குள்ள அனைவரதும் பெரு விருப்பமாக உள்ளது.

மேலும் இந்தக் கட்டடம் இடிக்கப்படும் வரை இதனுள் வகுப்புக்கள் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (க-405)

## கனகராயன்குளம் புனரமைப்பு

வவுனியா, கனகராயன்குளம் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குளம் 1889 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. போர் நடவடிக்கை காரணமாக இதன் அணைக்கட்டு சேதமடைந்திருந்தது. தற்போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் சுமார் 37 மில்லியன் ரூபா செலவில் ஒருவருட காலத்தினுள் மதகு மற்றும் அணைக்கட்டு என்பன புனரமைக்கப்பட்டுள்ளதுடன் கால்வாயும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. தற்போது சுமார் 314 ஏக்கரில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (க- 12)

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று

வவுனியா, ஜூலை 3

வவுனியா மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று காலை 9 மணியளவில் வவுனியா மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும்.

வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மூன்று தமிழ்ப் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கும் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த உபகரணங்களை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் சம்பந்தப்பட்ட கழகங்களுக்கு வழங்குவார். (க-400)



கிளிநொச்சி வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவின்போது கிளிநொச்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.மதுராநாயகம் மங்கல விளக்கேற்றி வைக்க அருகில் வேரவில் வைத்திய அதிகாரி மருத்துவர் கோ.பன்னீர்ச் செல்வம், முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.கணபதிப்பிள்ளை, பாடசாலை அதிபர் திருமதி ப.சோதிலிங்கம் ஆகியோர் காணப்படுகின்றனர். (127)

## பழைய மாணவர் மூவருக்கு விசுவமடு ம.வியில் பாராட்டு

விசுவமடு மகாவித்தியாலயத்துக்கு பாண்ட் வாத்தியத் தொகுதி, கேட்போர் கூடத் திரைச்சீலை, அறிவித்தல் பலகை ஆகியவற்றை அன்பளிப்புச் செய்த பழைய மாணவர்கள் மூவர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.


மா.ஜெயபாலன் என்பவர் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பாண்ட் வாத்தியத் தொகுதியையும், பூ.பிறேம்நாத் என்பவர் 2 லட்சம் ரூபா பெறுமதியான கேட்போர் கூடத் திரைச்சீலையையும், க.கேதீஸ்வரன் என்பவர் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான அறிவித்தல் பலகையையும் பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 18ஆம் திகதி பாடசாலையில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் பி.பாலகிருஷ்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ம.வரதராஜமூர்த்தி, புதுக்குடியிருப்புக் கோட்டக் கல்வி அதிகாரி திஸ்.பரமேஸ்வரன் ஆகியோர் விருந்தினராகக் கலந்துகொண்டனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கல்பட்டு முகாமிலுள்ள ஈழ அகதிகளை விடுவிக்கக்கோரி பிரிட்டனில் இன்று கவனயீர்ப்பு

செங்கல்பட்டு சிறப்பு முகாமிலுள்ள ஈழ உறவுகளை விடுதலை செய்யக் கோரி பிரிட்டன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை பிரிட்டனில் கவனயீர்ப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.




இதுகுறித்து பிரிட்டன் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை அரசின் இன அழிப்பில் உடைமைகள் , மற்றும் உறவுகளை இழந்து தமது உயிர்களை மட்டும் காவிக் கொண்டு தமிழகத்தில் அகதி தஞ்சம் கோரிய மக்களை பொய்யான குற்றச் சாட்டில் இந்திய அரசு செங்கல்பட்டு சிறப்பு சித்திரவதை முகாமில் அடைத்துள்ளது .

இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு உரிமைகளை மீட்டுத் தருவோம் என்று உறுதி வழங்கும் தமிழக அரசு, அந்த வாழ்வுரிமைகளை முதலில் தனது அரசின் கீழ் உள்ள ஈழத்தமிழ் அகதிகளுக்கு அளிக்க வேண்டும். எனவே, தமிழக அரசு உடனடியாகத் தலையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அகதிகளை முகாமிலிருந்து விடுவிக்க வேண்டும் என்றும் அத்தோடு முகாமிலிருந்து அவர்கள் விடு விக்கப்பட்ட பின்னர் அவர்களுக்குத் தகுந்த வாழ்வாதாரங்களையும் தமிழக அரசு ஏற்படுத்த வேண்டும். இவற்றை வலியுறுத்தி இன்று செவ்வாய்க்கிழமை கவனயீர்ப்பு நிகழ்வு ஒழுங்கு செய் யப்பட்டுள்ளது- என்று அதில் உள்ளது. (வ)

# திட்டமிட்ட திருட்டுக்களால் விவசாயிகள் விசனம்

அச்சுவேலி, ஜூலை 3

திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் திருட்டுக்களால் விவசாயம் கூட செய்ய முடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை பாதுகாப்புத் தரப்பினரின் நடமாட்டம் மற்றும் பாதுகாப்பு அரண்கள் உள்ள சூழ்நிலையில் விவசாய உபகரணங்களைத் திருடிச்செல்பவர்கள் பொருள்களை எவ்வாறு தாம் விரும்பிய இடத்துக்குக் கொண்டு சென்று விடுகின்றனர் என்று சந்தேகம் கொள்கின்றனர்.

விவசாய உபகரணங்களான நீர் இறைக்கும் மோட்டர்கள், நிலையாக இணைப்புச்செய்த பெரிய வூல்சிலி ரக நீர் இறைக்கும் இயந்திரங்கள், நீரைக் கிணற்றில் இருந்து எடுப்பதற்குப் பயன்படுத்தும் மற்றும் வெளியேற்றுவதற்குப் பயன்படுத்தும் பித்தளை இணைப்புக்கள், இரும்புக் குழாய்கள் தோட்ட நிலங்களில் கட்டிப் பராமரிக்கப்படும் மாடுகள், ஆடுகள் உழவுக்குப் பயன் படுத்தும் காளை மாடுகள் என்பன திட்டமிட்ட முறை யில் இரவு வேளையில் திருடிச் செல்லப்படுகின்றன.

பகல் வேளையில் சாதாரணமாக நடமாடும் திருடர்கள் குறித்த பொருள்கள் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள் மற்றும் இணைப்புச் செய் யப்பட்டிருக்கும் இடங்களை அவதானித்த பின்னர் இரவு வேளையில் சென்று தேவையான பொருள்களை, உபகரணங்களை வெட்டி வாகனங்களில் எடுத்துச் சென்று விடுகின்றனர். காலையில் தோட்டங்களுக்குச் செல்லும் விவசாயிகள் விவசாய உபகரணங்கள் திருடப்பட்டிருப்பதை அடுத்து விவசாயப் பயிர்களுக்கு நீர் இறைக்க முடியாமலும் தொடர்ந்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமலும் ஏமாற்றத்துடன் வீடு திரும்புகின்றனர்.

குட்டியப்புலம், ஈவினை, அச்சுவேலி, பத்தமேனி, நவக்கிரி, தோப்பு, உள்ளிட்ட பல பிரதேசங்களிலும் நாளாந்தம் இந்த வகையான திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தவகையில் காளை மாடுகள், ஆடுகள் முதலியனவும் திருடப்படுகின்றன.

குடாநாட்டின் விவசாய முயற்சியைத் திட்டமிட்ட முறையில் பின்னடை வுக்கு உள்ளாக்கும் வகையில் விவசாய உபகரணங்கள் கால்நடைகள் இரவு வேளையில் திருடப்படுகின்றன எனவும் இவற்றை பொருத்தமான முறையில் தடுத்து நிறுத்தாவிடில் குறித்த பிரதேசங்களில் விவசாய முயற்சிகளை முன் னெடுக்க முடியாத அபாய நிலை ஏற்படும் எனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (வ-11)

## விவசாய பீடத்தின் பீடாதிபதியாக மிகுந்தன்

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ். பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதியாக பேராசிரியர் கு.மிகுந்தன் நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை பீடாதிபதிகள் தெரிவு இடம்பெறுகிறது. கடந்த முறை தெரிவில் பேராசிரியர் கு.மிகுந்தன் மற்றும் கலாநிதி திருமதி சிவமதி சிவச்சந்திரன் ஆகிய இருவரும் சம வாக்கு அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டனர்.


அதனால் தெரிவு மூலமாக இருவரும் தலா ஒன்றரை வருடங்கள் பீடாதிபதியாக நியமிக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி கலாநிதி சிவமதி சிவச்சந்திரனின் பதவிக் காலம் நிறைவடைந்ததை அடுத்து பேராசிரியர் கு.மிகுந்தன் நேற்று பீடாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்டார். (ஒ-4)

# சுவிஸ் வங்கியில் 8 கோடி பிராங் இலங்கையரின் நிதி

இலங்கையர்களால் கடந்த வருடத்தில், சுவிற்ஸர்லாந்து வங்கியில் 8 கோடியே 50 லட்சம் சுவிஸ் பிராங் வைப்பில் இடப்பட்டுள்ளதாக சுவிற்ஸர்லாந்து மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரகசிய இலக்கங்களுடன் செயற்படும் முறைமையை இந்த வங்கி கொண்டிருப்பதால், உலகளாவிய ரீதியாக வங்கியில் கணக்குகளை ஆரம்பித்துள்ளனர். இதனிடையே, இலங்கையர்களால் கடந்த 10 வருடங்களில் சுவிஸ் வங்கிக் கணக்குகளில் 910 கோடியே 30 லட்சம் சுவிஸ் பிராங்குகளை வைப்பிலிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (வ)

## மரண அறிவித்தல்



### திரு. முத்துத்தம்பி பாஸ்கரதேவன்
### ( இளைப்பாறிய அதிபர் )

கந்தரோடையை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகவும், கொழும்பினை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திரு. முத்துத்தம்பி பாஸ்கரதேவன் (இளைப்பாறிய அதிபர்) 25.06.2012 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் க.சி (கந்தப்பர் சின்னத்தம்பி) முத்துத்தம்பி சின்னத்தங்கச்சி தம்பதிகளின் புதல்வரும், திரு திருமதி. பொன்னம்பலம் திலகம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற ரதிமலரின் அன்பு கணவரும், வசந்தி (லண்டன்), விமலா (கனடா), வனஜா (அவுஸ்திரேலியா), வனிதா (கனடா), கணராஜன் (ராஜன்) அவர்களின் பாசமிகு தந்தையும், ஞானசேகரம் (லண்டன்), முத்தார் (கனடா), ஸ்ரீ நந்தகுமார் (அவுஸ்திரேலியா), ஸ்ரீ ரங்கன் (கனடா), சியாமளா ஆகியோரின் மாமனாரும் பிரணவானந், வேணுகோபால், சபீர், அருண்சங்கர், அனோஜ், நிரோசினி, தக்ஷா, நிபுணாஷ் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், ஞானதேவி, சீத்தாதேவி, ஜெயதேவி, காலஞ்சென்றவர்களான கங்காதேவி, கருணாகரன் அவர்களின் அன்புச் சகோதரரும், துளசிங்கம், நாகலிங்கம், கனகாம்பிகை, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சங்கரப்பிள்ளை, வசந்தாதேவி ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரது பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் புதன்கிழமை 04/07/2012 காலை 8.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மு.ப 10.00 மணியளவில் ஈமைக்கிரியைகள் இடம்பெற்று நண்பகல் 12.00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்றுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : பா. கணராஜன் (மகன்) - வெள்ளவத்தை.
தொலைபேசி : 0713220225

## நல்லூர் பிரதேச சபை
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2012

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேசசபையினால் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 04.07.2012 தொடக்கம் 16.07.2012 பி.ப. 4.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி :17.07.2012 மு.ப. 10.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி : 17.07.2012 மு.ப. 10.30 மணிக்கு) (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தை சமர்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை தலைவர்/செயலாளர், நல்லூர் பிரதேசசபை கருவப்புலம் வீதி, கொக்குவில் என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியிலோ இடவேண்டும். மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (VAT, NBT) நீங்கலாக | இருக்க வேண்டிய ஆகக்குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01 | எமது சபையின் கடைகள் புனரமைத்தல் (கோண்டாவில்) | 3000.00 | 500.00 | M10/C10 |
| 02 | திருநெல்வேலி வாழைக்குலைச்சந்தை மதில் அமைத்தல். | 3600.00 | 500.00 | M10/C10 |

நல்லூர் பிரதேசசபை கொக்குவில். திரு.ப.வசந்தகுமார். தவிசாளர்

(C/1203)(6-8)

## தேசிய கல்வியியற் கல்லூரி விசேட கல்வி நூற்றாண்டையொட்டி போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விசேட கல்வி நூற்றாண்டை முன்னிட்டு வடமாகாணத்துக்கு உட்பட்ட மாணவர்கள், ஆசிரியர்களிடமிருந்து "விசேட தேவைக்குட்பட்டவர்களை கல்வியினால் வலுவூட்டுவோம்" எனும் தலைப்பில் சித்திரப் போட்டி, இறுவட்டு தயாரித்தல் போட்டி ஆகியவற்றுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

சித்திரப் போட்டிக்கு "உட்படுத்தற் கல்வி வகுப்பறை, "விசேட தேவையுடைய மாணவர்களின் சாதனைகள்" "எல்லோருக்கும் கல்வி" எனும் தலைப்புகளில் ஆரம்பப் பிரிவில் தரம் ஒன்று முதல் தரம்-5 வரையான மாணவர்களும், இடைநிலைப் பிரிவில் தரம் 6 முதல் தரம் 11 வரையான மாணவர்களும், மேல் பிரிவில் க.பொ. த. உயர்தர மாணவர்களும் பங்குபற்றலாம்.

இறுவட்டு தயாரித்தல் போட்டியில் சகல பாடத்துறை ஆசிரியர்களும் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலை மேம்படுத்தத்தக்க வகையில் ஆக்கத்தை அனுப்பலாம்.

கற்பித்தல் சாதன உருவாக்கப் போட்டிக்கு விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கக் கூடிய கற்றல் கற்பித்தல் சாதனங்களை போட்டிக்கு அனுப்பலாம்.

ஆர்வமுடையவர்கள் ஆக்கங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக யோகநாதன் பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி என்னும் முகவரிக்கு தபாலிலோ நேரிலோ அனுப்பிவைக்கலாம். (வ-14)

## வீதி திருத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 03

இருபாலை டச்வீதியை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த பலவருடங்களாக பெரும் சேதமடைந்துள்ள இந்த வீதியை அகலித்து புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

மக்கள் போக்குவரத்துச் செய்வதற்குப் பெரும் சிரமப்பட்டு வந்த இந்த வீதியில் புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் இலட்சுமணன்

(ஓய்வு பெற்ற இலங்கை போக்குவரத்து சபை சாரதி)

பலாலியைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் இலட்சுமணன் நேற்றுமுன்தினம் (01.07.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- சின்னக்குட்டி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம்- மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், ஈஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற துரைசிங்கம், மற்றும் இராபுஸ்பம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சத்தியபாமா, பிறேமாவதி, ஜெகதீஸ்வரன் (உருத்திரன்), சகுந்தலா ஆகியோரின் தந்தையும், விக்னேஸ்வரன், ஆனந்த மோகன், தாட்சாயினி, சஜிந்தன் ஆகியோரின் மாமனும், வியாசகன், விதுர்ணன், வைஸ்னவன், சாம்பவி, சாரங்கா, சகானா, கரிகாலன், செந்தாழன், அஹாஸ்ஜி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.07.2012) புதன்கிழமை நண்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7ஆம் கட்டை,
கோயில் வீதி,
மல்லாகம்.

தகவல்
சஜிந்தன்-சகுந்தலா

(20020) (3)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 3

வடமாகாணத்தில் குறைந்து செல்லும் மக்கள் தொகையும் அதன் பாதிப்புக்களும் என்ற தொனிப்பொருளிலான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு பிறவுண் வீதியிலுள்ள 'ரேஷன் பொப்புலர்' நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் ஆர்வலர்களை பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (16)

## இதயம் நிறைந்து வாழ்த்துகின்றோம்

உயர் திரு. இராஜரத்தினம் சிவபுண்ணியம்



கொழும்பு தேசிய சமாதான சங்கத்தின் அனுசரணையில் 22.05.2012 அன்று நடத்தப்பட்ட சமய சமூக சேவையாளர்களுக்கான கௌரவிப்பின் போது சிறந்த சமய சமூக சேவையாளருக்கான விருதினைப் பெற்றுக்கொண்ட ஓய்வுநிலை உதவி அரசாங்க அதிபரும், சமூக சேவையாளருமாகிய உயர் திரு இராஜரத்தினம் சிவபுண்ணியம் அவர்களை இதயத்தால் வாழ்த்தி மகிழ்வதோடு தொடர்ந்தும் சமூகத்தின் தேவை உணர்ந்து செயலாற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்

அன்புடன் வாழ்த்தும்
சிவஸ்ரீ. வே.தியானந்தராஜக்குருக்கள்
தும்பளை குடும்பம்.

### கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழையுங்கள்

0779086737

GUNAA BEST PC

### தவறிவிட்டது

பச்சு ரோட், சங்குவேலியைச் சேர்ந்த மதிவதனன் பிரதீபன் என்பவரு டைய தேசிய அடையாள அட்டை (912633187 V), சாரதி அனுமதிப்பத்திரம் என்பன (26.06.2012) அன்று உடுவில் மகளிர் கல்லூரிக்கும் மருதனார்மடம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ் கண்ட இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்)

தொடர்பு: 077 1754 661

(20012) (45.6)

### மணல் விற்பனைக்கு

நாகர் கோயில் மணல், கண்டாவளை மணல், பூநகரி பூச்சு மணல் என்பன மிகவும் குறைவான விலையில் உங்கள் இடங்களுக்கு டிப்பர்கள் மூலம் நேரடியாக விநியோகிக்கப்படும்.

தொடர்பு 0771988980, 0774735228 (20018) (3)

### விற்பனைக்கு

ISUZU 350 ரக கன்டர் வாகனம் இல LB XXXX விற்பனைக்கு உள்ளது.


தொடர்பு-0717942643, 0779155420

(20016) (6.3)

# மரண அறிவித்தல்

## செல்லையா இலகுப்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர்- புங்குடுதீவு சேர் துரைச்சாமி வித்தியாலயம், திருநாவுக்கரசு வித்தியாலயம்)



புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா இலகுப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்) கடந்த (30.06.2012) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-நாகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற நாகநாத பிள்ளை - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இலகுபிள்ளை நாகம்மா (புங்குடுதீவு 8ம் வட்டாரம்) அவர்களின் பாசமிகு கணவரும் கணேசமூர்த்தி (பஹரைன்), திருக்கேதீஸ்வரமூர்த்தி (கனடா), கோணேஸ்வரமூர்த்தி (லண்டன்), லோகேஸ்வரி (லண்டன்), உதயமூர்த்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற பொன்னாச்சிப்பிள்ளை மற்றும் செல்லம்மா காலஞ்சென்ற வேதநாயகம் மற்றும் ஆறுமுகம், இராமலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரரும், நாகேஸ்வரி, காலஞ்சென்ற இராசம்மா, மற்றும் இரஞ்சனாதேவி, நாகம்மா, நிர்மலா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சபாரெட்ணம், சேதுராமன் ஆகியோரின் அன்புச்சகலனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை சதாசிவம் மற்றும் பரமேஸ்வரி, சரோஜினிதேவி, ஆதிநாயகி காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் தங்கலெட்சுமி காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் சேனாதிராஜா, ஜெகதீசன், இரத்தினபூபதி, பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் நகுலேஸ்வரி, சிவகுமாரி, கேமலதா, ராஜநந்தன், விஜிதா ஆகியோரின் அன்பு மாமனும் சிவகாயினி, சிவசர்மினி, அருண், மதுசாந்த், அஸ்வினி, தனுசன், அர்ச்சனா, அபிராம், லக்சிகா, டிருசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தினர்

(சி/1204) (15)

### தேவை

நிறுவனம் ஒன்றுக்கு கணக்கியல் பயிலுனர்கள் (A/L Commerce) மற்றும் சாரதி தெரிந்த உதவியாளர் ஆண்/பெண் தேவை.

T.P:- 077 9530496 / 021 2222478

(சி/1144) (15)

### தவறிவிட்டது

முருகேசு நாகபாலா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (681100644V) 26.06.2012 செவ்வாய்க்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- 0771982207

### தியாகி அறக்கொடை நிலையம் முன்பாக யாழ்கோவின் புதிய பால்பொருள்கள் விற்பனை நிலையம்

இல.527, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிலைய வளாகத்தில் 'யாழ்கோவின்' அடுத்த புதிய பால் பொருள்கள் விற்பனை நிலையம் 02.07.2012ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது என்பதை எமது அங்கத்தவர்கள், வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

(சி/1143)(5-6)

### காணியும் வீடும் விற்பனைக்குண்டு

அச்சுவேலி பேருந்து நிலையத்தில் இருந்து ½ Km தூரத்தில் பத்தமேனியில், சூசையப்பர் முன் ஒழுங்கையில் அமைந்துள்ள நில.பர 02ம் குளி 6.65ம் கொண்ட காணியும் அதற்குள் அமைந்துள்ள 07 அறை (ஏழு), 02 போட்டிக்கோவுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 3175585 / 077 2306425 (20013) (6.3)

# முக்கிய அறிவித்தல்

இன்று (2012.07.03) செவ்வாய்க்கிழமை பி.ப 2.30 மணிக்கு நடைபெற இருந்த எமது உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 2012.07.07 ஆந் திகதி சனிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

அதிபர்

(18679) (15)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரையொதுங்கிய மீன்பிடிப் படகு

யாழ்ப்பாணம், ஜூலை 3

கொழும்புத்துறை, உதயபுரம் கடற்கரைப் பகுதியில் மீன்பிடிப் படகு ஒன்று கடந்த வாரம் கரை ஒதுங்கியுள்ளது.

பூநகரி வலைப்பாடு கடற்பகுதியில் நங்கூரமிட்டிருந்த இந்தப் படகு தற்போது வீசும் கடும் காற்றுக் காரணமாக நங்கூரம் கழன்றமையால் கடலில் அடித்துச் செல்லப்பட்டது.

இந்தப் படகு பின்னர் கொழும்புத்துறைக் கடற்கரையில் ஒதுங்கியுள்ளது.

கரையொதுங்கிய இந்தப் படகை யாழ்.கடற்றொழில் பரிசோதகர் ரமேஷ்கண்ணா பொறுப்பேற்று மீன்பிடிப் படகின் உரிமையாளரிடம் கையளித்தார். (த-17)

# எழுதுமட்டுவாழ் வடக்கில் தும்பு உற்பத்தி நிலையம்

## 20 லட்சம் ரூபா செலவில் அமையவுள்ளது

யாழ்ப்பாணம், ஜூலை 3

தென்மராட்சி கிழக்கு எழுதுமட்டுவாழ் வடக்குப் பிரிவில் தும்பு உற்பத்தி நிலையம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்ட மகளிர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க ஐ.ஓ.எம் நிறுவனத்தினர் 20 லட்சம் ரூபா செலவில் தும்பு உற்பத்தி நிலையக் கட்டடத்தை அமைக்கவுள்ளனர்.

**இதில் ஆறு பகுதிகளைச் சேர்ந்த 75 பயிலுனர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர்.**

இந்தத் தும்பு உற்பத்தி நிலையத்தில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டம், ஒட்டுவெளி, கல்யாணக்குளம், மருதங்குளம், உப்புவில், களிக்கரை ஆகிய 6 பகுதிகளைச் சேர்ந்த 75 பயிலுனர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்திரேலியா குடியேற்றம் மற்றும் குடியுரிமைத் திணைக்களத்தினரின் இடம்பெயர்ந்தோருக்கான நிகழ்ச்சித் திட்ட அனுசரணையுடன் தும்பு உற்பத்தி நிலையம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## மானிப்பாய் பிரதேச சபை காணியில் குடியிருப்போர் வேறு இடத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 3

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகம் அமைக்கப்பட்டு வரும் காணியில் குடியிருக்கும் ஐந்து குடும்பங்களும் வேறு இடத்தில் குடியமர்த்தப்படவுள்ளன.

இதற்கான சகல ஒழுங்குகளையும் பிரதேச சபை உறுப்பினர்கள் துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர்.

**இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ள பிரதேச சபை நிர்வாகத்தினர் இது சம்பந்தமாக குடியிருப்பாளர்களுடன் கலந்துரையாடி வருகின்றனர்.**

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகம் அமைப்பதற்கு மானிப்பாய் எரிபொருள் நிலையத்துக்கு பின்புற மாகவுள்ள யாழ்.சிவன் கோயிலுக்குச் சொந்தமான காணி, பொது மக்களின் நிதியுதவியுடன் சபையால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது இந்தக் காணியில் மாடிக் கட்டடம் ஆரம்பிக்கப்பட்டுத் துரிதமாக வேலைகள் இடம்பெற்று வருகின்றன. கட்டடத்துக்குப் பின்புறமாகவுள்ள சபைக்குச் சொந்தமான காணியில் குடியிருக்கும் ஐந்து குடும்பங்களால் கட்டட விஸ்தரிப்புக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதால் இந்தக் குடும்பங்களை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டிய அவசியம் சபைக்கு ஏற்பட்டுள்ளது.

கட்டுடைப் பகுதியிலுள்ள சபைக்குச் சொந்தமான காணியில் ஐந்து குடும்பங்களையும் குடியமர்த்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ள பிரதேச சபை நிர்வாகத்தினர் இது சம்பந்தமாக குடியிருப்பாளர்களுடன் கலந்துரையாடி வருகின்றனர்.

தலைவர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் இது பற்றி ஆராயப்பட்டு இதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-115)

## புகை கக்கும் பஸ்கள்

தென்மராட்சி, ஜூலை 3

புகை கக்கிச் செல்லும் பஸ்களால் வீதியில் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சாவகச்சேரியிலிருந்து சரசாலை ஊடாகப் பருத்தித்துறைக்குச் செல்லும் பஸ்களே பெரும்பாலும் புகை கக்கிய வண்ணம் செல்வதாகவும், இந்த வாகனத்துக்குப் பின்னால் செல்லும் வாகனங்கள் 100 மீற்றர் தூரம் வரை புகை மண்டலத்துக்குள் அகப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறான நிலைமையால் விபத்துகள் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளதாகவும் விசனம் கூறப்படுகிறது. (ம-9)



நவாலி அட்டகிரி கந்தசுவாமி கோயிலின் தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்ற போது தேர் வீதி உலா வருவதைப் படத்தில் காணலாம். (ம-100)

## வாழைப்பழத்துக்கு கிராக்கி

யாழ்ப்பாணம், ஜூலை 3

குடாநாட்டுச் சந்தைகளில் வாழைப்பழத்துக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

திருநெல்வேலி, மருதனார் மடம், சுன்னாகம் சந்தைகளில் நேற்றும் நேற்று முன்தினமும் கடும் பற்றாக்குறை ஏற்பட்டதுடன் விலையும் அதிகரித்துக் காணப்பட்டது.

அத்துடன் நீர்வேலி வாழைக்குலை விற்பனை நிலையத்திலும் வாழைப் பழத்துக்குப் பெரும் கிராக்கி நிலவியது.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் உட்படப் பெரும்பாலான ஆலயங்களில் நேற்றுத் தேர்த் திருவிழாக்கள் இடம்பெற்றன.

இதன் காரணமாகவே வாழைப்பழத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதுடன் விலையும் அதிகரித்துக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

# மானிப்பாய் திறந்தவெளி அரங்கு நவீன வசதிகளுடன் புனரமைப்பு

## பிரதேச சபை மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம்

வலி.தென்மேற்கு, ஜூலை 3

மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள திறந்தவெளி அரங்கு பொது நிறுவனங்களின் நிதியுதவியுடன் காலத்திற்கேற்றவாறு நவீன முறையில் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான தீர்மானம் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் மிகப் பெரிய விளையாட்டரங்காக விளங்கும் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் பல விளையாட்டுக் கழகங்களின் விளையாட்டுப் போட்டிகளும், அங்குள்ள கலையரங்கில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

மைதானம் ஊடாக கனக சபை வீதி செல்வதால் இந்த மைதானம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மைதானத்தை ஊடறுத்துச் செல்லும் இந்த வீதியை வேறொரு பக்கமாக மாற்றி, பிரிந்திருக்கும் இரு மைதானங்களையும் இணைப்பது பற்றிப் பிரதேச சபை ஆலோசித்து வருகின்றது.

இந்த அரங்கில் கடந்த காலங்களில் கலை நிகழ்வுகள் இடம்பெற்று வந்தபோதிலும் தற்பொழுது இந்த அரங்கு பயன்படுத் தப்படாமல் இருப்பதால் கால்நடைகள் படுத்துறங்கும் இடமாக மாறியுள்ளது.

இந்த நிலை குறித்துக் கவலை தெரிவித்துள்ள இந்தப் பகுதி மக்களும் பொது அமைப்பினரும் இந்த அரங்கை மக்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் அபிவிருத்தி செய்யுமாறு பிரதேச சபையிடம் கோரியிருந்தனர்.

மக்களின் கோரிக்கையைத் தொடர்ந்து இந்த அரங்கை சகல வசதிகளுடன் நவீனமான முறையில் புனரமைப்பதற்கான ஒழுங்குகளை பிரதேச சபை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-115)

## குழு மோதலில் வாள்வெட்டு; ஒருவர் படுகாயம்

வலி. வடக்கு, ஜூலை 3

கொக்குவில் மேற்கில் திருமண வீடு ஒன்றில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் வாளால் வெட்டிப் படுகாயப்படுத்திய நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒருவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீட்டினுள் திடீரெனப் புகுந்த குழுவினர் அங்கிருந்தோரை வெட்டிக் காயப்படுத்தியதாகக் கூறப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-86)

## 21 வயதுக்கு குறைந்தோருக்கு புகைபொருள் விற்றதால் அபராதம்

தென்மராட்சி, ஜூலை 3

தென்மராட்சிப் பிரதேசத்தில் 21 வயதுக்கு குறைந்தவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்த 12 வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 26 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தால் நடத்தப்பட்ட திடீர் சோதனைகளின் போது 21 வயதுக்கு குறைந்தவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருள் கள் விற்பனை செய்த நபர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 7 வர்த்தகர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபாவும், 5 வர்த்தகர்களுக்கு தலா ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது.

இதேவேளை மது போதையில் வாகனம் செலுத்தியதாக மூவருக்கு எதிராக பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த நீதிவான் மூவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார். (ம-9)

## ஐ.ஓ.எம். நிதியில் உவர்நீர் தடுப்பு அணை

தென்மராட்சி, ஜூலை 3

தென்மராட்சி தெற்கு தனங்கிளப்பு தொடக்கம் மறவன்புலோ வரையான பகுதிக்கு உவர்நீர் தடுப்பு அணை அமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியிருப்புப் பகுதிக்குள் மழைகாலங்களில் உவர் நீர் உட்புகுவதைத் தடுக்கும் நோக்குடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

ஐ.ஓ.எம். நிறுவனம் இதற்கான நிதி உதவியைச் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## தனிச் சிங்களத்தில் கடிதங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும் சில பொலிஸ் நிலையங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள அரச திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கும் கடிதங்கள் தனிச் சிங்களத்தில் மட்டும் உள்ளதால் திணைக்கள அதிகாரிகள் விசனமடைந்துள்ளனர்.

இந்தக் கடிதங்களுக்கான தமிழ் அல்லது ஆங்கில மொழிபெயர்ப்புகள் இணைக்கப்படாமையால் இவ்வாறு கிடைக்கும் கடிதங்களுக்கான பதிலை உடன் தயாரிக்க முடியாமலிருப்பதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## ஓட்டோ குடைசாய்ந்து நான்கு பேர் படுகாயம்

வலி. வடக்கு, ஜூலை 3

கொக்குவில் ஆடிய பாதம் வீதியில் ஓட்டோ குடைசாய்ந்ததில் ஓட்டோவில் வந்த நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கொக்குவில் கிழக்கு ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள [illegible] இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## பனம் பொருள் விற்பனை நிலையம் கைதடியில்

யாழ்ப்பாணம், ஜூலை 3

கைதடியில் உள்ள பனை ஆராய்ச்சி நிலையக் கட்டடத்துக்கு முன்பாகப் பனைசார் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கான விற்பனை நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வசதி கருதியும் மற்றும் நுகர்வோரின் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலும் இந்த விற்பனை நிலையத்தை இந்தப் பகுதியில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

பனை அபிவிருத்திச் சபையின் கற்பகம் போன்று இந்த விற்பனை நிலையத்தையும் நவீன வசதிகளுடன் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் மேலும் கூறின. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்மோகன் - ராஜா சந்திப்பு விவரங்கள் இல்லையாம்

## பிரதமர் அலுவலகம் தகவல்

டில்லி, ஜூலை 3

'இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் மத்திய தொலைத் தொடர்புத்துறை முன்னாள் அமைச்சர் ராஜாவுக்கு இடையே நிகழ்ந்த சந்திப்புகள் குறித்த விவரங்கள் தங்களிடம் இல்லை' என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.





பிரதமர் மன்மோகன் சிங்கும், அமைச்சராக இருந்த ராஜாவும், 2007 ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதல் 2008 ஆம் ஆண்டு ஜூலை வரை, '2ஜி' விவகாரம் தொடர்பாக எத்தனை முறை சந்தித்துப் பேசியுள்ளனர். அது குறித்த விவரங்களைத் தர வேண்டும் என்று பிரதமர் அலுவலகத்திடம், தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ், தீபக் சலூஜா என்பவர் கோரி யிருந்தார். இந்த மனுவை தொலைத் தொடர்புத்துறைக்கு, பிரதமர் அலுவலகம் அனுப்பி வைத்தது.

ஆனால், பிரதமர் அலுவலகம்தான், இதற்கு பதிலளிக்க வேண்டும் என்று தொலைத்தொடர்புத் துறை திருப்பி அனுப்பியது. இதையடுத்து, இதுகுறித்த விவரங்களை வழங்குமாறு சிறப்பு பாதுகாப்புப் படைக்கு, பிரதமர் அலுவலகம் மனுவை அனுப்பி வைத்தது.

ஆனால், தகவல் உரிமைச் சட்டத்தில் தங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், இதுகுறித்த விவரங்களைத் தர முடியாது என்று சிறப்பு பாதுகாப்புப் படையினர் (எஸ்.பி.ஜி.,) தெரிவித்து விட்டனர். மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான விவரங்களைத் தவிர, வேறு எந்த விவரங்களையும் தங்களால் தர முடியாது என்றும் கூறி விட்டனர்.சிறப்புப் பாதுகாப்புப் படையினரும், தொலைத்தொடர்புத் துறையினரும் விவரங்களைத் தர மறுத்து விட்டதால், 'தேசிய பாதுகாப்பு விவகாரங்களுக்கு, தகவல் உரிமைச் சட்டத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், பிரதமரைச் சந்தித்தவர்கள் தொடர்பான விவரங்களைத் தர இயலாது' என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்தது. (வ)

## அமர்நாத் யாத்திரையில் 19 பேர் சாவு

ஸ்ரீநகர், ஜூலை 3

அமர்நாத் யாத்திரை சென்ற பக்தர்களில் மேலும் 5 பேர் உயிரிழந்தனர். இதனால்அமர்நாத்யாத்திரைசென்றவர்களில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 19 ஆக அதிகரித்துள்ளது.

யாத்திரை பொதுவாக அமைதியாக நடைபெறுவதாகவும், செல்லும் வழியும், திரும்பும் வழியும் நல்ல முறையில் இருப்பதாகவும், பக்தர்கள் பாதுகாப்பாக யாத்திரை செய்வதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## துணை ஜனாதிபதித் தேர்தல் திகதி விரைவில் வெளியீடு

டில்லி, ஜூலை 3

துணை ஜனாதிபதித் தேர்தல் திகதி குறித்து இன்று அல்லது நாளை தேர்தல் ஆணையம் அறிவிக்கும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் ஆரம்பமாகி, வேட்பாளர்களான பிரணாப்பும் சங்மாவும் போட்டியிட்டு நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து ஆதரவு திரட்டி வருகின்றனர்.

தற்போதுள்ள நிலவரத்தின்படி, ஓகஸ்ட் 7, 8 ஆகிய திகதிகளில் துணை ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெறலாம் என்று கூறப்படுகின்றது. (வ)

## கொடைக்கானலில் முகாமிட்டுள்ள நித்திக்கு வெளியே செல்லத் தடை



கொடைக்கானலில் முகாமிட்டுள்ள சுவாமி நித்தியானந்தா, அனுமதி இல்லாமல் வெளியில் எங்கும் செல்லக் கூடாதுஎன்றுபொலிஸார் தடை உத்தரவு பிறப்பித்துள்ளனர்.


கர்நாடக பிடதி ஆச்சிரமத்துக்கு அந்த மாநில அரசு 'சீல்' வைத்ததையடுத்து நித் தியானந்தாவும் அவரது சீடர்களும் தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

அங்கு நித்தியானந்தா ஆச்சிரம் ஒன்று ஆரம்பிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணத்தால் தனது சீடர்களுடன் கொடைக்கானல் வந்துள்ளார் என்ற தகவலும் உள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி வரை கொடைக்கானலில் தங்கி யிருக்கும் நித்தியானந்தாவுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அவரது உதவியாளர்களும் பொலிஸாரும் ஹோட்டலில் பாதுகாவலுக்காக நிறுத்தப்பட்டுள்ளனர். இது தவிர, தங்களின் அனுமதி இல்லாமல் ஹோட்டலை விட்டு வெளியில் எங்கும் செல்லக் கூடாது என்று நித்தியானந்தாவுக்கு பொலிஸார் உத்தரவு பிறப்பித்துள்ளனர். (வ)

## சென்னை அண்ணா நூலகத்தில் திருமண நிகழ்வுகளுக்குத் தடை





சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் திரு மண நிகழ்ச்சிகள் நடத்த சென்னை உயர் நீதிமன்றம் தடை உத்தரவு விதித்துள்ளது. அண்ணா நூலகத்தில் தொடர்ந்து திருமண நிகழ்ச்சிகள் நடப்பதற்கு பல்வேறு தரப்பில் இருந்து எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில் மூத்த சட்டத்தரணி நெல்சன் இதுதொடர்பாக முறைப்பாட்டு மனு ஒன்றை சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அவரது மனுவை ஏற்ற நீதிபதி, இனி இதுபோன்ற திருமண நிகழ்ச்சிகள் நடக்கத் தடை விதித்தார்.

திருமண நிகழ்ச்சி தொடர்பாக வாங்கப்பட்ட முன் பணங்களைச் சம்பந்தப்பட்ட நபரிடம் ஒப்படைக்கவும், நூலக பராமரிப்பு தொடர்ந்து பின்பற்றபடுகிறதா என்பது குறித்து கண்காணித்து அறிக்கை வழங்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (வ)

## கருணை மனுவை பரிசீலிப்பது மிகவும் சிக்கலான விடயம்

### அப்துல் கலாமின் நூலில் தெரிவிப்பு




தூக்குத் தண்டனை பெற்றவர்களின் கருணை மனுக்களைப் பரிசீலிப்பது மிகவும் சிக்கலான விடயம். எந்த ஒரு ஜனாதிபதியுமே இந்தப்பணியை, சந்தோஷமாகச் செய்வதில்லை, என்று முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அப்துல் கலாமின் 'டேர்னிங் பொயின்ட்ஸ்' என்ற புத்தகத்தில் இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களின் கருணை மனுக்களைப் பரிசீலித்து, அதில் முடிவெடுப்பது என்பது, மிகவும் சிரமமான விடயம். இது தொடர்ச்சியாகச் தொடர்ந்து கொண்டிருக்கும் பிரச்சினை. எந்த ஜனாதிபதியுமே, இதை மகிழ்ச்சியுடன் செய்வ தில்லை. குற்றத்தின் தீவிரம், தண்டனை பெற்றவரின் சமுதாயம் மற்றும் நிதி அந்தஸ்து ஆகியவற்றை கருத்தில் கொள்வதுடன், இந்த விவகாரங்களைக் கையாளும் போது, சாதாரண மனிதன் என்ன நினைப்பான் என்பதை எல்லாம் கருத்தில் கொண்டே முடிவெடுக்க வேண்டும்.

பல கருணை மனுக்கள் நிலுவையில் இருப்பதற்கு, இதுவே காரணம். பல கருணை மனுக்கள், ஜனாதிபதி மாளிகையில் பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளன. இவற்றைக் கையாளுவது மிகவும் சிரமம். தனஞ்செய் சட்டர்ஜி என்பவரின் மனுவை பரிசீலித்தபோது அவரது குற்றத்தின் தீவிரம் கருதி அவருக்கு தண்டனை விதிக்கப் பட வேண்டும் என உறுதியாக நினைத்தேன்-என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## ராஜீவ் கொலைக் குற்றவாளிகளின் கருணை மனு மீது சட்டப்படி நடவடிக்கை

### பிரணாப் முகர்ஜி பேட்டி



இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலையாளிகள் கருணை மனு மீது அரசியலமைப்பு சட்டப் படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள பிரணாப் முகர்ஜி, நேற்றுமுன்தினம் சத்திய மூர்த்தி பவனுக்குச் சென்றார். அங்கு அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியாக வந்த பின்னர் எதற்கு முன்னுரிமை கொடுப்பீர்கள்? ராஜீவ் காந்தி கொலையாளிகள் கருணை மனு மீது முடிவு எடுப்பீர்களா? என்று செய்தியாளர்கள் கேட்டபோது;

ஜனாதிபதியின் அதிகாரம் மற்றும் கடமை பற்றி அரசியலமைப்புச் சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பணியாற்றுவேன். கடந்த காலங்களில் இருந்த ஜனாதிபதிகள், சட்டத்துக்கு உட்பட்டு எவ்வாறு செயற்பட்டார்களோ அவ்வாறு நானும் செயற்படுவேன் என்று பதிலளித்தார்.

தமிழகத்தில் சிறிய கட்சிகள் தேர்தலைப் புறக்கணித்துள்ளார். எனவே அந்தக்கட்சிகளிடம் ஆதரவு கேட்பீர்களா? என்று செய்தியாளர்கள் மீண்டும் கேள்வி எழுப்பினர்.

எல்லாக் கட்சிகளிடமும் ஆதரவு கேட்டுள்ளேன். மம்தா பானர்ஜியும் என்னை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளேன்-என்றார். (வ)

## மகனுக்கு கூகுளின் பெயரை சூட்டினார் டில்லி சட்டத்தரணி

டில்லி, ஜூலை 3



டில்லியைச் சேர்ந்த சட்டத்தரணி முனீஸ் சந்தர் ஜோஷி தனது மகனுக்கு கூகுளின் பெயரைச் சூட்டியுள்ளார். உலகின் செல்வாக்குப் பெற்ற இணையத் தளம் மற்றும் தேடுபொறியான கூகுளின் பெயர் பல்வேறு நாடுகளிலும் குழந்தைகளுக்கு சூட்டப்பட்டு வருகிறது.

2005 இல் சுவீடன் நாட்டில் ஒரு தம்பதி தங்கள் குழந்தைக்கு ஓலிவர் கூகுள் கைய் என்று பெயர் சூட்டியிருந்தனர்.

இந்தியாவில் இதற்கு முன் னர் பஞ்சாப் மாநிலம் லூதியானாவைச் சேர்ந்த உமா, தங்கள் குழந்தைக்கு கூகுள் என்று செல்லப்பெயர் சூட்டியிருந்தார். அதற்கு அவர் கூறிய காரணம், வீட்டில் எங்காவது வைத்துவிட்டுத் தேடும் ஒரு பொருளை குழந்தை 5 நிமிடங்களில் கண்டுபிடித்துத் தருகி றது என்பது தான்! அதே காரணத்தை இந்த சட்டத்தரணியும் தெரிவித்தார்.

முன்னர் அமெரிக்காவில் ஜோன் ஸ்மித் என்பவர் தனது மகனுக்கு பெயர் சூட்டியது விநோதமாகப் பேசப்பட்டது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி குறித்த மொழிகள் வரவால், அவர் தனது மகனுக்கு 'ஜோன் ஸ்மித் வெர்ஷன் 2' என்று பெயர் சூட்டியிருந்தார். (வ)

## ஸ்ரீ ஹரிகோட்டாவில் 3 ஆவது செயற்கைக்கோள் ஏவுதளம்

செயற்கைக்கோள்களைச் செலுத்தும் தேவை அதிகரித்துள்ளதால், ஸ்ரீஹரிகோட்டாவில் மூன்றாவது ரொக்கெட் ஏவுதளத்தை அமைக்க, இஸ்ரோ திட்டமிட் டுள்ளது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் (இஸ்ரோ) ரொக் கெட் ஏவுதளம் உள்ளது. இங்கு, மூன்றாவது ரொக்கெட் ஏவுதளத்தை அமைப்பது குறித்து இஸ்ரோ ஆலோசித்து வருகிறது. இதுகுறித்து இஸ்ரோ தலைவர் கே.ராதா கிருஷ்ணன் தெரிவித்ததாவது:-

ஆந்திரா ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள விண்வெளி ஆய்வு நிலையத்தில், மூன்றாவது ரொக்கெட் தளம் அமைக்கப்பட உள்ளது. எதிர்காலத்தில் பல செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்த வேண்டியுள்ளதால், அதைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிகளவில் செயற்கைக்கோள்களைச் செலுத்த இஸ்ரோ மேற்கொள்ளும் முயற்சிக்கு புதிய ரொக்கெட் ஏவுதளம் உதவியாக இருக்கும். அடுத்த 24 மாதங்களில், நமது தகவல் தொடர்பு செயற்கைக் கோள்கள் உட்பட 24 செயற்கைக் கோள்கள் விண்ணில் செலுத்தப்பட உள்ளன. இவற்றில் சில வெளிநாட்டு செயற்கைக் கோள்களாகவும் இருக்கும்.

அடுத்த ஐந்தாண்டுகளில் இது போன்ற 60 செயற்கைக்கோள்கள் ஏவப்பட உள்ளன. புதிதாக அமைக்கப்படும் ஏவுதளத்தில் இருந்து, ஜி.எஸ்.எல்.வி. எம்.கே.-3 என்ற பெரியளவிலான செயற்கைக் கோள்களைச் சுமந்து செல்லப் பயன்படும் ரொக் கெட்டும் ஏவப்படும். அத்துடன் இந்திய தயாரிப்பு விண்கலங்களும் இதிலிருந்து ஏவப்படும்.

அத்துடன் புதிய ரொக்கெட் தயாரிப்புக்கான கட்டமைப்புக் கூடம், அவசர வழி, பாதுகாப்புப் பதுங்கு குழிகள், பொருள்களைக் கையாளும் கருவிகள், அவை தொடர்பான மின்சாரத் திட்டங்கள் எனப் பல புதிய வசதிகளும் ஏவுதளத்தில் இடம்பெறும் -என்றார். (வ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்கிறது அரச வன்முறை

## சிரியாவில் முக்கிய நகரங்களில் 83 பேர் சாவு

பெய்ரூட், ஜூலை 3
சிரியாவில் நடைபெற்ற வெவ்வேறு தாக்குதல்களில் 83 பேர் உயிரிழந்தனர். டூமா நகரில் நூற்றுக்கணக்கான அப்பாவிகள் சிக்கியுள்ளனர்.

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அசாத்துக்கு எதிராக மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அரசை எதிர்த்துக் கிளர்ச்சியாளர்களும் சண்டையிட்டு வருகின்றனர். கிளர்ச்சியை ஒடுக்கும் வகையில் இராணுவம் கடும் தாக்குதலை நடத்தி வருகிறது. இந்த நிலையில், தலைநகர் டமஸ்கஸ்ஸுக்குக் கிழக்கே உள்ள சமால்கா நகரில் கடந்த சனிக்கிழமை இறுதிச் சடங்கு நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க ஏராளமானோர் திரண்டனர். அப்போது சிரிய இராணுவத்தினர் ரொக்கெட் குண்டுகளை வீசித் தாக்கியதில் 30 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என சிரியாவின் மனித உரிமைக் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.



சிரியாவில் ஜனாதிபதி பஷார் அசாத்துக்கு எதிராக மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அரசை எதிர்த்துக் கிளர்ச்சியாளர்களும் சண்டையிட்டு வருகின்றனர்.

இந்தத் தாக்குதல் குறித்த கூடுதல் தகவல்களை அது வெளியிடவில்லை. எனினும், இது தொடர்பான 2 காணொலிக் காட்சிகளை அந்த அமைப்பு ஒளிபரப்பியது. முதலாவது காட்சியில், இறுதி ஊர்வலம் ஒன்றில் ஏராளமானோர் கலந்து கொண்டு, கோஷங்களை எழுப்பியபடியும், கிளர்ச்சிக் கொடிகளை அசைத்தபடியும் செல்கின்றனர். அப்போது குண்டு வீசப்படுவதால் புழுதி மண்டலம் உருவாகிறது. அதே நேரத்தில் படம் பிடிக்கப்பட்டதா? என்பதை உறுதி செய்ய இயலாத இரண்டாவது காட்சியில், புழுதி மயமான சூழலில் மக்கள் சிதறி ஓடுகின்றனர். அதன் பின், தரையில் ஏராளமான உடல்கள் கிடக்கின்றன.

இதனிடையே, டூமா நகரில் நடைபெற்ற தாக்குதலில் 53 பேர் உயிரிழந்தனர். அங்கு நூற்றுக்கணக்கான அப்பாவிகள் தப்பி ஓட முடியாமல் சிக்கியுள்ளனர் எனவும் மனித உரிமைக் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. டூமா நகரில் மருத்துவர்கள் யாரும் இல்லை என்பதால், காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக உடனே மருத்துவக்குழுக்களை அனுப்பி வைக்குமாறு செஞ்சிலுவை மற்றும் செம்பிறை அமைப்புகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

## மெச்சிக்கோவில் தேர்தல்




மெச்சிகோவில் நேற்று முன்தினம் ஜனாதிபதித் தேர்தல் நடந்தது.மெச்சிகோ ஜனாதிபதி பெலிப் கோல்ட்ரனின் பதவிக் காலம் முடிவடைவதால், நேற்று முன்தினம் ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. பி.ஆர்.ஐ., கட்சி சார்பில் மெச்சிகோ மாகாண முன்னாள் ஆளுநர் என்ரிக் பெணாநீட்டோ போட்டியிட்டார்.

பி.ஆர்.டி., கட்சி சார்பில் மெச்சிகோ நகர முன்னாள் மேயர் ஆன்ட்ரஸ் மனுவல் போட்டியிட்டார். ஆளும் தேசிய செயல் கட்சி சார்பில், வர்த்தகரான ஜோஸ்பனா போட்டியிட்டுள்ளார். மெச்சிகோவில் போதை கடத்தும் கும்பலின் அட்டகாசம்அதிகம் உள்ளது. இதைக் கட்டுப்படுத்துவேன், எனத் தற்போதைய ஜனாதிபதி கடந்த தேர்தலின் போது வாக்குறுதி அளித்தார். ஆனால், அவர் பதவி ஏற்றதிலிருந்து இதுவரை 55 ஆயிரம் பேர் போதை கடத்தல் தாக்குதல்களில் உயிரிழந்துள்ளனர்.


ஆனால், இந்தப் போதை கடத்தல் கும்பலை ஒழிப்பேன் என நீட்டோ வாக்குறுதி அளித்துள்ளார். ஆளும் கட்சி சார்பில் போட்டியிடும் ஜோஸ்பனா, ஊழலை ஒழிப்பேன் எனத் தெரிவித்துள்ளார். இதற்கிடையே, மெச்சிகோவில் ஆறு மாகாண ஆளுநர் தேர்தலும் நேற்று முன்தினம் நடந்தது. எட்டு கோடி வாக்காளர்கள் மெச்சிகோவில் உள்ளனர். இவர்களில் எத்தனைபேர் வாக்களித்தனர் என்ற விவரம் தெரியவில்லை.

## அல்.குவைதாவின் தாக்குதல் முயற்சி முறியடிப்பு

அமெரிக்க விமானத்தை, நோர்வேயைச் சேர்ந்தவர் மூலம் தகர்க்க அல்-குவைதா தீவிரவாதிகள் சதித் திட்டம் தீட்டினர் என அமெரிக்கப் புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

அல்.குவைதாத் தலைவர் ஒசாமா பின்லேடனை அமெரிக்க அதிரடிப் படையினர், பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் கடந்த ஆண்டு சுட்டுக் கொன்றனர். இதைத் தொடர்ந்து, அமெரிக்காவை பழி வாங்கும் எண்ணம் அல்-குவைதாவினரிடம் மேலோங்கியுள்ளது.

நோர்வேயைச் சேர்ந்த வெள்ளையரைத் தேர்வு செய்து அவரை முஸ்லிமாக மாற்றி, அவருக்கு அப்துர் ரஹ்மான் என பெயரிட்டு, யேமனில் பல மாதங்கள் தீவிரவாதப் பயிற்சி அளித்துள்ளனர் அல்.குவைதாவினர். அதன்பின், அமெரிக்க ஜெட் விமானத்தை அப்துர் ரஹ்மான் மூலம் தகர்க்க திட்டமிட்டனர். ஆனால், அமெரிக்க அதிகாரிகள் இந்தச் சதி வேலையை முறியடித்து விட்டனர்.



நைஜீரியாவில் சர்வதேச தொண்டு நிறுவனம் ஒன்று வழங்கும் உணவுக்காக காத்திருக்கும் சிறார்கள்.

## உலக வங்கியின் தலைவர் பொறுப்பை ஏற்றார் ஜிம் ஜோங்

உலக வங்கியின் தலைவர் பணியை அமெரிக்க குடியுரிமை பெற்ற தென் கொரிய பிரஜையான ஜிம் ஜோங் கிம் நேற்றுத் தொடக்கம் ஆரம்பித்துள்ளார்.

ரொபேட் சொயலிக்கின் பதவிக் காலம் நிறைவடைந்துள்ள நிலையில், உலக வங்கியின் 12 ஆவது தலைவராக 52 வயதான கிம் நியமிக்கப்பட்டிருந்தார்.

வைத்திய நிபுணரான ஜிம் ஜோங் கிம், கடந்த மார்ச் மாதம் உலக வங்கியின் தலைவர் பதவிக்கென அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தார்.

அமெரிக்காவின் நியூ ஹம்சேயாரிலுள்ள டோர்மவுத் கல்லூரியின் தலைவராகவும் ஜிம் ஜோங் கிம் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

1944 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் பதவியை ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்களே வகித்து வருகின்றனர். அதேபோன்று உலக வங்கியின் தலைவர்களாக இதுவரை அமெரிக்கர்களே செயற்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சீன ஜனாதிபதிக்கு எதிர்ப்பு



ஹொங்கொங் நிர்வாகத் தலைவர் நியமன விழாவில் பங்கேற்ற சீன ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டன் கட்டுப்பாட்டில் இருந்த ஹொங்கொங், குத்தகைக் காலம் முடிந்ததையொட்டி, 1997 ஆம் ஆண்டு, சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது. சீனாவிடம் ஹொங்கொங் ஒப்படைக்கப்பட்ட, 15ஆம் ஆண்டு விழா, நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது.

இதையொட்டி, ஹொங்கொங் நிர்வாகத் தலைவர் நியமனமும் நடந்தது. செல்வந்தரான லியுங் சுன் யிங், ஹொங்கொங் நிர்வாகத் தலைவராகப் பொறுப்பேற்றார். இந்த விழாவில், சீன ஜனாதிபதி ஜிந்தாவோ பங்கேற்றார்.ஜிந்தாவோ உரையாற்றிக் கொண்டிருந்த போது, இந்த விழாவில் பங்கேற்றவர்கள், ''ஹொங்கொங்குக்கு அதிக ஜனநாயக உரிமை அளிக்கப்பட வேண்டும். ஹொங்கொங் உள்விவகாரத்தில், சீனா அதிகம் தலையிடக் கூடாது'' எனக் கோஷமிட்டனர். சீனாவுக்கு எதிராக, சிலர் ஊர்வலமும் நடத்தினர்.

பின் பேசிய ஹொங்கொங் நிர்வாகத் தலைவர் லியுங் குறிப்பிடுகையில், ''எனக்கு அளிக்கப்பட்ட இந்தப் பொறுப்பை, நல்லபடியாக நிறைவேற்றுவேன். நான், ஆளும் சீன கொம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவாக செயல்படுகிறேன் என்ற குற்றச்சாட்டை மறுக்கிறேன்'' என்றார். ஹொங்கொங் நிர்வாகத் தலைவராக இருந்த டொனால்ட் டிசாங், தனது பொறுப்புகளை, லியுங்கிடம் ஒப்படைத்தார்.

## ஈராக்கில் பெண்ணுரிமை இயக்கத்தினர் போராட்டம்

ஈராக்கில் கணவனால் சந்தேகத்திற்குள்ளாகும் பெண்கள், கன்னித் தன்மை பரிசோதனைக்கு ஆளாகின்றனர். இதை, பெண் உரிமை இயக்கத்தினர் எதிர்த்து வருகின்றனர்.

ஈராக்கில், மணமாகும் வரை, ஒரு பெண் கன்னித் தன்மையோடு இருக்க வேண்டும் என்பதில், மணமகன் வீட்டார் உறுதியாக உள்ளனர். கன்னித் தன்மையைப் பரிசோதிக்க, பாக்தாத்தில், பரிசோதனை நிலையங்கள் ரகசியமாக இயங்கி வருகின்றன. இவர்கள், சம்பந்தப்பட்ட பெண்ணின் கன்னித் தன்மையை பரிசோதித்து, அந்த அறிக்கையை, நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கின்றனர். இந்த அறிக்கையின் அடிப்படையில் தான், நீதிமன்றமும் தீர்ப்பளிக்கிறது.

''பெண்ணுக்கு கன்னித்திரை பல்வேறு காரணங்களால் கிழியலாம். அதை வைத்து, அந்தப் பெண்ணின் கற்பை சந்தேகிக்க முடியாது'' என, மருத்துவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். எனவே, கன்னித் தன்மையைப் பரிசோதிக்கும் நடவடிக்கைக்கு, தடை விதிக்க வேண்டும் என, ஈராக்கியப் பெண் உரிமை சங்கத்தினர் போராடி வருகின்றனர்.

## பாகிஸ்தானில் ஆளில்லா விமானத் தாக்குதல்

இஸ்லாமாபாத், ஜூலை 3
பாகிஸ்தானின் பழங்குடி மக்கள் வாழும் வஜிரிஸ்தான் பகுதியில் அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானங்கள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் 8 தீவிரவாதிகள் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப்புற மாகாணமான வஜிரிஸ்தானில் பழங்குடி மக்கள் பெரும்பான்மையாக வசித்து வருகின்றனர். இந்தப் பகுதி அரசின் முழுக் கட்டுப்பாட்டில் இல்லை என்பதால் இங்கு அல்.குவைதா உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகள் சுதந்திரமாகச் செயல்படுகின்றன. இங்கு பதுங்கியுள்ள தீவிரவாதிகளைக் கொல்வதற்காக அமெரிக்கா ஆளில்லா போர் விமானங்கள் மூலம் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது. இவ்வாறு கடந்த ஜூன் 4ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் அல்.குவைதா அமைப்பின் மூத்த தலைவனான அபு யாஹியா அல் லிபி உட்பட 15 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

எனினும், தனது மண்ணில் அமெரிக்கா தாக்குதல் நடத்துவது தன் இறையாண்மையை மீறிய செயல் என்று பாகிஸ்தான் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. ஆளில்லா விமானங்கள் மூலம் நடத்தப்படும் தாக்குதலில் அப்பாவிகள் கொல்லப்படவும், சொத்துக்கள் சேதமடையவும் வாய்ப்புள்ளது என்பதால் மக்களிடையே அமெரிக்க எதிர்ப்பு உணர்வு மேலோங்கும் என்று பாகிஸ்தான் அரசு கூறுகிறது.

எனினும், இதைக் கண்டுகொள்ளாமல் அமெரிக்கா தாக்குதல் நடத்தி வருகிறது. கடந்த ஆண்டு நவம்பரில் அமெரிக்க கூட்டுப் படைகள் நடத்திய தாக்குதலில் பாகிஸ்தானின் 24 இராணுவத்தினர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, கூட்டுப் படைகளுக்கு பொருள்கள் கொண்டு செல்லும் வழிகளைப் பாகிஸ்தான் மூடியது.

இந்த நிலையில், வடக்கு வஜிரிஸ்தானின் முக்கிய நகரான மிரான்ஷாவுக்கு 50 கி.மீ. தூரத்தில் உள்ள ஷவால் பகுதியில் உள்ள ஒரு வீட்டின் மீது அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 2 ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தியது. இதில் அந்த வீடு தரைமட்டமானது.

அதிலிருந்த 8 தீவிரவாதிகளும் உயிரிழந்ததாகத் தொலைக்காட்சி செய்திகள் தெரிவித்துள்ளன. இந்தத் தாக்குதலால் அந்த வீடு தீப்பிடித்து எரிந்தது எனவும், சில தீவிரவாதிகளின் உடல்கள் அடையாளம் காண முடியாத அளவுக்குக் கருகி விட்டது எனவும் அதிகாரிகள் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாலயங்கள் மீது தாக்குதல்

## கென்ய- சோமாலிய எல்லையில் பதற்றம்



லண்டன், ஜூலை 3

கென்யாவில் சோமாலிய எல்லைக்கு அருகிலுள்ள கரிஸ்ஸா நகரிலுள்ள இரு தேவாலயங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல்களில் குறைந்த பட்சம் 10 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

''எங்களில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 40 பேர் காயமடைந்துள்ளனர்'' என்று அந்தப் பிராந்தியப் பிரதிப் பொலிஸ் தலைமை அதிகாரி கூறினார்.

முகத்தை மூடியிருந்த குண்டர்கள், கத்தோலிக்க தேவாலயத்தின் மீதும்; ஆபிரிக்க தேவாலயத்தின் மீதும் கைக்குண்டுகளை வீசியதாகவும் அவர் கூறினார்.

அல் சபாவ் இயக்கத்தினரை ஒடுக்குவதற்கு சோமாலியாவுக்குக் கென்ய துருப்பினர்கள் அனுப்பிவைக்கப் பட்டதைத்; தொடர்ந்து கென்ய எல்லை பதற்றமான நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### தேர்தல் ஆணையக அலுவலகங்கள் மீது நேற்றுத் தாக்குதல்

லிபியாவின் முக்கிய நகரான பெங்காஷியில் உள்ள தேர்தல் ஆணையக அலுவலகங்கள் மீது கூட்டாட்சி அமைப்பு ஆதரவாளர்கள், நேற்று தாக்குதல் நடத்தினர்.

அடுத்தவாரம் தேசிய அளவில் நடைபெற உள்ள வாக்கெடுப்புக்கு எதிராக இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், தேர்தல் ஆணையக அலுவலகங்களில் ஒரு குறிப்பட்ட பிரிவினர் நுழைந்து அலுவலகத்தினுள் உள்ள கட்டடங்களை இடித்து அழித்தனர். தேர்தல் ஆணையக அலுவலக ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை. ஆனால் அதேசமயம் எல்லா பொருள்களையும் அடித்து நொறுக்கி விட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கதவின் கீழ் சிக்கிய ஆசாமி

### 9 மணித்தியாலங்கள் தவிப்பு



நபர் ஒருவர் கதவின் கீழ் சிக்கி 9 மணித்தியாலங்களாகத் தவித்த சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது. மஸாட்ஸ் மாநிலத்திலுள்ள இந்தக்கடையின் கதவை இரும்புக் கம்பியொன்றின் மூலம் திறந்து உட்செல்வதற்கு 53 வயதான குறித்த நபர் முயன்றார். கதவை மேலே உயர்த்தி இரும்புக் கம்பியை முட்டுக்கொடுத்துவிட்டு, உள்ளே புகுவதற்கு அவர் முயன்றுள்ளார்.

ஆனால், இரும்புக் கம்பி நழுவிக்கொண்டதால் கதவு மீண்டும் கீழிறங்கியது. இதனால் அந்த நபரின் தலை மாட்டிக்கொண்டது. நள்ளிரவிலிருந்து 9 மணித்தியாலங்களாகக் கதவில் மாட்டிக்கொண்ட நிலையிலிருந்த மேற்படி நபரை மறுநாள் கடையின் முகாமையாளர் கண்டு, பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார். அதையடுத்து குறித்த சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, மருத்துவ சோதனைக்காக வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

கடையைத் திறப்பதற்காகச் சென்றபோது, கதவின் வெளியே தலையொன்று தென்பட்டதை அவதானித்தேன். அந்த நபர் தான் கதவைப் பழுதுபார்க்க முயன்றதாகக் கூறினார் என குறித்த கடை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

# மொஸ்கோவின் எல்லை இரண்டரை மடங்கால் அதிகரிக்கிறது

மொஸ்கோ, ஜூலை 3

ரஷ்யத் தலைநகரான மொஸ்கோவின் பரப்பளவு கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் சுமார் இரண்டரை மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மொஸ்கோ நகரின் எல்லைகள் தென்மேற்காக 50 கிலோமீற்றர் தூரத்திற்கு நகர்த்தப்பட்டுள்ளன. நகரின் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவதற்கும் வசிப்பிட சூழலை மேம்படுத்துவதற்கும் முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்குமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி திமித்ரி மெத்வதேவினால் முன்மொழியப்பட்ட இந்தத் திட்டம் ஜூலை முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்தத் திட்டத்தின்படி மொஸ்கோ நகரின் பரப்பளவு 1070 சதுர கிலோமீற்றர்களில் இருந்து 2550 சதுர கிலோமீற்றர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனால், பரப்பளவு அடிப்படையில் உலகின் மிகப்பெரிய தலைநகரங்களின் வரிசையில் 34 ஆவது இடத்திலிருந்த மொஸ்கோ, தற்போது 7 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இறுதியாக 50 வருடங்களுக்கு முன்னர் மொஸ்கோ நகரின் எல்லைகள் விஸ்தரிக்கப்பட்டன. அப்போது 6 மில்லியனாக இருந்த நகரின் சனத்தொகை தற்போது 11.6 மில்லியனாக அதிகரித்துள்ளது. ஐரோப்பாவின் சனத்தொகை அடர்த்தி மிகுந்த நகரங்களில் ஒன்றாக மொஸ்கோ இருந்தமை குறிப்பிடத்தக்கது. புதிய விஸ்தரிப்பின் காரணமாக நகரின் பரப்பளவு இரண்டரை மடங்காக அதிகரித்துள்ள போதிலும் 2 லட்சத்து 32 ஆயிரம் பேர் மாத்திரமே அந்த நகரில் புதிதாக இணைந்துள்ளனர்.

இந்தத் திட்டத்தின்கீழ் அரச நிறுவனங்கள் பலவற்றை இடமாற்றுவதற்கும் 2 மில்லியன் மக்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கும் 2020 ஆம் ஆண்டளவில் ஒரு மில்லியன் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## ஆஸ்திரேலியாவில் காபன் வரி அறிமுகம்

ஆஸ்திரேலிய அரசு சர்ச்சைக்குரிய காபன் வரியை அறிமுகப்படுத்தியுள்ளது.பல வருடகால கசப்பான அரசியல் விவாதங்களை அடுத்து இந்த வரித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தாம் வெளியிடும் ஒவ்வொரு தொன் பச்சை வீட்டு வாயுவிற்கும் மோசமான சூழல் மாசை ஏற்படுத்தும் 300 நிறுவனங்கள் 24 அமெரிக்க டொலர்களை வரியாக செலுத்த வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நாட்டின் காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வதற்கு இந்த வரி தேவையான ஒன்றென ஆஸ்திரேலிய அரசு குறிப்பிட்டுள்ளது.

எனினும் இதுவொரு நச்சு வரி எனக் கூறியுள்ள எதிர் கட்சிகள் இதனால் வேலையிழப்புக்கள் ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன் வாழ்வாதாரச் செலவுகள் அதிகரிக்கும் என வாதிட்டுள்ள எதிர்க்கட்சிகள், 2013 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலில் வெற்றிபெற்றால் இதனை நீக்குவதாகவும் உறுதியளித்துள்ளன.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 ★ 07 ★ 1968



மறைவு 14 ★ 07 ★ 2011

அமரர் நல்லதம்பி பாஸ்கரன் (வாசு)

ஓர் ஆண்டு ஆனதுவோ
உன் முகம் கண்டு.
ஆறவில்லை என் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீ
நித்தம் புலம்புகின்றேன்.
உன் திரு முகம் காணாமல்
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றேன்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
ஆயாகடவை.

இராசேந்திரம் மகாலஷ்சுமி
(சகோதரி)

(19839) (5-6)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
10.04.1939

மறைவு
07.07.2009

அமரர் குட்டியன் அப்புத்துரை

(முன்னாள் உரிமையாளர் – ஜெயா கடைச்சல் தொழிற்சாலை, தற்காலிக உரிமையாளர் – எயர்லைன்ஸ் பினான்ஸ் கொம்பனி, வவுனியா)

குடும்பத்தின் குலவிளக்காய், அன்பின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய் – திகழ்ந்த எம் இனிய உறவே!
நீங்கள் மீளாத்துயில் கொண்டு மூன்றாண்டுகள் ஓடி
மறைந்து விட்டதென்று நம்பமுடியவில்லை. எம் மனதின்
சோகம் ஆழ்கடல் போல் இருந்தாலும் நாளும் பொழுதும்
எம் இதயத்தில் அகல்விளக்காய் பிரகாசித்துக் கொண்டு
இருக்கின்றீர்கள். ஆற்றுவார் தேற்றுவார் பலர் இருந்தும்
அனலிடைப்பட்ட புழுவாய்த்துடிக்கும் எங்களுக்கு
உங்களுக்கு ஒப்பாக யாரைத்தான் காணமுடியும்

– அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

214, கண்டி வீதி, வவுனியா. (19905)(2-6)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 18 ★ 09 ★ 1936



விண்ணில் 14 ★ 07 ★ 2011

திருமதி

சபாரட்ணம் அன்னம்மா

திதி : பௌர்ணமி

ஆண்டு ஒன்றல்ல எத்தனை ஆனாலும்
உங்கள் நினைவு என்றும் அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**என்றும் உங்கள் நினைவில்:**

பிள்ளைகள் : சாந்தநாயகி, ஜெயசீலன், ரகுணசீலன் (கனடா)

மருமக்கள் : கணேசபிள்ளை (ஓய்வுபெற்ற பொதுமுகாமையாளர் - C.T.B), சிறிதேவி, பிறேமலதா (கனடா)

பேரப்பிள்ளைகள் : உமாசுதன், சங்கர், முரளி, வாகீசன், திவாகரன், அயந்தன், சுரபி, எழிலரசன் (கனடா), திநாசன் (கனடா)

190/1, அடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, கல்வியங்காடு

ச. ரகுணசீலன் (மகன் - கனடா)


[19807][6-8]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்பு வரும் நேரம்

(17)

சமீபத்தில் ஒரு வல்லுநர் உற்பத்தியாளர்களைப் பற்றி எங்களிடம் கூறினார்; ''ஐரோப்பாவில் பல சிறந்த தொழிற்சாலைகள் உள்ளன. எனினும், அவற்றில் பெரும்பாலான தொழிற்சாலைகள் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள ஆயத்தமின்றி உள்ளன; முன்னேற்றம் தடைப்படுகிறது. ஆனால், அமெரிக்காவில் ஒருவனிடம் ஒரு நல்ல பொருள் இருந்தால், அதன் முழு மதிப்பைப் பெறுவதற்கு வேலை செய்து, உலகம் முழுவதும் தனது பொருளை நிரப்பிவிடுகி றான்."




முன்பகுதி ஒன்றில், இளைஞர்கள் வாழ்வில் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளத் தங்களைத் தயார்படுத்திக் கொள்வதற்காக வியாபாரத்துக்குத் தேவையான பழக்கங்களின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டுக் காட்டியபோது, இந்தத் தகுதிகள் போதுமானவை இல்லை என்று சொன்னேன். ஒருவன் ஜாக்கிரதையானவனாக இருக்கலாம்; சரியானவனாகவும் சுறுசுறுப்புள்ளவனாகவும் இருக்கலாம்; பயனுள்ள மற்ற நல்ல குணங்களைப் பெற்றிருக்கலாம். எனினும் இவை போதுமானவை அல்ல. வியாபாரக் கண்ணோட்டத்தில் போதுமானது எது எனில், அது ''கண்டறியும் திறமை'' - அவன் சுலபமாகப் பெறக்கூடிய வாய்ப்புகள் அவனது வாசலில் இருந்தாலும், அல்லது உலகின் ஓர் ஓரத்தில் இருந்தாலும் அவற்றை உடனே கண்டுகொள்ளும் திறமை. இதைத் தவிர அவசியமானது: ''செயற்படுத்தும் திறமை'' (செயலாற்றல்) இந்த நாட்டின் சிறந்த நகரங்களுக்குள் ஏதாவது ஒரு நகரத்துக்குச் சென்றால், சிறந்த சமுதாயங்களின் வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ள வியாபாரத்தைச் செய்பவர்கள் யாரென விசாரித்துப் பாருங்கள். அவர் தான் கண்ட வாய்ப்பைத் திட்டமிட்டுச் செயல்படுத்தி வெற்றி பெற்றவர் என்பதை எல்லா இடங்களிலும் காண்பீர்கள். மனத் திறமைகளை வளர்த்துக் கொள்வது பற்றி சொல்லப்பட்டுள்ளது எது வாயினும், கண்டறியும் திறமையும் செயல்படும் திறமையும் இயற்கையானவை; பிறப்பிலேயே அமையக் கூடியவை. உலகின் பணிகளைப் புரிவதற்காக, இவற்றைத் தங்களிடம் பெற்றிருப்பவர்கள், மிகச் சிறந்த இயற்கையான ஆற்றல்களைப் பெற்ற மனிதர்கள் ஆவர். ஆனாலும் கூட, மனிதர்களிடையே எந்த நேரத்தில் திறமை வெளிப்படுகிறது என்பதில் வித்தியாசம் உள்ளது. மனிதர் செய்யக் கூடியவற்றிலும் வித்தியாசம் உள்ளது.

இதை மேலும் விளக்குவதற்கு சார்லஸ் கௌல்டு கதையைக் கூறுகிறேன். சில வருடங்களுக்கு முன்பு சார்லஸ் கௌல்டு பஃபல்லோ துறைமுகத்தில் கலெக்டராக இருந்தார். அவர் மிகச் சிறந்த வியாபாரியாக இருந்தார்; ஆனால், பணக்காரராக அல்ல. ஒருநாள், கௌல்டு புதிய ரயில் பெட்டி இணைப்புச் சாதனம் ஒன்றைக் கண்டு பிடித்தவரிடமிருந்த 500 டொலர் விலைக்கு வாங்கினர். அதைக் கண்டுபிடித்தவர், கௌல்டு அதை மார்க்கெட்டில் விற்பனை செய்வதானால், அவரது தொழிற்சாலையில் தன்னை போர்மேனாக நியமிக்க வேண்டுமென்ற நிபந்தனை விதித்தார். வொஷிங்டனில் உள்ள கண்டுபிடிப்பு உரிமம் வழங்கும் அலுவலகம் எழுபத்தைந்து விதமான ரயில் பெட்டி இணைப்புச் சாதனங்களுக்குக் கண்டுபிடிப்பு உரிமம் வழங்கி உள்ளதை கௌல்டு அறிந்திருந்தார். எனினும், இப்போது அவரிடம் கொண்டு வந்துள்ள சாதனத்துக்கு ஏற்கனவே மார்க்கெட்டிற்கு அனுப்பப்பட்டிருந்த அனைத்து சாதனங்களுக்கும் இடையே வித்தியாசம் உள்ளதெனத் தெளிவாகக் கண்டார். அவர் அது ஒரு நல்ல பொருள் எனவும் அதன் உபயோகம் ரயில்வே தொழில் விரிவாக்கத்துக்கு மட்டுமே பயன்படக்கூடியதெனவும் அறிவார். இதைத் தவிர கௌல்டு ஒரு நல்ல பொருளைப் பெற்றிருந்தால் அதன் பெரும்பகுதியை உபயோகப்படுத்திக் கொள்ளும் செயலாற்றல் பெற்றிருந்தார்.

கௌல்டு அதைக் கண்டுபிடித்தவருக்குப் பணத்தைக் கொடுத்தார். மேலும், ஒரு தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டால் அவருக்குப் பதவி கொடுப்பதாகவும் எழுதிக் கொடுத்தார். இன்று 3,600 பேர் அந்த இணைப்புச் சாதனத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

**கவர்னர் கார்னல்**

ஏறத்தாழ இதைப் போல உள்ள மற்றொரு நிகழ்ச்சியைக் கூறலாம். அது நியூயோர்க்கின் கவர்னர் கார்னல் அமெரிக்கன் டிஸ்ட்ரிக் மெசஞ்ஜர் சர்வீஸ் நிறுவனம் பிரபல வெற்றி அடைந்தவிதம் ஆகும். அந்த நிறுவனம் அளிக்கும் சேவையை நிர்வாகம் செய்து நடத்துபவருக்கு ஏராளமான பணத்தை அள்ளிக் கொடுத்தது. அந்த நிறுவனத்தில் கார்னல் அரைமில்லியன் டொலர்களைச் சம்பாதித்தார். அவர் இந்த மெசஞ்ஜர் சர்வீஸ் கண்டுபிடிப்பை மிகவும் ஏழையான ஒருவரிடமிருந்து 2000 டொலர்கள் விலைக்கு வாங்கினார். கார்னல் இந்த விஷயத்தை மற்றவர்களைப் போல உதாசீனப்படுத்தி இருந்தால், அந்த ஆதரவற்ற கண்டு பிடிப்பாளர், அவரது திட்டத்தில் மக்களுக்கு ஆர்வத்தைத் தூண்டும் முயற்சியைக் கைவிட்டிருக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம். நாம் சொல்வதைப் போல, மற்றவர்கள் காணாததை கார்னல் கண்டார். கார்னல் பெரும் அளவு வியாபாரத்திறமையை அதில் முதலீடு செய்து நடவடிக்கை எடுத்ததைப் போல வேறெவரும் நடவடிக்கை எடுக்கவில்லை.

-ஒரிசன் ஸ்வெட் மார்டன்-

(தொடரும்)

# மாணவத் தலைவர் சக மாணவருக்கு முன்மாதிரியாக நடக்க வேண்டும்

## தேசிய கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் தெரிவிப்பு

**வீட்டிலும், சமூகத்திலும் மேலும் அர்ப்பணிப்புள்ளவர்களாக, சமூக நோக்குடையவர்களாக இருப்பது இன்றைய முக்கிய தேவையாகவுள்ளது**

யாழ்ப்பாணம், ஜூலை 3

மாணவத் தலைமைத்துவம் என்பது பாடசாலையில் உள்ள மாணவர்களையும், தம்மையும் வழி நடத்தி மாணவர்களிடமிருந்து தன்னிச்சையான ஒத்துழைப்பைப் பெற்று, அதனூடாக பாடசாலையின் நோக்கத்தை அடைய முற்படும் ஒரு செயற்பாடாகும் என்று யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா. தனபாலன் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் அதிபர். என். விமலேந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற மாணவர்களுக்கான தலைமைத்துவ வழிகாட்டல் செயலமர்வில் பிரதம வளவாளராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தனபாலன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

எவர் ஒருவர் ஏனையோருக்கு முன்மாதிரியாக நின்று செயற்படுகின்றாரோ அவரால் மேற்கொள்ளப்படும் கருமம் தலைமைத்துவமாக மிளிர்கின்றது. தூய்மையாகவும் சிக்கனமாகவும் செயற்பட்டு தன்னைச் சார்ந்துள்ளவர்கள் மீது நேர்க்கணியமாகச் செல்வாக்கைச் செலுத்தக்கூடிய கருமம் எதுவோ அதுவே தலைமைத்துவமாகும்.

தலைமைத்துவப் பண்புகள் தனிநபர் இயல்புகளிலும், தேர்ச்சிகளிலும் முழுமை பெறும்போது விருத்தியடைகின்றது. சமநிலை, ஆளுமை, தெளிந்த அறிவு, தொடர்பாடல் திறன், பிறருக்காகச் சிந்தித்தல், முயற்சிகளில் முன்னிற்றல், வழிகாட்டல், தான் சார்ந்தோருக்காக இடர்களைத் துணிவுடன் ஏற்றல் போன்ற பல்வேறு திறன்களை மாணவர்கள் வளர்க்கின்றபோது சிறந்த தலைமைத்துவப் பண்புகளைப் பெற முடியும்- என்றார்.

தொடர்ந்து அதிபர் என். விமலேந்திரன் தெரிவித்ததாவது:- பாடசாலைகளில் மாணவத் தலைவர்கள் மிகவும் பொறுப்பாகவும், முன் மாதிரியாகவும் நடக்க வேண்டும். ஏனைய மாணவர்கள் மீது செல்வாக்கைச் செலுத்தி, அவர்களது நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தல் வேண்டும்.

அதிபர், ஆசிரியர்களுக்கு பல்வேறு உதவிகளையும், ஒத்தாசைகளையும் வழங்கி ஒரு முன்மாதிரியான நல்லொழுக்கமுள்ள இளைஞனாக, மாணவனாக செயற்பட வேண்டும். வீட்டிலும், சமூகத்திலும் மேலும் அர்ப்பணிப்புள்ளவர்களாக, சமூக நோக்குடையவர்களாக இருப்பது இன்றைய முக்கிய தேவையாகவுள்ளது - என்றார்.

(எ-29)



மாகாண மட்டத்தில் இடம்பெற்ற தமிழ்த் தினப் போட்டியில் காத்தவராயன் சிந்துநடைக் கூத்துப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற மாங்குளம் மகாவித்தியாலய அணியினருக்கு மாகாணக் கல்வித் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் த.கிருபாகரன் சான்றிதழ் வழங்குகிறார். (எ-3)

## மாற்றுவலுவுடையோர் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு, ஜூலை 3

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற மாற்றுவலுவுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் பார்வைக் குறைபாடுடைய மாணவர்களுக்கான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**9 வயது ஆண்-75 மீற்றர்**

சு.சுஜீவன், இ.நிராஜ், க.டேலைக்ஷன் (மூவரும் சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை).

**பந்து எறிதல்**

சு.சுஜீபன் -சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, த.தனுஷன்- நவாலி அட்டகிரி வித்தியாலயம், ம.டனுஷன்- மானிப்பாய் சென். ஆன்ஸ் வித்தியாலயம்.

(தொடரும்)
(எ-86)

# தொண்டமானாறு வெளிக்கள பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 3

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தினால் கடந்த பங்குனி மாதம் நடத்தப்பட்ட கணித, விஞ்ஞான, வர்த்தகப் பாட க.பொ.த உயர்தரப் பரீட்சையில் புள்ளி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 30 மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**கணிதம்**

பி.கபிலன் (யாழ்.ஹாட்லிக் கல்லூரி), ரி.கோபிராஜ் (உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி), டி.எம்.பௌஎல் (யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரி), எம்.விதுர்சா (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பி. தாஸ்மோகன் (யாழ். ஹாட்லிக் கல்லூரி), கே. ஐங்கரன் (யாழ். ஹாட்லிக் கல்லூரி), கே. செந்தாளன் (யாழ்.ஹாட்லிக் கல்லூரி), பி. கஜலுக்ஸன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ். சரத்பவன் (யாழ். ஹாட்லிக் கல்லூரி), எஸ் கிருசாந் (யாழ். ஹாட்லிக் கல்லூரி), வி.லக்ஸனா (யாழ். சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), என். சுபாங்கனி (யாழ். வட மத்திய மகளிர் கல்லூரி), கே.சுதர்சன் (யாழ். ஹாட்லிக் கல்லூரி), டி.டுசாந்தன் (யாழ். ஹாட்லிக் கல்லூரி), ரி. கஜன் [illegible] ஆர். நிதர்சன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ். சர்மி (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பி.பாலினி (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எம். பார்த்தீபன் (யாழ். ஹாட்லிக் கல்லூரி), பி. ஜெனார்த்தனசர்மா (யாழ். இந்துக் கல்லூரி), ஜே.விதுஜா ( யாழ். சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), எஸ். நிஸாந்தன் (யாழ்.ஹாட்லிக் கல்லூரி), ஜே.ஜெனிகேப்சிபி (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), ஜே. எ. நிஸாந்தன் (யாழ். சென். பற்றிக் கல்லூரி), கே. கஜிந்தன் (யாழ்.ஹாட்லிக் கல்லூரி), எஸ். அமுதீசன் (யாழ். இந்துக் கல்லூரி), ரி. வேங்கடேஸ்வரன் (யாழ். விக்ரோரியாக் கல்லூரி), கே. மயூரன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), கே. கீர்த்தனா (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

**விஞ்ஞானம்**

எஸ். இளங்கீரன் (யாழ்.ஹாட்லிக் கல்லூரி), எம். மிதுரிகா (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எஸ். பிருந்தா (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பி. துவாரகன் (யாழ்.ஹாட்லிக் கல்லூரி), வி.கீர்த்தனன் (யாழ்.ஹாட்லிக் கல்லூரி), என். சரண்யா (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), [illegible]ராஜ்கரன் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), என். மாதங்கி (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எஸ். சுமிதா (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எஸ். சோபிதா (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) , எஸ். சந்திரகாந் (யாழ்.ஹாட்லிக் கல்லூரி), எஸ். சோபிகா (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பி. சர்மிளா (யாழ். மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலை), ரி. குலங்கனா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கே. துஸ்யந்தி (யாழ். வட மத்திய மகளிர் கல்லூரி), பி. திலுக்சி (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) , கே. டிலுசன் (யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி), வை. விதுசன் (யாழ். இந்துக்கல்லூரி), ஆர். பவித்ரா (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எஸ். கமலட்சன் (யாழ். இந்துக்கல்லூரி), எஸ். தின்கரன் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), கே. கௌதமி (கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி), எம்.நிலாங்கி (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எஸ். மதுட்ராமி (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), என் .குலதீபன் (யாழ். இந்துக்கல்லூரி), எஸ். சிந்துஜா (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) , எஸ். ஜதுசன் (யாழ். இந்துக்கல்லூரி), வி. பிரசாந்தன் (யாழ். இந்துக்கல்லூரி), பி. ஜதுர்சனன் (யாழ். இந்துக்கல்லூரி), கே. பிரசாந்தன் (யாழ். இந்துக் கல்லூரி)

(தொடரும்)
(எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ–9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021–2262789,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## வாழ்த்துப் பாடினாரா? வசைபாடினாரா?

ஜெனிவா தீர்மானத்தோடு இலங்கைக்கு தந்திரம் மிக்க எதிரியாக மாறிவிட்ட இந்தியா, இலங்கையின் முன்னெச்சரிக்கையுடனான எதிரி நாடாக மாறிவருகின்றது. இது இந்த வாரத்தில் இலங்கைக்கு வந்து திரும்பிய இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனின் வருகையிலும் தென்பட்டது. நில அபகரிப்பு, மீளக் குடியேற்றம், இனப்பிரச்சினை தீர்வு தொடர்பிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பு–இலங்கை அரசின் பேச்சுவார்த்தை, தீர்வுத் திட்டம் போன்ற விடயங்கள் இலங்கை அரசியலில் உச்சம் பெற்றிருக்கின்ற சந்தர்ப்பத்தில் மேனன் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டார். இலங்கை சிக்கலான அரசியல் ஓட்டத்தை எதிர் கொள்ளும் சந்தர்ப்பத்திலும், இந்தியாவை விட்டு இலங்கை வேறு திசையை நோக்கி பயணிக்க முற்படும் வேளையிலும் இந்திய அரசின் உயரதிகாரிகள் இலங்கை வருவது வழமை.

இந்தமுறையும் அவ்வாறானதொரு சந்தர்ப்பத்திலேயே மேனன் இலங்கை வந்தார். தமிழர்களுக்கு இலங்கையில் வாழ்வதற்கு தகுதியே இல்லை என்ற கருத்து நிலைப்பட்ட அரசியல் ஓட்டம் ஆளும் கட்சியினரால் முன்னெடுக்கப்படும் வேளையிலும், இலங்கை அரசு மேற்கைக் கைவிட்டு அவற்றுக்கெதிரான நாடுகளோடு கைகோர்க்க எத்தனிக்கும் சந்தர்ப்பத்திலும் அவரது பயணம் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பயணத்தின் ஊடாக குறித்த இரு விடயங்களுக்கும் சாதகமான தீர்வை எட்டுவது என்ற முடிவுடனேயே அவர் கொழும்பில் கால் வைத்தார். ஆனால் அவரது நோக்கம் எதுவும் கைகூடவில்லை. வழமையாக இந்திய அதிகாரிகள் இலங்கை வந்து கொழும்பில் வைத்து தெரி விக்கும் வாழ்த்துப் பாடல்களுக்குப் பதிலாக மேனன் இந்த முறை வசைபாடியிருக்கின்றார். இது பெரும் ஆச்சரியம். ஏனெனில் இலங்கை வரும் இந்திய அதிகாரி கள் இங்கு வைத்து தமது பயணத்தை திருப்திகரமானது என தெரிவிப்பதும், இந்தியாவில் போய் நின்று கொண்டு பயணத்தில் எதுவித பயனும் இல்லை எனத் தெரிவிப்பதும் ஒரு பண்பாடாக பின்பற்றப்பட்டு வந்தது. ஆனால் அந்தப் பண்பாட்டுத் தொடர்ச்சிக்கு இலங்கை அரசு கல்லெறிந்திருக்கின்றது. அதன் இராஜதந்திர நடவடிக்கைகள் மேனனை கோபம் கொள்ள வைத்திருக்கின்றது.

இந்தியாவும், மேற்கு நாடுகளும் தமிழர்களின் இனப் பிரச்சினை தொடர்பில் முன்வைக்கும் முதலாவது பரிந்துரையாக மாகாண சபைத் தேர்தல்கள் எப்போதும் இருக்கின்றன. மேனன் வருகைக்கு முதல்நாள் இரவு கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டதோடு தேர்தலுக்கான காலமும் குறிக்கப்பட்டது. அத்தோடு வடமாகாணத்தில் இந்த வருடம் தேர்தல் நடத்துவதற்கான வாய்ப்பு வசதிகள் இல்லை என்ற காரணமும் வலுவாக முன்வைக்கப்பட்டிருந்தது. ஆகவே இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் மேனன் எழுப்பவிருந்த கேள்விகள் அனைத்துக்கும் மாகாண சபைத் தேர்தல் அறிவிப்புகள் தயார் செய்யப்பட்ட பதிலை வழங்கின. ஆகவே அவரால் எந்தக் கேள்வியையும் எழுப்ப முடியவில்லை.

பதிலாக இலங்கை அரசு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் திருப்திகரமாக செயற்படவில்லை என்ற வசையைத்தான் அவரால் தெரிவிக்க முடிந்தது. கடும் கொதிப்போடு பயணத்தை முடித்துக்கொண்ட சிவ்சங்கர் மேனன் புதுடில்லி போய் புதிய வியூகங்களை அமைக்கத் திட்டமிட்டிருப்பார். இந்திய–இலங்கை அரசியல் உறவில் ஜெனிவாத் தீர்மானத்தோடு எழுந்திருக்கும் நம்பிக்கையீனமும் இடைவெளியும் இந்தியா இனி அமைக்கப்போகும் புது வியூகத்தால் மேலும் அதிகரித்து செல்லும் என்றே தோன்றுகின்றது.

# இணையத்தளங்களும் இறுக்கப்படுகின்றன

■ ஜெரா

கடந்த வருடத்தின் தொடக்கப் பகுதியில் இலங்கையில் இருந்து தரவேற்றப்படும் லங்காஈநியூஸ், லங்காநியூஸ் வெப் ஆகிய இரண்டு இணையத் தளங்களும் இலங்கை அரசால் தடைசெய்யப்பட்டன.


நாட்டுக்கு அவதூறு ஏற்படுத்தும் செய்திகளை வெளியிட்டமை மற்றும் பாதுகாப்புக்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் செய்திகளை பரப்பியமை போன்ற காரணங்களுக்காகவே தடை செய்யப்பட்டதாக அப்போது கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆனால் உண்மையில் நாட்டில் நடைபெறும் மனித உரிமை மீறல்களையும், ஆள்கடத்தல் மற்றும் காணாமல் போதல் தொடர்பான செய்திகளையும் சுடச்சுட இந்த இணையத் தளங்கள் வழங்கியமையினாலேயே தமக்கு இந்த நிலை ஏற்பட்டதாக குறித்த இணைய ஊடகங்களின் அமைப்பாளர்கள் வாதிட்டனர். அவர்களின் கருத்தில் உண்மை இருப்பதாகவே தெரிகின்றது.

இலங்கை அரசின் பொய் முகத்தைக் கிழிக்கும் பத்திரிகையாளர்களையும் ஊடகவியலாளர்களையும், அவர்கள் சார்ந்த ஊடக நிறுவனங்களையும் பல்வேறு வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்ட இலங்கை அரசு, தமது எல்லையையும் மீறிச் செயற்படும் இணைய ஊடகங்கள் மீது தன் அடுத்த கவனத்தைக் குவித்தது.

இங்கு நடைபெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான அனைத்துச் செய்திகளையும், தமிழர் பகுதிகளில் நடைபெறும் நில ஆக்கிரமிப்பு, சிங்களமயமாக்கம், பண்பாட்டு சிதைப்பு போன்றவற்றை இந்த இணைய ஊடகங்களே சர்வதேசத்துக்கு கொண்டு சென்றன. இலங்கைக்கு எதிராக ஐநாவின் மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களுக்குக் கூட இந்த இணைத்தளங்கள் மிகமுக்கிய பங்காற்றியிருந்தன. பத்திரிகைகள் மற்றும் இலங்கையில் இருந்து இயங்கும் இலத்திரனியல் ஊடகங்கள் அச்சுறுத்தலின் காரணமாக வெளியிட முடியாமல் இருந்த பல சங்கதிகள் இவற்றின் ஊடாகவே வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட்டன. ஆகவே இதனை கட்டுப்படுத்தவேண்டிய கட்டாயம் இலங்கை அரசுக்கும், பாதுகாப்புத் துறை சார்ந்தவர்களுக்கும் அவசியமாய் உணரப்பட்டது.

கடந்த வருடத்தின் தொடக்கப் பகுதியில் மேற்குறித்த இரண்டு தீவிர அரசியல் சார்ந்த செய்திகளை வெளியிடும் இணையத்தளங்கள் உள்ளடங்கலாக 29 இணையத்தளங்களை இலங்கை அரசு தடைசெய்து தனது பணியைத் தொடங்கியது. தொடர்ச்சியாக இலங்கையின் செய்தி வெளியிடும் அனைத்து இணையத்தளங்களும் பதிவுசெய்யப்படவேண்டும் என்ற புதிய நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தியது. பதிவு செய்யப்படாத இணையங்கள் இடைநிறுத்தம் செய்யப்படும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இப்போது அந்த விடயம் நடைமுறைக்கு வந்திருப்பதைப் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த வாரத்தில் தமிழ் பரப்பில் இருந்து அரசியல் சார் செய்திகளை வெளியிடும் சில இணையத் தளங்களை இலங்கையில் பார்க்க முடியாத [illegible] எதிரான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆர்ப்பாட்டங்கள் பரவலாக முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதனை உடனடியாக புலம்பெயர் தளத்துக்கும் சர்வதேசத்துக்கும் கொண்டுசெல்லும் நிலைமையைத் தவிர்ப்பதற்காக இலங்கையில் இருந்து செயற்படும் இணையத்தளங்கள் முடக்கப்பட்டன.



இலங்கைக்கு எதிராக ஐநாவின் மனித உரிமைகள் சபையில் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்ட விடயத்தில் கூட இந்த இணையத் தளங்கள் மிகமுக்கிய பங்காற்றியிருந்தன. பத்திரிகைகள் மற்றும் இலங்கையில் இருந்து இயங்கும் இலத்திரனியல் ஊடகங்கள் அச்சுறுத்தலின் காரணமாக வெளியிடமுடியாமல் இருந்த பல சங்கதிகள் இவற்றின் ஊடாகவே வெளிச் சத்துக்கு கொண்டுவரப்பட்டன.

அதுமட்டுமல்லாமல், இலங்கையில் நடைபெறும் தமிழர் விரோத செயற்பாடுகளை இந்த இணையத்தளங்கள் புலம்பெயர் தமிழ் மக்களுக்கு கொண்டு செல்வதனால் அவர்களின் இலங்கைக்கு எதிரான மனோநிலை மேலும் மேலும் அதிகரித்தே செல்கின்றது. அண்மையில் கூட மஹிந்த ராஜபக்ஷ லண்டன் சென்றிருந்த போது அவருக்கு அங்கு புலம் பெயர் தமிழர்களால் காட்டப்பட்ட எதிர்ப்பும், மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்பட்ட அவமானமும் உடனடியாகவே பெரும்பாலான தமிழ் இணையத்தளங்களில் காட்சியாக்கப்பட்டிருந்தன. அங்கு நிகழ்ந்த அவமானத்தை அடிநிலைக் கிராமத்தில் இருக்கும் பாமரன் கூட பார்த்தறியும் நிலையை இணையங்கள் உருவாக்கி விட்டிருந்தன. எனவே தான் பெரும்பாலான தமிழ் இணையங்கள் இப்போது இலங்கையில் தமது மூச்சை நிறுத்த வேண்டிய இக்கட்டு நிலையை அடைந்திருக்கின்றன.

தமிழ் இணையங்களின் நிலை இப்படி இருக்கையில், இலங்கை அரசின் கடும் போக்குத் தனத்தை சர்வதேசத்தின் முன்னிலையில் உடைக்கும் எதிர்கட்சிகளின் இணையத் தளங்களும் முடக்கப்பட்டுள்ளன. இலங்கையில் முக்கிய எதிர்க்கட்சியின் செய்திகளையும், இலங்கை அரசு மேற்கொள்ளும் அடாவடித்தனங்களையும் வெளியிடும் சிறீலங்கா மிரர் , லங்கா எக்ஸ் நியூஸ் போன்ற இணையத்தளங்களின் அலுவலகங்கள் குற்றப்புலனாய்வுத்துறையினால் முற்றுகையிடப்பட்டு அங்கு பணியாற்றிய ஊடகவியலாளர்களும் பணியாளர்களும் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். குறித்த இணையத்தளம் சார் அரசியல்வாதிகளும், பொது நலன் விரும்பிகளும் இது பற்றித் தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்ற போதிலும், லங்காஈநியூஸ், லங்காநியூஸ்வெப் போன்ற செய்தித் தளங்களுக்கு ஏற்பட்ட நிலை தான் இவற்றிற்கும் எற்படபோகிறது என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் இந்த தடைகளும் கைதுகளும் நடந்தவுடனேயே ஐரோப்பிய ஒன்றியம் ஒரு அறிக்கை விடுத்துள்ளது. ஜனநாயக சமூகத்தில் ஊடக சுதந்திரம் மிக முக்கியமானதென்பதுடன் அச்சுறுத்தல் மற்றும் துன்புறுத்தல் இன்றி ஊடகவியலாளர்கள் தங்களது நியாயமான பணியை முன்னெடுக்ககூடியதாக இருக்க வேண்டும். சுதந்திரமான ஊடகத்துறை மீது அச்சுறுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் எந்தவித நடவடிக்கையையோ அல்லது கருத்து சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுவதோ ஐக்கிய நாடுகளின் மனித உரிமைச் சாசனங்களுக்கு முரணானது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசுக்கும் ஐ.நாவின் மனித உரிமைகள் சபைக்கும் ஏற்கனவே குடுமி பிடிச்சண்டை கடந்த ஆண்டில் இருந்து நடைபெற்று வருகின்றது. இலங்கை மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த காத்திரமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதோடு தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும் என்பதையும் ஐ.நா மனித உரிமைகள் சபை இந்த அரசுக்கு வலியுறுத்தி வருகின்றது. இந்த நிலையில் இப்போது இலங்கை அரசுக்கு மேலும் ஒரு சிக்கலும் எழுந்திருக்கின்றது. இந்தவிடயம் ஐரோப்பிய ஒன்றியத்தினால் மனித உரிமைகள் சபைக்கு பரிந்துரைக்கப்படலாம். அது நடைபெறாவிட்டாலும் இலங்கையில் முழு கவனத்தையும் செலுத்திக்கொண்டிருக்கும் பணியாளர்கள் இந்த விடயத்தை மனித உரிமைகள் சபைக்கு கொண்டுசெல்வர். ஆகவே நவம்பர் மாதத்தில் இலங்கைக்கு ஏற்பட இருக்கின்ற அபாயத்தின் கனதி இப்போதிருந்தே அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றது.

மனித உரிமை மீறல்கள் குறித்த தகவல்கள் வெளியில் செல்லுகின்றன என்பதற்காக தடைசெய்யப்பட்ட இணையங்கள் இலங்கையில் மட்டும்தான் செயலிழந்து இருக்கின்றன. புலம்பெயர் நாடுகளில் அவை வழமைபோலவே இயங் குகின்றன. ஆகவே எத்தகைய சூழ்ச்சி செய்தாலும் இந்த ஆபத்தை இலங்கை அரசினால் தவிர்க்க இயலாது. அவை இனி வழங்கப்போகின்ற செய்திகள் நவம்பர் மாதத்தை மிகவும் இறுக்கமானதாக மாற்றப் போகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ தகனன்

“ சிரியாவின் நட்பு நாடான ரஸ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புடினும், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபா மாவும் மெஸ்சிக்கோவில் நடைபெற்று முடிந்த ஜி-20 நாடுக ளின் தலைவர்களின் உச்சி மாநாட்டின் நிறைவிலே சந்தித்து, சிரியா விவகாரம் தொடர்பாகக் கலந்துரையாடி யிருந்தனர்.



# தீவிரமடையும் சிரியாவின் உள் நாட்டு போர்

மத்திய கிழக்கிலே சுனி முஸ்லிம்களை அதிகளவில் கொண்ட நாடான சிரியாவில் கடந்த வருட ஆரம்பத்திலிருந்து மக்கள் புரட்சி நடைபெற்று வருகின்றது.

எகிப்து, லிபியாவைத் தொடர்ந்து தற்போது சிரியாவிலும் உள்நாட்டுப்புரட்சி தீவிர நிலையை எட்டியிருக்கின்றது.

1970 இல் இராணுவப்புரட்சி மூலம் ஆளும் பாத் கட்சியைத் தனது வசமாக்கி நாட்டின் ஜனாதிபதியான ஹாபிஸ் அல் ஆசாத் 2000 ஆண்டு மரணம் அடைந்ததைத் தொடர்ந்து அவரது மகன் பசார் அல் ஆசாத் சர்வாதிகார ஆட்சி நடத்தி வருகின்றார். இதனால் கடந்த 40 வருடங்களாக சிரியாவிலே அவசரகால நிலை தொடர்கிறது. இதனால் ஏற்பட்டிருக்கின்ற பெரியளவிலான பொருளாதாரப் பிரச்சினைகள், வேலையின்மை என்பன கடந்த வருடம் மக்களை வீதிக்கு கொண்டு வந்திருந்தது. 40 வருட கொடுங்கோல் ஆட்சிக்கு அஞ்சி பேசாமடந்தைகளாக இருந்த சிரிய மக்கள் தற்போது ஆளும் அல்-ஆசாத் அரசுக்கெதிராக வீதிகளில் திரண்டனர். மக்களின் போரட்டத்துக்கு அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் மறைமுக ஆதரவை வழங்கி வருகின்றன. மக்களின் போராட்டம் தீவிரமானதைத் தொடர்ந்து அரசினால் போராட்டக்காரர்கள் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்பட்'டு வருகின்றனர்.

கடந்த வருடத்திலிருந்து இதுவரை நடைபெற்றுள்ள உள்நாட்டு போரிலே 15000 இற்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கிறார்கள். ஐ.நா.விலும் சிரியாவில் உள்நாட்டுப் போர் நடைபெறுவதாகப் பிரகடனம் செய்யப்பட்டு ஐ.நா.வின் சிறப்புத் தூதுவராக முன்னாள் செயலாளர் நாயகம் கோபி அனான் சிரியாவுக்கு அவசர அவசரமாக இந்தமாத ஆரம்பத்திலே சென்றிருந்தார். எனினும் கோபி அனானால் முன்வைக்கப்பட்ட போர் நிறுத்தம் உள்ளிட்டதான 6 அம்சத் தீர்வுத்திட்டம் சிரியாவில் இன்னமும் நடைமுறைபடுத்தப்படவில்லை. இதனால் இவரது பயணமும் தோல்வியில் முடிந்திருக்கின்றது.

சிரியாவின் நட்பு நாடான ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புடினும், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் மெஸ்சிக்கோவில் நடைபெற்று முடிந்த ஜி-20 நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டின் நிறைவிலே சந்தித்து, சிரியா விவகாரம் தொடர்பாகக் கலந்துரையாடியிருந்தனர்.

இந்தச் சந்திப்பும் அமெரிக்கா எதிர்பார்த்த அளவிலான வெற்றியைத் தரவில்லை. சிரியாவில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவரவும் ஜனாதிபதி பஸார்-அல்-ஆசாத்தை நாடு கடத்தவும், ரஷ்யாவின் ஆதரவை அமெரிக்கா எதிர்பார்த்திருந்தது. எனினும் புடின் இதற்கு மறுத்துவிட்டதாகத் தெரிகின்றது. இரு தலைவர்களும் சேர்ந்து செய்தியாளர்களை சந்தித்தபோது, இரு தலைவர்களது முகங்களும் இறுக்கமடைந்து இருந்ததாகவும், முகத்தில் சம்பிரதாயத்திற்காகவேனும் புன்சிரிப்பை காண முடியவில்லை எனவும் செய்திகள் கூறுகின்றன. எனினும் இரு நாடுகளும் கூட்டாக விடுத்த அறிக்கையில் போர்நிறுத்தத்தை வலியுறுத்தியிருக்கின்றன.

ரஷ்யாவிடமிருந்தே சிரியா அதிகளவான ஆயுதங்களை கொள்முதல் செய்கின்றது.

எனவே சிரியா மீது நடவடிக்கை எடுக்க ரஸ்யா ஒத்துழைக்காது என்றே நம்பலாம். ரஷ்யாவின் ஆதரவு இல்லாமல் சிரியா மீது ஐ.நா.சபையும் கடுமையான முடிவுகளை எடுக்கமுடியாமல் இருக்கின்றது. ரஷ்யாவை மீறி எடுக்கப்படும் முடிவுகள் பாதுகாப்புச் சபையில் அந்த நாட்டின் வீட்டோ அதிகாரத்தினால் தடுக்கப்படும். இரு வல்லரசுகளுக்கிடையிலான பனிப்போரில் சிக்கி சிரிய உள்நாட்டுப் போர் மேலும் தீவிரமடையும் என்றே தோன்றுகின்றது.

சிரிய நிலவரங்கள் சர்வதேச ரீதியிலும் பெரும் சிக்கலை தோற்றுவித்திருப்பதாக அமெரிக்க வெளியுறவுத் துறை செயலர் கிலாரிக் கிளின்ரன் கருத்து வெளியிட்டிருக்கிறார். அத்தோடு சர்வதேச சமாதானப் பொறிமுறை சிரிய விடயத்தில் தோற்றுப்போய்விட்டதாகவும் அவர் கூறியுள்ளார். ஆகவே உலக நாடுகள் எதுவும் சமாதானமான முறையில் சிரியாவுக்குள் தலையிட முடியாத நிலையே உருவாகியிருக்கின்றது. நாளுக்கு நாள் வலுப்பெற்றுவரும் உள்நாட்டுப் போர் பல ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களை பலியெடுத்தபடியே தொடர்கின்றது.

இதனைக் கட்டுப்படுத்த யாராலும் முடியாமல் போனதால் லிபிய நிலைமையே சிரியாவிலும் உருவாகப் போகிறது என சர்வதேச அரசியல் நோக்கர்களும் கருத்துவெளியிட்டிருக்கின்றனர். தற்போதைய நிலவரப்படி அதில் பொய் இருப்பதாக தெரியவில்லை. உலகம் வெகுவிரைவில் இன்னொரு லிபியாவையும், சுட்டுக் கொலை செய்யப்பட்ட கடாபியின் நிலமையை யும் சிரியாவுக்கு வழங்கப்போகிறது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

# கோயில்களின் கணக்குக் கோணினால்?

■ கோபாலகிருஷ்ணன்

கோயில்களாக இருந்தாலும் பொது நம்பிக்கைச் சொத்துக்களாக இருந்தாலும் பொது நிறுவனங்களாக இருந்தாலும் அவற்றை நிர்வகிக்கின்ற நிர்வாகிகளின் தூய்மையான சேவையை உறுதிப்படுத்துவது வருடா வருடம் நிர்வாகிகளால் வெளிப்படுத்தப்படுகின்ற நிதி ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கை, பட்டயக் கணக்காளர்களின் கணக்காய்வு அறிக்கைகள் தான் நிர்வாகிகளின் புனிதமான பணியை உறுதிப்படுத்துகின்ற நற்சான்றிதழ். கணக்காய்வு அறிக்கை சரியாக இருக்கின்ற கோவில்கள் மற்றும் பொது நிறுவனங்களை நிர்வகிக்கின்ற நிர்வாகிகளிற்கு எதிராக சர்வ வல்லமை மிக்க எந்தச் சக்தியாலும் குற்றம் சுமத்தவோ, நீதிமன்றம் செல்லவோ முடியாது. நிதி ஆண்டு ஆய்வு அறிக்கையை ஆண்டுதோறும் வெளியிடுகின்ற நிர்வாகத்தினர் எவருக்கும், எந்தக் காலத்திலும் அஞ்சவேண்டியதில்லை. அவர்களைப் பற்றி யாரும் விமர்சிக்க முடியாது.

பட்டயக் கணக்காளர்களின் கணக்காய்வு அறிக்கையில் சந்தேகங்கள், பற்றுச்சிட்டைகள், ஆவணங்களில் திருத்தங்கள் இருப்பதாக தெரிவித்திருந்தால் பற்றுச் சிட்டைகளின் ஒப்புப் பிரதிப் புத்தகங்களில் திருத்தங்கள் இருப்பதாக தெரிவித்திருந்தால், அந்தக் கணக்காய்வு அறிக்கையை பொதுச் சபை ஏற்கமுடியாத நிலை ஏற்படும். இது கோயில்கள் மற்றும் நம்பிக்கைச் சொத்துக்களை பரிபாலிக்கின்ற நிர்வாகிகளின் செயற்பாட்டில் ஐயப்பாட்டை ஏற்படுத்தும்.

தனிமனித வாழ்வில் ஒழுக்கம் உயிரிலும் மேலானது. ''ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும்'' என்று வள்ளுவன் சொன்னவாறு தனி மனித வாழ்வில் ஒழுக்கம் உயிரானது. பணம், பதவி, கல்வி, அறிவு அனைத்தும் ஒருங்கே அமைந்து சகல செல்வமும் பெற்று பெருவாழ்வு வாழும் ஒருவனுக்கு ஒழுக்கத்தில் ஒரு அணு அளவு கீறல் விழுந்தாலும் அவனது அனைத்துப் புகழும் பாழாகி விடும். அதேபோன்று கோவில்கள், நம்பிக்கைச் சொத்துக்கள், பொது நிறுவனங்களின் கணக்கில் குளறுபடி ஏற்பட்டுவிட்டால் நிர்வாகிகளின் அனைத்து செயற்பாடுகளும் கேள்விக் குறியாகி விடும்.

அடியவர் ஒருவர் கோவில் ஒன்றுக்கு ஒரு தொகைப் பணத்தைக் காணிக்கையாகக் கொடுக்கும் பொழுது கோவில் நிர்வாகத்தின் சார்பாக கொடுத்த பணத்தின் தொகைக்குப் பற்றுச்சிட்டை வழங்கப்படுகின்றது. பற்றுச்சிட்டையைப் பெற்றுக் கொண்ட அடியவர் தன் நேர்த்திக்கடன் தீர்ந்துவிட்டதாகப் பூரணமான மனத்திருப்தி அடைகின்றார். அடியவருக்கு பூரணமான நம்பிக்கையை ஏற்படுத்தியது அடியவருக்கு வழங்கப்பட்ட பற்றுச்சிட்டைதான். தனது பணம் கோவில் நிதியோடு சேர்ந்துவிட்டது என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது, கோயில் நிர்வாகம் சார்பாக வழங்கப்பட்ட பற்றுச்சிட்டை. இந்தப் பற்றுச்சிட்டையின் ஒப்புப் பிரதி நாளாந்தக் கணக்குப் பதிவுப் புத்தகத்தில் பதியப்பட்டு பற்றுச்சிட்டையின் ஒப்புப் பிரதியும் கணக்குப் புத்தகமும் வருடாந்தக் கணக்கை ஆய்வுசெய்யும் பட்டயக் கணக்காளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் அனைத்தையும் சரிபார்த்து ஆய்வுசெய்து பட்டயக் கணக்காளர்களால் ஆய்வு செய்யப்பட்ட நிதி ஆண்டறிக்கையாக வெளிவர வேண்டும். அடியவருக்கு வழங்கப்பட்ட பற்றுச்சிட்டை உண்மையாக கோவிலின் நிதியோடு சங்கமமாகிவிட்டது என்பதை உறுதிப்படுத்துவது வருடாந்தக் கணக்காய்வு அறிக்கைதான். உண்டியல்களின் வரவு பற்றுச்சிட்டை இல்லாத வரவு. எனவே

> பட்டயக் கணக்காளர்களின் கணக்காய்வு அறிக்கையில் சந்தேகங் கள், பற்றுச்சிட்டைகள் ஆவணங் களில் திருத்தங் கள் இருப்பதாக தெரிவித்திருந் தால் பற்றுச் சிட்டைகளில் ஒப்புப் பிரதிப் புத்தகங்களில் திருத்தங்கள் இருப்பதாக தெரிவித்திருந்தால், அந்தக் கணக்காய்வு அறிக்கையை பொதுச் சபை ஏற்க முடியாத நிலை ஏற்படும்

உண்டியல்களின் வரவை வெளிப்படுத்தி உறுதிப்படுத்துவது கணக்காய்வறிக்கைதான். உண்டியல்கள் எண்ணுகின்ற பொழுது கணக்காய்வாளர் நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர் பிரசன்னமாகி இருப்பார்: எனவே உண்டியல் வரவும் உண்டியலில் கிடைக்கின்ற தங்கம், வெள்ளி, காணிக்கைப் பொருள்களும் நேரடியாகக் கண்காணிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படுகின்றன. உண்டியல் வரவில் சேர்க்கப்பட்டு பட்டயக் கணக்காளரால் கணக்காய்வு அறிக்கையில் வெளிப்படுத்தப்படுகின்றது. பக்தர்களுக்கு வழங்கும் பற்றுச்சிட்டை கணக்காய்வின் பின்தான் உயிர் பெறுகின்றது.

ஒரு கோவிலின் நிர்வாகத்திடம் பணத்தையோ அல்லது காணிக்கையாகத் தங்கம், வெள்ளி போன்ற பொருள்களையோ வழங்குகின்றபோது பற்றுச்சிட்டை வழங்கப்படுகின்றது. வழங்கப்படுகின்ற பற்றுச்சிட்டை நமது பங்களிப்பு ஆலயச் சொத்துடன் சங்கமம் ஆகிவிட்டது போன்ற நம்பிக்கையை தருகின்றது. நமக்கு வழங்கப் பட்ட ஒப்புப்பிரதி புத்தக இலக்கப் பற்றுச் சிட்டையின் இலக்கம், கொடுத்த பணத்தின் தொகை, பெயர் விவரம் நாளாந்தப் பதிவுப் புத்தகத்தில் பதியப்பட்டு வருடாந்தக் கணக்காய்வின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கொள்வனவு கொடுப்பனவுக்கான சிட்டை, வவுச்சர் என்பன திகதி ஒப்பம் தெளிவாக அனைத்து விவரங்களுடன் பட்டயக் கணக்காளர் பார்வைக்கு கொடுக்கப்படுவதுடன் அவர்கள் கேட்கின்ற ஆவணங்கள் வழங்கப்பட வேண்டும். ஆவணங்களில் திருத்தங்கள், சந்தேகங்கள் இருக்குமானால் பட்டயக் கணக்காளர்கள் தமக்கு ஐயப்பாடுள்ளதாக விதந்துரையில் சுட்டிக்காட்டுவார்கள். எனவேதான் பட்டயக் கணக்காளர்களால் சுட்டிக்காட்டப்பட்டு விதந்துரைக்கப்படுகின்ற விதப்புரையுடன் கணக்காய்வறிக்கை வெளிவர வேண்டும். பட்டயக் கணக்காளர்களின் விதப்புரையில்லாமல் மொட்டையான கணக்காய்வறிக்கை ஏற்புடையதல்ல. ''கோவில் பணத்தை, சொத்தை நிர்வகிப்பது கூரியவாளின் முனையில் நடப்பதற்கு ஒப்பானது'' என்ற அமரர் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்களின் அமுத வாசகத்துக்கமைய கோவில்களின் கணக்குகள் பேணப்பட வேண்டும். கோவில்களின் கணக்குகள் கோணினால் முற்றிலும் கோணும் என்ற முதுமொழியின் உட்பொருள் முதல் என்பது சொத்து. சொத்தின் கணக்குக் கோணினால் அனைத்துச் செயற்பாடுகளும் கோணல்தான். முதலில் கோணினால் முற்றிலும் கோணும். கோணலை நிமிர்த்துவது முடியாத காரியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாமியார்கள் சந்தித்தால்...

ஒரு தனியார் தொலைக்காட்சியில் முன்னர் இரண்டு பிரபல சாமியார்கள் சந்திப்பு ஒளி-பரப்பு நடந்தது

அதில் ஒரு சாமியாராவது தன்னை உயர்ந்தவராகக் காட்டிக்கொள்ள சிறிது முயற்சி செய்தார். மற்றவருக்கு அந்த அவசியமும் இல்லாமல் இருந்தது. இரண்டு ஞானிகள் -உண்மை ஞானிகள் சந்தித்தால் எப்படி இருக்கும் என்பதை உணர்த்தும் அருமையான காட்சி .

இன்றைக்குப் பிரபலமாகப் பேசப்படும் பல குருமார்கள் போலிகள்...பொய்யர்கள்...ஆத்ம ஞானம் சிறிதுமற்ற அறியாமை மூடைகள். இவர்களது விளம்பர வெளிச்சத்தில் வீழ்ந்து சாகிற விட்டில் பூச்சிகளாக மக்கள் இருப்பதுதான் மிகவும் வருத்தமாக இருக்கிறது.

ஆன்மா, ஆன்மிகம், ஆத்மஞானம் என்பதன் அட்சரம் ஏதும் அறியாத அகங்கார, ஆடம்பரக் கொள்ளைக்காரர்களை எல்லாம் குருமார்களாக ஏற்றுக் கூத்தடிக்கும் நமது சனங்களின் அறியாமையை எப்படி நீக்குவது?

உண்மையான இரண்டு ஞானிகள் ஓரிடத்தில் சந்தித்தால் அங்கு போட்டி இருக்க முடியாது. பொறாமைப் பேச்சு இருக்கவே முடியாது. நான் பெரியவனா? நீ பெரியவனா? என்ற கேள்வியே எழாது. தர்க்கம், குதர்க்கம், மேல், கீழ்-யாருக்கு முதல் மரியாதை என்கிற எண்ணங்கள் எழவே முடியாது.

இவை எழுந்தால் அவர்கள் ஆத்மஞானிகளாக இருக்கவே முடியாது. இந்த உண்மைகளை எல்லாம் யோசிக்கவே மாட்டீர்களா? போட்டி என்பதே ஆணவத்தின் வெளிப்பாடு. ஆணவம் அழிந்தால் மட்டுமே ஆத்மஞானி தோன்ற முடியும். போட்டி போட்டுக்கொண்டு தன்னையும் தன் கூட்டத்தையும் பலப்படுத்த-பிரபலப்படுத்த விரும்பும் எவனும் ஆத்மஞானியே அல்லன். இதைத் தயவு செய்து உணருங்கள்.

உண்மையான இரண்டு ஆத்மஞானி சந்தித்தால் அங்கு சண்டையோ, பகையோ, புகையோ இராது. மாறாகக் கொண்டாட்டம் இருக்கும். ஆடல் பாடல் இருக்கும். விவரிக்க முடியாத ஆனந்தம் பிறருக்கும் பேச்சு, விரிவுரை, விளக்கவுரை இவைகூட இல்லாமல் போய் ஆனந்தமான அமைதி ஆழ ஆழமாகக் குடியிருக்கும். மோனம் முறுவலிக்கும். அதில் வானம் பிரதிபலிக்கும்.

''மகாவீரமும் புத்தரும் சந்தித்திருந்தால் என்ன நடந்திருக்கும்?'' என்று கேள்வி கேட்டபோது ஆசார்ய ரஜனீஷ் சொன்ன பதில் ஆழமானது. ''ஒன்றும் நடந்திருக்காது. இரண்டு கண்ணாடிகளை எதிர் எதிர் வைத்ததைப் போன்று இருந்திருக்கும். இருவரும் நிர்வாணம் எய்தியவர்கள், சலனமற்றவர்கள். எப்போதும் கண்ணாடி எதிரில் இருப்பவரைப் பிரதிபலிக்கும். ஆனால் எதிரில் இருப்பதும் கண்ணாடி என்றால் இந்தக் கண்ணாடி என்ன செய்ய முடியும்'' என்றார் ஓஷோ. பூரணமான இரு ஞானிகளின் சந்திப்பு இப்படித்தான் இருக்க முடியும்.

நம்மை நதிக்கரையில் கோவிந்த பகவத் பாதரும் ஆதிசங்கரரும் சந்தித்தபோது அங்கே ஆனந்தம் இருந்தது. இராமகிருஷ்ணரும் விவேகானந்தரும் சந்தித்தபோது அத்தகு ஆத்மானந்தம் அங்கே அலை வீசியது. திருவண்ணாமலையில் ரமணரும் சேஷாத்ரி சுவாமிகளும் சந்தித்தபோது சண்டை இருந்ததா? போட்டி இருந்ததா? துண்டால் அடித்துத் துரத்தும் துராசாரம் இருந்ததா? இல்லையே... அப்பேர்ப் பட்ட மகான்களைத் தேடி உணர வேண்டும் என்கிற எண்ணமே நம் மக்களுக்கு வராதா?

உண்மையான இரண்டு ஞானிகள் சந்தித்த நிகழ்ச்சி சொல்கிறேன். மிகப் பெரிய ஞானிகளான கபீரும், பரீத்தும் சந்தித்துக் கொண்டார்கள். இரண்டு ஞானிகளின் சீடர்களும் ஏதோ அதிசயம் நடக்கும், பெரியதாக ஏதாவது அற்புதம் நிகழும் என்று எதிர்பார்த்தார்கள். சந்திப்பு இரண்டு நாள்கள் நீடித்தும் ஏதும் அதிசயம் நிகழவில்லை.

கபீர் பரீதுக்கு ஏதாவது பெரிய விஷயம் சொல்லுவார் அல்லது பரீது கபீருக்குச் சொல்வார் என்று எதிர்பார்த்த சீடர்களுக்குப் பெரும் ஏமாற்றம். இருவரும் அருகருகே அமர்ந்திருந்தும் பேசவே இல்லை. அடிக்கடி ஒருவரைப் பார்த்து ஒருவர் புன்னகை பூத்தனர். ஆனந்தமாக இருந்தனர். சில சமயங்களில் ஒருவர் கையை ஒருவர் பற்றிக்கொண்டு அமைதியாகத் தடவிக் கொடுத்தார்கள். அன்பில் திளைத்தார்கள்.

எதையோ எதிர்பார்த்த சீடர்களுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. இரண்டு நாள்கள் கழிவது இரண்டு யுகம் கழிவது போல இருந்தது. புறப்படும் நேரம் வந்ததும் இருவரும் கட்டித் தழுவிக்கொண்டு ஆனந்தக் கண்ணீருடன் விடைபெற்றார்கள். யாரும் யாருக்கும் எந்த உபதேசமும் நிகழ்த்தவே இல்லை.

பிரிந்து கொஞ்சத் தூரம் வந்ததும் கபீரின் சீடர்கள் கோபத்தோடு "எங்களிடம் எவ்வளவு பேசுகிறீர்கள். அவரிடம் பேசத் தெரியாதவர் மாதிரி ஊமையாக இருந்தீர்களே, ஏன்?'' என்றனர். கபீர் அமைதியாக, "உங்களுக்கு விளங்காது. அவரோடு நான் பேசுவது என்னோடு நான் பேசுவது போல. அது உங்களுக்கு எப்படிக் கேட்கும்? ஒரே பிரபஞ்சத்தில் ஒருவராகவே நாங்கள் இருக்கிறபோது பேசிக்கொள்ள என்ன இருக்கிறது?'' என்றார்.

பரீதும் தமது சீடர்களிடம், ''முட்டாளைப் போல பேசாதீர்கள். அவருள் நானும், எனக்குள் அவரும் உருகிக்கொண்டிக்ருக்கும் போது என்ன பேச? சொல்லிக்கொள்ளாமலேயே எல்லாம் புரிகிறபோது சொல்ல என்ன இருக்கிறது?'' என்றார். அப்படிப்பட்ட ஆத்மஞானிகள் சந்திப்பைப் பார்க்கும் பாக்கியம் நமக்கு என்றாவது கிடைக்குமா? பகவானே அருள்புரிவாய்.

பிறரை ஜெயிக்க நினைக்கும் எவனும் உண்மை ஞானியல்ல. ஞானியின் போர்வையில் உலா வரும் அஞ்ஞானி! இன்று நாடெங்கும் இந்தக் கூட்டம்தான் நிரம்பி வழிகிறது.



சுகி.சிவம்



# பாஷையூர் அந்தோனியார் ஆலயத்தை திருத்த ஒருநாள் உழைப்பை வழங்கினர்

(கடந்தவாரத் தொடர்ச்சி)



எஸ்.யேசுதாஸ்

1955-1965 காலப் பகுதிகளில் கடமையாற்றிய குருக்களான ஏ.லெபோண், ஏ.வசம்பேக் அடிகளார்கள் திருமறைக் கல்வி, சமய கடமைகள், ஏழைகளின் துயர்துடைத்தல் தொழிலாளரின் உயர்வு போன்ற வாழ்க்கை நெறிமுறைகளில் மக்களை வளர்த்தெடுப்பதில் பெரும் பங்காற்றினர்.

தீய ஆவிகளையும், பேய்களையும் விரட்ட வரம்பெற்ற அந்தோனியாரை நாடி அந்தக் காலத்தில் பேய்களால் பீடிக்கப்பட்ட மக்களை அழைத்து வருவர். ஆலயத்திற்கு முன்பாக இருந்த சிலுவை மரத்தில் கட்டி விசுவாசப்பற்றுடன் செபித்து அதட்டி விரட்டுவர். இயேசுவைக் கையிலேந்திய அந்தோனியாரின் பெயரைக் கேட்டதும் பேய்பிடித்தவர்கள் அலறி அடித்துக் கொண்டு கடற்கரைப் பக்கமாக ஓடி அங்கிருந்த பூவரசம் மரங்களில் மோதி பேய்நீங்கி நலமடைந்ததாக மூத்தோர் வாயிலாக அறியமுடிகிறது.

இந்த ஆலயத்தோற்றத்தை மேலும் மெருகூட்டும் வகையில் அமைந்த எண்கோண முகப்பு மண்டபம் 1965 இல் அருட்திரு எஸ்.கே.சந்தியாப்பிள்ளை அடிகளின் பணிக்காலத்தில் கட்டப்பட்டது. தொழில் புரியும் தாய்மாரின் சிறுபிள்ளைகளைப் பராமரிக்கும் பாலர் பூங்காவையும் ஆரம்பித்து வைத்தார். அருட்தந்தை யோன் சிங்கராயர் அடிகள் பணியாற்றிய 1975 இல் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா (கல்லினால் ஆன ஆலயம்) கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாண கத்தோலிக்க ஆலயங்கள் 1851 ஆம் ஆண்டு முதல் 3 நிர்வாகப் பிரிவாக நிர்வகிக்கப்பட்டு வந்தன. இவற்றில் சுண்டுக்குளி திருமுழுக்கு யோவான் ஆலயம், பாசையூர் அந்தோனியார் ஆலயம் மற்றும் வழிமீசாம் எனப்படும் சிற்றாலயங்கள் என்பன ஒரு பிரிவாக நிர்வகிக்கப்பட்டன.

அநாதைகள் மடத்தை நிர்வகித்த குருக்களே கண்காணித்து வந்துள்ளார். 1898 ஆம் ஆண்டிலிருந்து தனிப்பங்காக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தற்போது வளன்புரம், எழிலூர், வசந்நபுரம் மணியந் தோட்டம், உதயபுரம் பகுதிகளில் உள்ள ஆலயங்கள் பாஷையூர் பங்கின் கீழ் உள்ளன.

1990 இல் அருட்திரு ஜே.ஏ.பிரான்சிஸ் அடிகளின் காலத்தில் கூரைப் பகுதி ஓடுகள் மாற்றப்பட்டு சீற் போடப்பட்டதுடன் ஆலயத்தின் உட்பகுதிச் சுவர்களின் சுண்ணாம்பு பூச்சு அகற்றப்பட்டு சிமெந்தினால் பூசப்பட்டது. இவ்வாறு பலவழிகளிலும் மெருகூட்டப்பட்டு யாழ்பாணத்தின் சிறப்புமிக்க ஆலயங்களில் ஒன்றாக விளங்கிய இந்த ஆலயமும் போரின் தாக்கத்திலிருந்து தப்பவில்லை.

1995 ஆம் ஆண்டு வரலாற்று. இடப்பெயர்வின்பின் இடம் பெற்ற குண்டுத்தாக்குதல்களால் கூரைப்பகுதி, சுவர்கள் என்பன சேதமடைந்தன. சுமார் 75 லட்சம் ரூபா கட்டடச் சேதமாகக் கணிப்பிடப்பட்டது. இதிலும் ஓர் அற்புதம் என்னவென்றால் பலத்த சேதமடைந்த போதிலும் புனித அந்தோனியார் திருச்சொரூபமோ கூடோ எதுவித பாதிப்புமின்றிக் காணப்பட்டது இது பக்தர்களை மெய் சிலிர்க்க வைத்தது.

750 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்த பாஷையூரில் அரைவாசி மக்கள் 1996 இல் மீளக் குடியமர்ந்தபோதிலும் ஆலயத்தை புனரமைப்பதில் முழுவீச்சுடன் செயற்பட்டனர். வாரத்தில் ஒருநாள் தமது கடல் வள உழைப்பினை முழுமையாக வழங்கினர். [illegible] பாஷையூர் மக்களின் தாராள உதவியுடனும் மீண்டும் புதுப்பொலிவு பெற்றது.

ஆன்மீகத்துக்கு எதிரான உலகியல் போக்குகளில் இருந்து மக்களை இறைவழி நடத்தும் பணியில் பல குருக்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்துள்ளனர்.

அருட்தந்தையர்களான ரீ.எம்.இராஜநாயகம், பிரான்சிஸ் குலாஸ்,ஜே.ஈ.ஜெயசீலன், எஸ்.எஸ். துரம், எம் டேவிட், சீ.ஜி. ஜெயக்குமார், எரிக்றொசான்,சாள்ஸ் கொலின்ஸ், எம். யேசுரெட்ணம், இ. ஸ்ரலின், ஏ.யாவிஸ் ஆகியோரைத் தொடர்ந்து தற்போது பங்குத் தந்தையாக அருட்திரு றோய் பேடினன் அடிகள் பணியாற்றுகிறார்.

அந்தோனியாரின் வழியில் இயேசுவுக்குச் சாட்சியாக வாழ்வதோடு மட்டுமன்றி கலை, விளையாட்டுத்துறைகளிலும் இந்தப் பகுதி மக்கள் பிரகாசிக்கின்றனர். உதைப்பந்தாட்ட ஜாம்பவனான அன்ரனிஸ் விளையாட்டு அணியினர் பல வெற்றிகளை ஈட்டியுள்ளனர். நாட்டுக்கூத்துக் கலையை பேணிப் பாதுகாக்கும் கலைஞர்கள் இங்கே நிறைந்துள்ளனர். நாட்டுக் கூத்து எழுத்தாளர்கள், அண்ணாவிமார்கள், இசைக் கலைஞர்கள், மரபு, நவீன நாடக நடிகர்கள்,நெறியாழ்கை செய்வோர் பலபுகழ் பூத்த படைப்புக்களை மேடையேற்றி வருகின்றனர் இப் பங்கின் ஞான வளர்ச்சிக்கு சான்றாக பல குருக்கள். கன்னியர்கள் இங்கிருந்து உருவாகியுள்ளனர் முதல் குருவான எல் .இராயப்பு அடிகளைத் தொடர்ந்து பி.பி.பிலிப், பாகிஸ்தான் குவேற்றா மறைமாவட்ட ஆயர் விக்ரர் ஞானப்பிரகாசம், நுவரெலியா பிராந்திய குரு முதல்வர் நேரியோ ஏபிரகாம், ஜே.இளம்பரிதி, பா.பிறாயன் அடிகளார்களும் 10 அருட் சகோதரிகளும் 2 துறவிகளும் இப்பங்கிலிருந்து உதித்துள்ளனர்.

நாவழியா வரம் பெற்ற அந்தோனியாரின் திருப்பண்டம் 2010 ஆம் ஆண்டு பதுவை நகரிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டு வணக்கத்துக்காக வைக்கப்பட்டது. பெருந்திரளான மக்கள் புனிதரின் அழியாத உடற்பாகங்களைத் தரிசித்து நலன்களைப் பெற்றனர்.

நாவழியா வரம் பெற்ற அந்தோனியாரின் திருப்பண்டம் 2010 ஆம் ஆண்டு பதுவை நகரிலிருந்து இங்கே கொண்டு வரப்பட்டு வணக்கத்திற்காக வைக்கப்பட்டது. பெருந்திரளான மக்கள் புனிதரின் அழியாத உடற்பாகங்களைத் தரிசித்து நலன்களைப் பெற்றனர்.

ஆனி 13 என்றதும் அந்தோனியாரின் திருவிழாவை நினைக்கும் அளவிற்கு வடபகுதியிலே சிறப்பாகவும் ஜனத்திரள் மிகுந்ததுமான திருத்தலமாக விளங்குகிறது. வர்ண அலங்காரத்தேரும், பட்டுக் கொடிகளும் மின் அலங்காரங்களும், நேர்த்தியான வழிபாடுகளும் புனிதரின் புகழ் கூறும் பாடல்களும் மக்களைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தி பரலோக மகிமையை உணர்த்துவதற்கு அமைந்திருக்கும். தேரேறி அப்பன் நீ தூய பவனிவரும் நாளதைக் காண்பவர்கள் பேறான பேறுபெற்றோர். தீராத வினை தீர்க்கும் திவ்விய பாலனிடம் பரிந்துரைக்க வேண்டிப் புனிதரின் பதம் நாடி கோடி அற்புதரைப் போற்றி நலன் பெற்று அமைதி காண்போம்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொத்துவிலில் நில அபகரிப்பு

## பாணமை பிரதேசசபைத் தலைவர் குற்றச்சாட்டு

பொத்துவில்,ஜூலை3

இலங்கையில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள அரச படைகள் பெருமளவான காணிகளை கையகப்படுத்தி தமது முகாம்களை விஸ்தரித்துவருவதாகத் தொடர்ந்தும் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுவருகின்றன.

இந்த நிலையில் அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் பிரதேசத்திலுள்ள பாணமை என்ற இடத்திலுள்ள வாவியையும் அதனை அண்மித்த பிரதேசத்தையும் உள்ளடக்கிய சுமார் 800 ஏக்கருக்கும் அதிகமான நிலப் பகுதியை கடற்படையினர் கையகப்படுத்தியுள்ளதாக பாணமை லஹுகல பிரதேச சபைத் தலைவர் இராசையா சந்திரசேன குற்றம் சாட்டியுள்ளார்.

**அரச படைகள் பெருமளவான காணிகளை கையகப்படுத்தி தமது முகாம்களை விஸ்தரித்துவருவதாக தொடர்ந்தும் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுவருகின்றன.**

ஹோட்டல்கள் அமைக்கும் தோரணையில் குறித்த பகுதியில் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று அவர் கூறினார்.

செல்வாக்குமிக்கவர்களின் தேவைக்காக கட்டட நிர்மாணங்களை அமைப்பதற்காகப் படையினரைப் பயன்படுத்தி அரசு தமது பிரதேசங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகளைக் கையகப்படுத்தி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போர் நடைபெற்ற காலத்தில்கூட கடற்படை முகாம் எதுவும் அமைந்திராத பாணமை வாவியை அண்மித்த பிரதேசத்தில் கடற்படையினர் அமைத்துவரும் கட்டட நிர்மாணங்களால் பெருமளவிலான குடும்பங்கள் வாழ்வாதாரங்களை இழந்துவிட்டன என்றும், அந்தப்பகுதியில் சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றனஎன்றும் அவர்தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டின் பாதுகாப்புக்காகப் படைமுகாம்கள் அமைக்கப்பட்டுவருவதாக அரச தரப்பில் கூறப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கார் பந்தய விபத்தில் 2 பேர் சாவு



வென்னப்புவ,ஜூலை3

வென்னப்புவ, ஒவிட்டியாவத்தையில் இடம்பெற்ற கார் பந்தயமொன்றின்போது இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

போட்டியில் பங்குபற்றிய ஜீப் ஒன்றை பந்தயக் களத்திலிருந்து அகற்றியபோது இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அநுராத உமயாங்க (வயது-20) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இரேஷ் பெரோ (வயது-23) காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இந்த இருவரும் பாணந்துறைப் பிரதேசத்திலிருந்து குறித்த போட்டிகளைப் பார்வையிட வந்தவர்களாவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தின் போது அதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட மேலும் இருவர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச)

## இந்தியப் பெண்களுக்கு விளக்கமறியல்

கல்முனை நகரில் இரண்டு இந்தியப் பெண்கள் கைது செய்யப்பட்டு கல்முனை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து கல்முனை நகரில்புடைவைவியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இரு பெண்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த இரு இந்தியப் பெண்களும் கல்முனைப் பொலிஸாரால் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே நீதிவான் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசியல் பின்னணியுடன் செயற்படும் ஆயுதக் குழுக்கள் மட்டக்களப்பில்

### போர் முடிவுற்ற பின் முஸ்லிம் குழுக்களும்

மட்டக்களப்பு,ஜூலை3

மட்டக்களப்பில் அரசியல் பின்னணியுடன் செயற்படும் ஆயுதக் குழுக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் குழுக்களில் சுமார் 150 பேர் அங்கம் வகிக்கின்றனர் என்றும் இராணுவப் புலனாய்வு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. இதில் பல்வேறு முஸ்லிம் குழுக்களிலும் சுமார் 90 பேர் அங்கம் வகிக்கின்றனர் என்றும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்த ஆயுதக் குழுக்களில் சில முன்னர் விடுதலைப் புலிகளுடன் இணைந்திருந்தன. விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இந்தக் குழுக்கள் தனித்து இயங்கி வருகின்றன.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமையிலும் சில ஆயுதக் குழுக்கள் இயங்கி வருகின்றன எனக் கூறப்பட்டாலும் அந்தக் கட்சி அதனை நிராகரித்துள்ளதுடன், தாம் எல்லா ஆயுதங்களையும் 2010 பெப்ரவரி மாதமே கையளித்துவிட்டதாகவும் கூறியுள்ளது.

பல முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் போர் முடிவுக்கு வந்த பின்னரே உருவாகியுள்ளன என்றும் இராணுவப் புலனாய்வு வட்டாரங்கள் கூறுகின்றன. (ச)

## இளைஞன் சாவு

மட்டக்களப்பு,ஜூலை3

சிகிரியாப் பகுதியிலுள்ள குளமொன்றில் நண்பர்களுடன் நீராடிய இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். மட்டக்களப்பு, சந்திவெளியைச் சேர்ந்த குணநாதன் அச்சுதன் (வயது 17) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

சிகிரியாப் பகுதியில் தொழில் புரிவதற்காக கடந்த 20 நாள்களுக்கு முன்னர் இவர் அங்கு சென்றிருந்தார் என்று உறவினர்கள் தெரிவித்தனர். (ச-31)

## ஆஸ்திரேலியா செல்ல முயன்ற ஆறு பேர் கல்குடாவில் கைது

எருவில்,ஜூலை3

ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்ல முற்பட்ட 6 இலங்கையர்கள் மட்டக்களப்பு - கல்குடா - கருங்காலச்சோலை, அலியாகல கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்குடா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகளால் நேற்று திங்கட்கிழமை அதிகாலை ஒரு மணிக்கு மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஆறு பேரும் வாழைச்சேனைப் பகுதியைச் சேர்ந்த 18 தொடக்கம் 34 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆள்கடத்தலின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்று கல்குடா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-31)



நவீனமயப்படுத்தப்பட்ட நாவலப்பிட்டி ஜயத்திலக்க விளையாட்டு மைதானம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. இந்தநிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டு நினைவுக்கல்லைத் திரைநீக்கம் செய்துவைக்கின்றார்.

## மக்கள் தேவைகளை கேட்டறியும் கலந்துரையாடல்

மட்டக்களப்பு,ஜூலை3

மட்டக்களப்பு மாவட்டத்தின் மரப்பாலம், சின்னபுல்லுமலை, கோப்பாவெளி, இராஜாபுரம் ஆகிய கிராம மக்களின் தேவைகளைக் கேட்டறியும் கலந்துரையாடல் இராஜபுரம் விஷ்ணு ஆலய முன்றிலில் நடைபெற்றது.

குறித்த கிராமங்களைச் சேர்ந்த தலைவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் இந்தக் கிராமங்களின் உடனடித் தேவைகள் ஆராயப்பட்டன.

இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்களின் அத்தியாவசியத் தேவைகளாக வீடுகள் மற்றும் குடிதண்ணீர் பிரச்சினை ஆகியன உள்ளன.

இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்ட முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், இதற்கான நடவடிக்கைகளை தான் உடனடியாக மேற்கொள்வதாக உறுதியளித்தார். (ச-31)

# மாணவரின் கல்வித் தரத்தை உயர்த்த பெற்றோரின் அர்ப்பணிப்பு தேவை

### பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவிப்பு

நுவரெலியா, ஜூலை 3

கல்வியின் சிறப்பு, நன்மை பற்றி ஒரு தூரநோக்கையும், தெளிவையும் பாடசாலைகளில் இடைநிலையிலேயே மாணவர் மனதில் விதைக்க வேண்டும். அவர்களுக்கு இதுபற்றிய வழிகாட்டல்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் முன்னைய மாணவர்களின் உயர்ச்சி நிலைகள் பற்றிய மாதிரிகள் காட்டப்பட வேண்டும்.

அதன் மூலமே கல்வியில் முழுமையடைந்த சமூகமாக எமது சமூகத்தைக் காணமுடியும். இதற்கு அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் புத்திஜீவிகள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

அண்மையில் வெஸ்டன் பிரிவு மற்றும் கோல்டன் பிரிவு ஆகிய தோட்டங்களுக்கு புதிய மின் இணைப்பை மக்கள் பாவனைக்காக வழங்கிவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியா போன்ற நாடுகள் இன்று பல மடங்கு கல்வியில் உயர்ந்துசென்றுள்ளன. அங்கு மாணவர்களுக்கு உயர்கல்வி பல்துறை சார்ந்ததாக பரந்து விரிந்து கிடக்கிறது. அத்துடன் வாய்ப்புகளும் நிறையவே உள்ளன.

மலையகப் பாடசாலைகளைப் பொறுத்தவரை மாணவர்களை கணித, விஞ்ஞான, சட்ட மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறைகளுக்கு இட்டுச்செல்ல வேண்டிய தேவை உள்ளது. கல்வியில் ஏற்படும் உயர்வானது சமூகத்தினதும், தனது குடும்பத்தினதும், நாட்டினதும் உயர்வாகும். நாம் ஒவ்வொருவரும் கல்வியை முறையாகக் கற்று முன்னேறினால் யாருக்கும் அடிமையாக வாழ வேண்டியதில்லை. சுயமாகவோ, அரச துறையிலோ வேலைகளைச் செய்வதற்கு கல்வி மிகமிக முக்கியம்.

அபிவிருத்திகள் குறைவாக இருந்தாலும் கிடைக்கும் அபிவிருத்தித் திட்டங்களை வைத்து அதற்கேற்ப வாழப் பழகிக் கொள்வதுடன் குறைகளை கூறிக்கொண்டு இருக்காமல் அரசினால் வழங்கப்படும் சலுகைகளைச் சரியாக பயன்படுத்தி ஏனைய சமூகத்தை விட உயர்வாக வாழவேண்டும்.- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அடுத்தடுத்து பணிகள் இருந்தபோதும், உற்சாகமாகச் செய்து முடிப்பீர்கள். வெளியூர்களில் இருக்கும் சிலரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு முக்கிய விடயங்களைப் பேசுவீர்கள். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். பற்றாக்குறை தீரும் வகையில் பணவரவுகளைப் பெறலாம். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**இடபம்:** செய்ய வேண்டாம் என்று பிற்போட்ட சில வேலைகளை மீண்டும் செய்வீர்கள். உத்தியோக சூழ்நிலை ஆறுதல் தருவதாக அமையும். வீண் பேச்சுக்கள்பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். உறவினர்கள் உங்களிடம் அன்பாக நடந்து கொள்வர். நீங்கள் எதிர்பாராத சில தரப்பிலிருந்து உங்களுக்கு உதவி கிடைக்க வாய்ப்புண்டு.

**மிதுனம்:** வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி, உற்சாகம் தரலாம். நீண்ட நாள்களாகச் சந்திக்காத சிலரைச் சந்திக்கலாம். அடுத்த சில தினங்களுக்குப் பின் வரும் என்று நினைத்த பணவரவு ஒன்று இன்றே வந்து சேரும். நண்பர்கள் சிலருடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படும் கவனம்.

**கடகம்:** தந்தை வழியில் மனஸ்தாபம் வராமல் இருக்க, விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டும். சில விடயங்களில், முன்னெச்சரிக்கையுடன் செயற்படாததன் மூலம் இழப்புகளைச் சந்திக்கலாம். வெளியூரில் இருக்கும் ஒருவரை, தொலைபேசியில் தொடர்பு கொண்டுபேச முற்பட்டு, அவர்கள் இல்லாமல் போகலாம். மற்றவர்களை நம்பி எதையும் செய்ய வேண்டாம்.

**சிங்கம்:** மற்றவர்கள் மதிக்கும் வகையில் எந்தக் காரியத்தையும் செய்ய நினைப்பீர்கள். உங்களின் கடந்தகால செயற்பாடு ஒன்றை, மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். உங்களுக்கு வேண்டிய காரியம் ஒன்றைச் சாதிக்க மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள்.

**கன்னி:** நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர், உங்களைத் தேடி வருவார். தொழில், வியாபார ரீதியாக வரவேண்டிய பணவரவுகளைப் பெறுவீர்கள். உறவினர் ஒருவர் ஆதாயம்பெற, நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம்.

**நாளை**

ஆனி 20 புதன்கிழமை 04.07.2012
திதி: பிரதமை மு.இ. 11.18 வரை
நட்சத்திரம்: பூராடம் பி.ப. 03.58 வரை
சுபநேரம்:04.27- 05.57 வரை
ராகு காலம்: 11.57- 01.27வரை

**துலாம்:** சில விடயங்கள் குறித்து பெரியளவில் கற்பனை செய்து, அது நடக்காமல் போகலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்பீர்கள். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். நீண்ட நாள்களாகப் பிற்போட்ட வெளியூர் பயணங்களை மேற்கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** மற்றவர்களின் விமர்சனம், நக்கல் பேச்சுக்களுக்கு ஆளாகலாம். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு, அதிகமாகச் செலவாகும். சக ஊழியர்கள் விடுமுறையால், அதிக வேலைப்பளு ஏற்படும். நீங்கள் சில தவறுகளைச் செய்துவிட்டு, அது தெரியாமல் மற்றவர்களிடம் சண்டை போடலாம். வெறுப்பு உண்டாகும்.

**தனுசு:** மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். சில விடயங்களில் புத்திசாலித்தனமாகச் செயற்படுவதன் மூலம், கூடுதல் ஆதாயம் பெறுவீர்கள். நண்பர்களுடன் சில விடயங்களை கலந்து ஆலோசிப்பீர்கள். அலைச்சல் இல்லாமல் சில வேலைகளை சுலபமாக முடிக்கும் வாய்ப்பு கிட்டும்.

**மகரம்:** மற்றவர்களை நம்பி எந்தக்காரியத்திலும் இறங்க வேண்டாம். வெளியிடங்களுக்குச் செல்லும்போது, நண்பர் ஒருவரை எதிர்பாராமல் பார்க்க நேரிடும். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருக்கும். உடல் ரீதியாக சில உபாதைகள் இருந்தாலும், அதைப்பொருள் படுத்தாமல், சில வேலைகளைச் செய்ய நேரிடலாம்.

**கும்பம்:** வேலை நெருக்கடிகளால் வெறுப்பு, விரக்தி உண்டாகும். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு, சில காரியங்களில் இறங்கிவிட்டு, அவதிப்படுவீர்கள். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, உடனுக்குடன் வாகனங்கள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். மற்றவர்களுக்காகச் செலவிடலாம்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் எதிர்பாராத வெற்றி கிடைக்கும். மற்றவர்கள் பாராட்டும் வகையில், எந்தக்காரியத்தையும் செய்ய முற்படுவீர்கள். உறவினர் ஒருவர் வழியில் எதிபார்த்த உதவி கிடைக்கும். பெண்கள் விடயங்களில் பட்டும் படாமல் நடக்கவும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | | | 1 | 6 | | 3 |
| 8 | | 2 | | | | | 9 | |
| | 6 | 7 | 4 | | | 2 | | 5 |
| 2 | | | 8 | | | | 5 | |
| 7 | 8 | 5 | | | | 9 | 1 | 6 |
| | 9 | | | | 5 | | | 2 |
| 6 | | 1 | | | 8 | 3 | 2 | |
| | 7 | | | | | 5 | | 9 |
| 5 | | 9 | 7 | | | 1 | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 4 | 9 | 5 | 3 | 1 | 7 | 6 |
| 5 | 6 | 9 | 7 | 2 | 1 | 4 | 8 | 3 |
| 7 | 1 | 3 | 6 | 8 | 4 | 9 | 5 | 2 |
| 3 | 9 | 7 | 1 | 4 | 8 | 2 | 6 | 5 |
| 8 | 5 | 1 | 2 | 3 | 6 | 7 | 9 | 4 |
| 4 | 2 | 6 | 5 | 7 | 9 | 8 | 3 | 1 |
| 1 | 3 | 8 | 4 | 6 | 7 | 5 | 2 | 9 |
| 9 | 7 | 5 | 3 | 1 | 2 | 6 | 4 | 8 |
| 6 | 4 | 2 | 8 | 9 | 5 | 3 | 1 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# ஈரவிழிகளுடன் பன்னிரண்டு திங்கள் நகர்ந்தபோதும் நினைவில் நிற்கும் உங்கள் திருமுகம்

தோற்றம் 01 ★ 04 ★ 1918



மறைவு 05 ★ 11 ★ 2006

தோற்றம் 01 ★ 09 ★ 1920



மறைவு 14 ★ 07 ★ 2011

## நாகமுத்து வேலுப்பிள்ளை

## வேலுப்பிள்ளை சின்னம்மா

என்றும் அழியாது அலைகள் திரும்பாது தாயே!
எம்முன் தோன்றிநிற்கும் உங்கள் திருமுகம்
இன்னும் புன்னகைப்பதுதான் நினைவு அலைகளாக
வாழ்வென்னும் பயணத்தில் மானிடத்தின்
ஒருவராகி வந்த பயணிகளில் ஒன்றாகி
வாழ்வை முடித்து வெகு தூரம் சென்றுவிட்டீர்கள்
உங்கள் உளநேசிப்பும் இன்றும் கூட
அவரவர் மனங்களில் வண்ணமலராய் பெருங்கதையாய்
போய் வருக மீண்டும் பிறப்புண்டேல் எம் மிடமே வந்திடம்மா எங்கள் கண்ணீர் என்றும்
உங்களுக்கே சமர்ப்பணம்

இன்று (03.07.2012) செவ்வாய்க்கிழமை எமது பெற்றோரின் ஆண்டு திதியை முன்னிட்டு எமது இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம். (இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

பழையதோட்டம்,
கம்பர் மலை, வல்வெட்டித்துறை.

**குடும்பத்தினர்.**

(19958)(45.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் வடக்குக்கான அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதற்குத் தேவையான கேள்வி அறிவித்தல் நடவடிக்கைகளை இந்த வருட முடிவுக்குள் பூர்த்திசெய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். அந்த நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர்களையும் அரச அதிகாரிகளையும் இங்கு காணலாம்.

## விழுந்தது மின் கம்பம் விடுமுறையில் மாணவர்

கொழும்பு,ஜீலை 3

கந்தப்பளை மெதடிஸ் தமிழ் கல்லூரியில் மின் கம்பம் சரிந்து வீழ்ந்ததால் ஏற்படவிருந்த மின்சார இடர் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட் டுள்ளது.

நேற்றுக் காலை மாணவர்கள் கல்லூரிக்கு வருகை தருகையில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ள தாகவும் கல்லூரியின் நிர்வாகத்தினூடாக கந்தப் பளைபொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து இலங்கை மின்சாரசபை கட்டுப்பாட்டு பகுதியினர் விரைந்து நடவடிக்கை மேற் கொண் டனர் என்று கல்லூரியின் அதிபர் மகேஸ் வரன் தெரிவித்தார்.

அதேவேளை கல்லூரியின் பிரதான மண்டபத்தின் கூரைப்பகுதியில் மின்கம்பிகள் விழுந்து காணப்படுவதனால் அம்மண் டபத்தில் கல்வி நடவடிக்கை நிறுத்தப்பட்டு மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட் டுள்ளது. ஏனைய வகுப்பு மாணவர்களுக்கு வழமையான வகுப்பு நடைபெறுவதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

## மேல் மாகாண சபையிலிருந்து எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

கொழும்பு,ஜூலை 3

மேல்மாகாண சபையில் நேற்று திங்கட்கிழமை கொண்டுவரப்பட்ட காணி சீர்திருத்த சட்டமூல பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சிகள் வெளி நடப்புச் செய்துள்ளன.

இந்த விடயம் தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணியின் குழுத்தலைவர் குமர குருபரன் தெரிவிக்கையில்:-

காணி சீர்திருத்தச் சட்ட மூலம் தொடர்பான பிரேரணைக்கு மாகாண சபைகளின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான பிரேரணை நேற்று மேல் மாகாணசபையில் கொண்டு வரப்பட்டது. இதனை ஐக்கிய தேசியக் கட்சி உட்பட எதிர்க்கட்சிகள் கண்டித்ததுடன் சபையிலிருந்தும் வெளிநடப்புச் செய்துள்ளன.

ஏற்கனவே மாகாண சபைகளுக்கு இருக்கின்ற அதிகாரங்களை அரசு பறிக்க முற்படுவதாக கண்டனத்தை வெளிப்படுத்தினோம்.

ஜனாதிபதி சட்டத்தரணி ஸ்ரீநாத் பெரேரா மற்றும் சிரால் லக்திலக போன்றோரும் இந்த பிரேரணையில் உள்ள சட்டச் சிக்கல்கள் தொடர்பில் தமது அதிருப்தியைத் தெரிவித்திருந்தனர் - என்றார். (ச)

# குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை வேட்பாளர் பட்டியலில் சேர்க்காதீர்

## பவ்ரல் அமைப்பு கோருகிறது

கொழும்பு,ஜூலை 3

குற்றச் செயல்களில் ஈடுபட்ட நபர்களுக்கு வேட்பாளர் பட்டியலில் இடமளிக்க வேண்டாம் என்று இலங்கையின் முன்னணி தேர்தல் கண்காணிப்பு நிறுவனமான பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

**ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள், போதைப் பொருள் வர்த்தகம், குற்றச் செயல்களில் ஈடுபட்ட வர்களுக்கு வேட்பாளர் பட்டியலில் சந்தர்ப்பம் அளிக்க வேண்டாம்**

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள், போதைப் பொருள் வர்த்தகம், குற்றச் செயல்களில் ஈடுபட்ட வர்களுக்கு வேட்பாளர் பட்டியலில் சந்தர்ப்பம் அளிக்க வேண்டாம் என்று நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளின் செயலாளர்களிடம் பவ்ரல் அமைப்புக் கோரியுள்ளது.

இதையும் தாண்டி குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் வேட்பாளர்களாக களமிறங்கினால் அவர்களை மக்கள் தமது பிரதிநிதிகளா கத் தெரிவு செய்வது குறித்து சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும். என்று பவ்ரல் அமைப்பின் தலைவர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்தார். கல்வித் தகைமை, அரசியல் நோக்கம், நன்னடத்தை மற்றும் சமூக அந்தஸ்து ஆகிய காரணிகளைகருத்திற் கொண்டு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச)

## சிறைச்சாலை பிரச்சினையைத் தீர்க்க ஒத்துழைப்பு

கொழும்பு,ஜூலை3

சிறைச்சாலைகளில் நிலவி வரும் சனநெரிசல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைச் சிறைச்சாலைகளில் அதிகளவு சன நெரிசல் நிலைமை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப் படுகின்றது.

இதனால் சிறைச்சாலை அதிகாரிகளும், கைதிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

சிறைச்சாலைகளில் அதிகளவான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை நெருக்கடி நிலைமையை ஏற்படுத்தியுள்ளதாக அரசு ஒப்புக் கொண்டுள்ளது. போதியளவு இடவசதியின்றி கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதனால் பல்வேறு மனிதாபிமான பிரச்சினைகள் ஏற் பட்டுள்ளன.

இலங்கை சிறைச்சாலை கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் சனநெரிசல் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க முடியும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ச)

## அரச சொத்தைப் பயன்படுத்தி தேர்தலில் வெற்றியீட்ட முயற்சி

### அனுரகுமார எம்.பி.குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 3

அரச சொத்துக்களைப் பயன்படுத்தி தேர்தலில் வெற்றியீட்டவே அரசு முயற்சித்து வருவதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஒட்டுமொத்த அதிகாரத்தையும் வளங்களையும் திரட்டித் தேர்தல்களில் வெற்றியீட்டுவதே அரசு தந்திரோபாயமாக செயற்படுகின்றது. இதன் காரணமாகவே அரசு மாகாண சபைத் தேர்தல்களை கட்டம் கட்டமாக நடத்துகின்றது. கிழக்கு, வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னதாகவே தேர்தல் நடத்தப் படுகின்றது.

நாட்டில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டும். வாழ்க்கைச் செலவுகுறைக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் விருப்பமாக அமைந்துள்ளது. கடந்த தடவையும் அரசு பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னதாகவே மாகாண சபைகளைக் கலைத்துள்ளது. மாகாணசபை முறைமைக்கு ஜே.வி.பி. எதிர்ப்பை வெளியிட்ட போதிலும், தற்போதைய அரசியல் பின்னணியில் தேர்தலில் போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது- என்றார். (ச)

## குடிதண்ணீருக்கும் போராட்டமா...?

கொழும்பு,ஜூலை 3

புத்தளம் மாவட்டத்துக்கு உட்பட்ட ஆனமடுவ, நவகத்தேகம, மஹாகும்புக் கடவல, வனாத்தவில்லு மற்றும் முந்தல் பிரதேசங்களில் தொடரும் வரட்சியான காலநிலை காரணமாக பொதுமக்களின் குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப் படுகின்றது.



வாவிகள், குளங்கள், கிணறுகள் வற்றியுள்ள நிலையில்பெரும் சிரமங்களுக்கு மத்தியில் மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## மினி சூறாவளி; பறந்தது கூரை

கொழும்பு,ஜூலை 3

நீர்கொழும்பு, கட்டானை பிரதேசத்தில் வீசிய மினி சூறாவளி காரணமாக 19 வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.40 மணிக்கு மினிசூறாவளி வீசியது. இதன் காரணமாக அனோமா வத்தையில் 16 வீடுகளின் கூரைகளும், டொன்டேவிட் மாவத்தையில் 3 வீடுகளின் கூரைகளும் பாதிப்படைந்துள்ளன.

கம்பஹா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் அஜித் நிசாந்த சந்திரசிறி, கதிரான கிராம அலுவலகர் பிரான்ஸிஸ் குமாரசிங்கவும் நேற்று திங்கட்கிழமை சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டனர். (ச)

# மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு சிறந்த அரசியல் சூழல் வேண்டும்

## முன்னாள் இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 3

மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய ஓர் அரசியல் சூழ்நிலையை உருவாக்க வேண் டியது அவசியமானது என்று முன்னாள் இராணு வத் தளபதி சரத்பொன்சேகா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களின் போது எனது புகைப்படத்தை காட்சிப்படுத்தி திரைப்படங்கள் கூடத் தயாரிக்கப்பட்டன. நான் ஹிட்லரைப் போன்றோ அல்லது இடி அமீனைப் போன்றோ ஆட்சி செய் வேன் என அந்தப் படங்களில் சித்திரிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறு பிரசாரம் செய்த நபர்கள் ஹிட்லரை சிறையில் அடைத்தார்கள். உண்மையில் ஹிட்லரும், இடிஅமீனும் இராணுவ ஜெனரல்கள் அல்ல என்பதனைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஹிட்லரும், இடிஅமீனும் இராணுவத்தில் மிகச் சிறிய பதவிகளை வகித்தவர்கள். சூழ்ச்சித் திட்டங்களின் மூலம் அதிகாரத்தைக் கைப் பற்றிப் பின்னர் ஜெனரல் பதவிகளை பெற்றுக் கொண்டவர்கள். இடி அமீன் இராணுவத்தில் கடமையாற்றிய சமையற்காரரில் ஒருவராவார்.

எனினும், இராணுவ ஜெனரல்கள் உலகின் முக்கிய நாடுகளில் வெற்றிகரமாக ஜனாதிபதி பதவிகளை வகித்துள்ளனர்- என்றார். (ச)

## தயா, ஜோர்ஜ் மாஸ்டர்கள் குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையில்லை

### இரகசிய பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 3

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஊடகப் பேச்சாளராகக் கடமையாற்றிய வேலாயுதம் தயாநிதி எனப்படும் தயா மாஸ்டர் மற்றும் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றிய வேலுப்பிள்ளை குமார் பஞ்சவர்ணம் எனப்படும் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகிய சந்தேகநபர்கள் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சட்ட மா அதிபரின் ஆலோசனை இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்று இரகசிய பொலிஸார் கொழும்பு பிரதான நீதிவான் ரஸ்மி சிங்கப்புலியிடம் தெரிவித்தனர்.

இந்தச் சந்தேகநபர்கள் குறித்து விசாரணை நடத்தி அதன் அறிக்கை 2011 ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி சட்ட மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டதாக இரகசியப் பொலிஸார் நேற்று திங்கட்கிழமை நீதிமன்றில் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் குறித்து சட்ட மா அதிபரின் ஆலோசனையை விரைவில் பெற்று அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்த கொழும்பு பிரதான நீதிவான் ரஸ்மி சிங்கப்புலி வழக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கண்காணிப்புக் குழுக்கூட்டம்

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் நிறுவனத் தலைவர்களுக்கான ஜூலை மாதத்துக்கான மாவட்ட கண்காணிப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (16-51)

# விளம்பரங்களைக் காட்சிப்படுத்த யாழ். நகரில் 25 இடங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை 3

யாழ். மாநகர எல்லைப்பகுதிகளில் சுவரொட்டி விளம்பரங்களைக் காட்சிப்படுத்துவதற்கு பிரத்தியேகமாக 25 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அறிவித்துள்ளார்.

இந்த இடங்களில் விளம்பரங்களைக் காட்சிப்படுத்த விரும்புபவர்கள் யாழ். மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியினருடன் தொடர்புகொண்டு அனுமதி பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நகரின் அழகைக் கெடுக்கும் வகையில் எந்தவித விதிமுறைகளுமின்றி நகரின் முக்கிய பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருகின்றன. இதனால் பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைத் தடுக்கும் வகையிலும் நகரின் அழகைப் பாதிக்காத வகையிலும் சுவரொட்டி விளம்பரதாரரின் நன்மை கருதியும் முக்கிய 25 இடங்கள் இனம் காணப்பட்டு அங்கு விளம்பரப் பலகைகள் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (10-16)





## நீர்வேலி மேற்கு
## மாலை வைரவர் வருடாந்த பொங்கல் விழா

மேற்படி ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா

எதிர்வரும் (06.07.2012) வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்கு பூஜை ஆரம்பமாகி மறுநாள் (07.07.2012) சனிக்கிழமை காலை 9 மணிக்கு நிறைவுபெறும் என்பதனை அடியார்களுக்கு அறியத்தருகிறோம்.

குறிப்பாக கிடாய் வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(20000) (45.6) **ஆலய பரிபாலனசபை.**

## மாடி வீடு வாடகைக்கு

கோயில் வீதியில் அமைந்துள்ள மாடி வீடு (தனியார் நிறுவனங்களுக்கு உகந்தது) வாடகைக்குக் கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 6435081

(20006) (45.6)


## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலக திட்டமிடல் பிரிவில் அபிவிருத்தி உதவியாளராகக் கடமையாற்றும் **செல்வி நா.கவிதாங்கனி** அவர்களின் அன்புத் தந்தை **கந்தையா நாகேந்திரம்** அவர்களின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**யாழ்.பிரதேச செயலக நலன்புரி சங்கம், யாழ்ப்பாணம்.**

(20002) (2-6)

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23.03.1944

மறைவு 28.06.1999

செல்வி

### பரமேஸ்வரி செல்லத்துரை

திதி:பூரணை(03.07.2012)

அன்பின் பிறப்பிடமே அமைதியின் திருவுருவே
உறவுகளை ஒன்றாக்கி வாழ வைத்த தெய்வமே
எல்லோரையும் நல்வழிப்படுத்திய உத்தமியே
ஆண்டுகள் பதின்மூன்று ஓடி மறைந்தாலும்
உங்கள் திருவுருவம் எமது மனதை விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தி பெறத் தென்கோவை
வீரபத்திரரைப் பிரார்த்திக்கின்றோம்.

- உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

'தாயகம்', கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(20003)(2-6)

## 29 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 15.06.1933

மறைவு 05.06.2012

### திருமதி பொன்னம்பலம் மனோன்மணி

கடந்த 05.06.2012 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (03.07.2012) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அன்றைய தினம் அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுவதுடன் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு, கொக்குவில். (20004)(2-6) - குடும்பத்தினர்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னையின் மடியில் 29★03★1975

ஆண்டவன் தாளில் 21★05★2012

### அமரர் நவரத்தினம் சிறீஸ்குமார்

(கிராம அலுவலர், நெல்லியடி கிழக்கு, (ஜே/377) கரவெட்டி)

எமது வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து (21.05.2012) அன்று இறைவனுடன் ஐக்கியமடைந்த எமது குல விளக்காகிய நவரத்தினம் சிறீஸ்குமார் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்தும், ஆறுதல்மொழி கூறியும், மலர் மாலைகள் அணிவித்தும், மலர் வளையங்கள் வைத்தும், அஞ்சலி செலுத்தியோருக்கும், அன்னாருக்கு இரங்கல் உரை நிகழ்த்திய அன்பு நெஞ்சங்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டோருக்கும், அஞ்சல் தந்தி, தொலைபேசி மூலம் இரங்கல் செய்தி தெரிவித்தோருக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கியோருக்கும் உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் நினைவாக நாளை (04.07.2012) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அராலி வீதி, சங்கானை. (20000)(45.6) குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 21 ★ 03 ★ 1931



அரன் அடியில் 04 ★ 06 ★ 2012

### அமரர் பொன்னர் அண்ணாமலை

அன்புள்ள அப்பாவே
கண் இமை போன்ற காவலரே
எங்கள் இதயங்கள் அழும் ஓசை
உங்கள் செவிகளுக்கு கேட்குமா


எமது குடும்பத்தலைவர் (04.06.2012) அன்று சிவபதம் அடைந்த செய்தி கேட்டு உடன் வந்து பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், உள்நாடு, வெளிநாடுகளில் இருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர்அஞ்சலி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன்

இன்று (03.07.2012) எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

மகாத்மா வீதி,
அல்வாய் வடக்கு, அல்வாய் (18678)(6-8) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன்கூடிய காலநிலை நிலவும்.

# பிரிட்டன் பிரஜைக்கான தேர்வு பரீட்சையில் புதிய மாற்றங்கள்

பிரிட்டன் வாசிகளாக விரும்பும் வெளிநாட்டினருக்காக நடத்தப்படும் லிப் இன் யூகே (LIVE IN UK) என்ற தேர்வில் மாற்றங்களைக் கொண்டு வர பிரிட்டன் தீர்மானித்துள்ளது.

பிரிட்டனில் வாழ்வதற்குரிய நடைமுறை விடயங்களில் செலுத்தப்பட்ட கவனத்தைக் குறைத்துக் கொண்டு பிரிட்டனின் சரித்திரம் மற்றும் சாதனைகள் தொடர்பில் அதிக தகவலறிவு தேவை என்பது போன்ற மாற்றங்களை இந்தப் பரீட்சையில் கொண்டுவரத் திட்டமிடப்படுகிறது.

பிரபல ஆங்கில நாடகஆசிரியர் வில்லியம் ஷேக்ஸ்பியர், நெப்போலியனை போரில் வென்ற டியூக் ஓஃப் வெலிங்டன், கவிஞர் பைரன் போன்றோர் பற்றி பிரிட்டன் வாசியாக விரும்பும் வெளிநாட்டினர் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

டிரஃபால்கர் உட்பட பிரிட் டனின் சரித்திரத்தில் இடம்பெற்ற முக்கிய போர், பிரிட்டன் விஞ்ஞானிகளின் முக்கிய கண்டுபிடிப்புகள், கலை மற்றும் இலக்கியத்துறையில் முக்கிய பங்களிப்பு ஆற்றியவர்கள் ஆகியோர் பற்றி இந்தப் பரீட்சையில் கேள்விகள் கேட்கப்படும்.

இந்தப் பரீட்சை 2005 ஆம் ஆண்டு தொழிற்கட்சி அரசால் அறிமுகப்படுத்தப் பட்டிருந்தது. இதுவரையில் இருந்து வந்த பரீட்சையில், பிரிட்டன் வாசிகளுக்கு எவ்விதமான அரச சலுகைகள் உள்ளன, எவ்விதமான மனித உரிமைகள் உள்ளன என்பது போன்ற விடயங்களில் அதிக கேள்விகள் கேட்கப்பட்டன.

தற்போது வரக்கூடிய பரீட்சை எழுதுவதற்கு பிரிட்டன் தேசிய கீதத்தின் முதல் அத்தியாயமும் தெரிந்திருக்க வேண்டும்.

45 நிமிடங்கள் நடக்கக்கூடிய இந்தப் பரீட்சையை பிரிட்டனில் தொண்ணூறு மையங்களில் எழுதலாம். புதிய பாடத்திட்டத்துடன் கூடிய பரீட்சை ஆயத்த புத்தகம் இன்னும் சில மாதங்களில் வெளியாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ)

## சமய சந்நிதிகளில்

அராலி கிழக்கு பட்டான் வளவு வாலையம்பாள் ஆலய புனராவர்த்தன பஞ்சகுண்டபிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம், நாளை புதன்கிழமை மாலை 4மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 7 ஆம் திகதி முற்பகல் 6 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.41 மணி தொடக்கம் 10.41 வரை கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (வ)

* * *

அல்வாய் வடக்கு, வட்டிக்கவளை முருகப்பெருமான் விறுமர் ஆலய வருடாந்தப் பொங்கல்விழா நாளை புதன் கிழமை காலை நடைபெற்று . விசேட அபிஷேகம், ஆராதனையுடன் நிறைவேறும். (வ-8)

* * *

கெற்பேலி கிழக்கு் தரவையம்பதி ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை இடம் பெற்று தொடர்ந்து கொடியேற்றம் ஆரம்பமாகி 12 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறும்.இதன் ஆரம்பக் கிரியைகள் கடந்த மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாகி நடை பெற்று வருகின்றன. இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (வ-14)

## குரு பூர்ணிமா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ். சத்தியசாயிசேவா நிலையத்தில் குருபூர்ணிமா நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது. காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து வேதபாராயணம், காயத்திரி மந்திரம், பஜனை, தியானம், விசேட சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் விசேட நிகழ்வாக இடம்பெறும் சொற்பொழிவை ''நவீன உலகில் ஆன்மிகமும் விஞ்ஞானமும்'' எனும் தலைப்பில் இ. அபிசேக் நிகழ்த்துவார். (வ-14)

## சகஜ யோக வகுப்புகள் வெள்ளியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

மலேசியா, ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா உட்பட பல நாடுகளைச் சேர்ந்த 20 இற்கும் மேற்பட்ட சகஜயோகிகள் கொண்ட குழுவினரால் இலவச சகஜயோக வகுப்புகள் எதிர்வரும் 6 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் பல இடங்களிலும் நடைபெறவுள்ளன.

சகஜயோக எளிமையான தியானமுறை மூலம் மன அழுத்தம், எதிர்மறை எண்ணங்கள் நீக்கமடைந்து உடல், உள ஆரோக்கியத்தைப் பெறமுடியும் என மருத்துவ ரீதியாகக் கண்டறியப்பட்டுள்ளதால் கடந்த 40 வருடங்களாக உலகின் பல பாகங்களிலும் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்துள்ளது.

அத்துடன் கடந்த ஏப்ரல் மாதம் 23 நாடுகளைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட யோகிகள் கலந்துகொண்டு மலேசியாவில் விசேட நிகழ்வொன்றை நடத்தியுள்ளனர்.

எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மற்றும் கொட்டாஞ்சேனை கமலாமோடி மண்டபத்திலும், யாழ்ப்பாணம்,கைதடி, திருகோணமலை, மட்டக்களப்பு, கண்டி, ஹற்றன், நுவரெலியா ஆகிய இடங்களிலும் இலவச சகஜயோக வகுப்புகளும், செய்முறைப் பயிற்சிகளும் நடைபெறவுள்ளன. (வ-14)

## பாலர் பாடசாலை விளையாட்டு விழா

இணுவில் மஞ்சத்தடி விவேகானந்தா முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இணுவில் மஞ்சத்தடி முருகன் கோயில் அருகில் நடைபெறவுள்ளது. முன்பள்ளியின் முகாமைத்துவக்குழு தலைவர் க.தர்மநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் க. சிவகரன் கலந்து கொள்வார். (ம-14)

* * *

பருத்தித்துறை- கட்டைவேலி சேகர மெதடிஸ்த திருச்சபையினால் நடத்தப்படும் பாலர் பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு, பருத் தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சேகர முகாமைக்குரு அருட் திரு எஸ். டபிள்யூ. தேவகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு யாழ், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட திட்ட இணைப்பாளர் தயாபரன் ஜைல்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (வ-8)

## சாவகச்சேரியில் புதிய தொகுதி கடைகள் திறப்பு

தென்மராட்சி, ஜூலை 3

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்ட 5 பழக்கடைத் தொகுதியும், தனங்கிளப்பு வீதியில் நிர்மாணிக்கப்பட்ட ஆறு இறைச்சிக்கடைத் தொகுதியும் நேற்று முன்தினம் தலைவர் இ.தேவ சகாயம்பிள்ளையினால் திறந்து வைக்கப்பட்டன.

பொதுச் சந்தையில் இயங்கிய அப்பிள், ஒரேஞ், திராட்சை ஆகிய பழவகை விற்பனை நிலையங்கள் பஸ் நிலையத்தின் தெற்குப் புறத்தில் அமைக்கப்பட்ட கடைத்தொகுதியிலும்.

பொதுச்சந்தை மீன் கடைக்கு முன்பாக இயங்கிய ஆடு, மாடு, கோழி ஆகிய இறைச்சிக் கடைகள் தனங்கிளப்பு வீதியில் நிர்மாணிக்கப்பட்ட கடைத் தொகுதியிலும் நேற்றுமுன்தினம் தொடக்கம் இயங்கு கின்றன. (வ-9)


## மரண அறிவித்தல்



### ஜே.யேசுதாசன்(பாக்கியராசா)

கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் தேவாலய வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஜே.யேசுதாசன்(பாக்கியராசா) (01.07.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானர்.

அன்னார் சோதிமலரின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான ஜேம்ஸ்(லோப்பையா) அன்னம்மா தம்பதியினரின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்ற சாமுவேல் மற்றும் மாக்கிறெற் தம்பதியினரின் மருமகனும் சுஜாதா (பிரான்ஸ்) துபாஜன் (ஆஸ்திரேலியா) கஷேலினா, நிஷாந்த் அன்புத் தந்தையும் ,ஜேம்ஸ்பிரான்சிஸ்(துரைசிங்கம்) தேவராசாபீலிக்ஸ் (பிரான்ஸ்), லூட்ஸ் செல்வராணி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் சோதிமணி, சோதிராணி(ஆசிரியை யா/யூனியன் கல்லூரி) புவிமலர்(கனடா), வளர்மதி (சுவிஸ்), யூட்சோதிராஜ் (கனடா), ஜெறோம் பிரதீபன்(கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஷேக்ஸ்பியார் (பிரான்ஸ்) இன் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.07.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு மல்லாகம் புதுமை மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு குளமன்கால் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவலாய வீதி, மல்லாகம்.

(19997) (3)

தகவல்
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 ★ 02 ★ 1946



உதிர்வு 15 ★ 07 ★ 2011

### அமரர் சுப்பிரமணியம் விசுவலிங்கம்

திதி: ஆனி - பூரணை

அன்புள்ள அப்பாவே! ஆண்டு ஒன்று ஆனாலும்,
ஆறவில்லை எம் துயரம். ஆறுதல் பலர் கூறிடினும்
உங்கள் நினைவால் வாடிநிற்கின்றோம்
குடும்பத்தின் ஒளி விளக்காய் மீண்டும் பிறந்திடுவீர்
குல விளக்கை ஏற்றிடுவீர்.
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

'லேம் போலை', இணுவில் கிழக்கு, இணுவில்.

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

(19991) (2-6)

## விற்பனைக்கு

போட்டோ கொப்பி மிசின் மற்றும் பல உபகரணங்களும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 2250385, 077 6163240
(19998)(6-8)

## இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது.சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.470 மட்டுமே தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக்கப்படும்
நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம்
(க/1074)(6-8)

## விற்பனைக்கு உண்டு

36 ஸ்ரீ 5747 எனும் இலக்கத்தை உடைய Fort உழவு இயந்திரமும் தியேட்டருக்கு தேவையான Boxes Soni Projector என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 2834685, 078 6169147
(19274)(6-8)

## தேவை

யாழ்ப்பாண வீடொன்றுக்கு கை உதவிக்கு சுகதேகியான பொறுப்புகளற்ற 40-55 வயதுக்கு இடைப்பட்ட பெண் ஒருவர் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 077 0824 931
(19973) (45.6.9)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெய்ன் நிறுவனத்துக்கு விருது




இந்தியாவில் முன்னிலை வகிக்கும் ஆசியாவில் மிக வேகமாக வளர்ந்து வரும் எரிபொருள் மற்றும் எரிவாயு நிறுவனமான கெய்ன் இந்தியாவுக்கு 'பெட்ரோபெட்' விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய பெற்றோலியத்துறை அமைச்சர் ஜெய்பால் ரெட்டி தலைமையில் டெல்லியில் அண்மையில் நடைபெற்ற வைபவத்தில் கெய்ன் இந்தியாவின் பிரதம நிறைவேற்று அதிகாரி ராகுல் தீர் இவ்விருதை பெற்றுக் கொண்டார்.

ஓ.என்.ஜி.சி எனப்படும் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகத்துடன் இணைந்து கெய்ன் இந்தியா மங்களா எரிபொருள் பரிமாற்று குழாய் திட்டத்தை மிக சிறப்பாக முன்னெடுத்தமைக்காகவே 2012ஆம் ஆண்டுக்கான இவ்விருது கெய்ன் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் உள்ளூர் எரிபொருள் உற்பத்தியில் 20 வீதத்தை வழங்கும் மிக முக்கியமான திட்டமாக மங்களா திட்டம் கருதப்படுகின்றது. 679 கிலோமீற்றர் தூரத்தை கொண்ட உலகின் மிக நீளமான எரிபொருள் குழாய் திட்டமாக இது அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

இந்தியாவின் ஏனைய பகுதிகளுக்கு எரிபொருள் சுத்திகரிப்பு பணிகளுக்காக ராஜஸ்தானிலிருந்து 75 வீதமான எரிபொருள் இந்தக் குழாய் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றது. அது தவிர இவ்வாண்டில் மாத்திரம் 85 மில்லியன் பீப்பாய் எரிபொருள் சுத்திகரிப்புக்கு வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் எரிபொருள் இறக்குமதியை ஆறு பில்லியன் அமெரிக்க டொலர்களால் குறைப்பதற்கு இத்திட்டம் கைகொடுத்துள்ளதுடன் 2.4 பில்லியன் டொலர்கள் வருமானத்தை திறைசேரிக்கு ஈட்டிக் கொடுத்துள்ளது.

மங்களா குழாய் திட்டம் முழுமையாக பூர்த்தியடைந்துள்ளதுடன் சிறப்பான முறையில் வழிநடத்திச் செல்வதற்கு கெய்ன் நிறுவனம் சர்வதேச தரத்திலான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

## லிட்டில் ஏஷியாவின் புதிய காட்சியறை



நவநாகரிக ஆடைகளுக்கு தலைநகரில் புகழ் பெற்று விளங்கும் லிட்டில் ஏஷியா எம்போரியம் அதிகரித்துச் செல்லும் தனது வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் தனது புதிய காட்சியறையை இலக்கம் 73, 75A பிரதானவீதி, கொழும்பு-11 என்ற முகவரியில் ஜூன் முதலாம் திகதி காலை ஒன்பது மணிக்கு அமைந்த சுபநேரத்தில் ஆரம்பித்து வைத்தது.

மிகவும் கோலாகலமாக இடம்பெற்ற இத்திறப்பு விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வர்த்தகர்கள், இந்திய நடிகை சினேகா மற்றும் உள்நாட்டைச் சேர்ந்த பிரபல நட்சத்திரங்கள் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

ஐந்து மாடிகளைக் கொண்ட லிட்டில் ஏஷியா எம்போரியத்தின் இந்தப் புதிய காட்சியறை நவீன வசதிகள் கொண்டதாகவும், வாடிக்கையாளர் மனம் விரும்பும் வகையிலான எழிலான வடிவமைப்பைக் கொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

சேலைகள், சல்வார்கள், மணப்பெண் அலங்கார ஆடைகள், சிறுவர் ஆடைகள் மற்றும் ஆண்களுக்கான நவநாகரிக ஆடைகள், மணமகனுக்கான பாரம்பரிய ஆடைகள் போன்ற அனைத்து நிகழ்வுகளுக்கும் பொருத்தமாக லிட்டில் ஏஷியா எம்போரியம் திகழும் என்பதில் ஐயமில்லை.

ஆடைகள் மட்டுமின்றி, அழகுசாதன ஒப்பனைப் பொருள்கள், காலணிகள் மற்றும் நாகரிகமான வாழ்க்கைக்கு அவசியமான சகல அம்சங்களையும் ஒரே கூரையின் கீழ் சிரமம் ஏதுமின்றி வாடிக்கையாளர்கள் தெரிவு செய்து கொள்ள முடியும்.

அவை அனைத்தும் இந்தியா, சீனா, பாங்கொக், இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அது மட்டுமின்றி, ஆடை வடிவமைப்பில் நிபுணத்துவம் பெற்ற பிரபல வடிவமைப்பாளர்களின் படைப்புகளும் இந்த பிரசித்தமான காட்சியகத்தை அலங்கரிக்கின்றன.

லிட்டில் ஏஷியாவின் சுய எண்ணத்தில் உதித்த அதனுடைய பிரத்தியேகமான தயாரிப்பும் வடிவமைப்புமான கங்கோதரி மணப்பெண் அலங்கார ஆடைகள், கண்ணைப் பறிக்கும், மனதைக் கொள்ளை கொள்ளும் விதங்களில் அமைந்துள்ளன. (த)

## குரலை இழந்தார் கூகுள் நிறுவன அதிகாரி



கூகுள் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி லாரி பேஜின் தொண்டை ஒரு வித நோயால் திடீரென பாதிப்படைந்துள்ளதாக கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அவர் பல வாரங்களுக்குப் பேச முடியாத நிலையில் உள்ளார் என்றும் நிறுவனத்தின் எந்தவொரு கூட்டங்களிலும் அவர் கலந்து கொள்ளமாட்டார் என்றும் நிறுவனத்தின் நிறைவேற்று தலைவர் எரிக் ஸ்மித் தெரித்துள்ளார்.

## உலகின் பெரிய ரிவி




ஷார்ப் நிறுவனம் புதிய 90 அங்குல உலக பெரிய ரிவியைக் களமிறக்க வுள்ளது. திரையரங்கத் திரை போல் இருக்கும் இந்த டிவிக்கு ஆகுவோஸ் எல்இடி ரிவி என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

4 அடி உயரம், 6 அடி அகலம் கொண்ட இந்த ரிவி பார்ப்பதற்கு மிகவும் பிரமாண்டமாக இருக்கும்.

இந்த பிரமாண்ட ரிவி மிகவும் துல்லியமாக இருப்பதோடு இதன் விலை 10,999.99 அமெரிக்க டொலராகும்.

இந்த ஆக்குவோஸ் ரிவி ஒரு முழுமையான எச்டி வசதியைக் கொண்டது. அத்தோடு இரண்டு 3டி கண்ணாடிகளையும் கொண்டிருக்கிறது. மேலும் இந்த ரிவி இணையதள இணைப்பு வசதியும் கொண்டிருக்கிறது. (த)

## மக்கள் வங்கியின் விசேட பரிசில்கள்







யாழ்ப்பாணம், ஜூலை 3

மக்கள் வங்கியின் 51 ஆவது நிறைவு தினத்தை முன்னிட்டு கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளையில் வாடிக்கையாளர்களுக்கு விசேட பரிசில்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

மக்கள் வங்கியினால் புதிதாக மகளிர் தினத்தை முன்னிட்டு அறிமுகப்படுத்தப்பட்ட மகளிர்களுக்கான வனிதா வாசனா சீட்டிழுப்பும் மாதாந்த ஜெயசிறி சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற வாடிக்கையாளர்களுக்கு பரிசில் வழங்கலும், உயர்ந்த வட்டியுடன் கூடிய புதிய ஜெயசிறி சான்றிதழ் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

வங்கிக் கிளையின் பொது முகாமையாளர் சுறமேஷ் நேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் எஸ்.சுசிந்திரன், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் உப அதிபர் எஸ்.சின்னத்துரை மற்றும் வங்கியின்நீண்டகால வாடிக்கையாளர்கள் பலர் கலந்து கொண்டனர். (த-14)

## விரைவில் மதுரை- கொழும்பு விமான சேவை

மதுரையிலிருந்து விரைவில் சர்வதேச விமான சேவை தொடங்கப்படும் என்று இந்திய விமான போக்குவரத்து துறை அமைச்சர் அஜீத்சிங் தெரிவித்துள்ளார்.

முதலாவதாக, மதுரையில் இருந்து கொழும்புக்கு ஸ்பைஸ் ஜெட் நிறுவனம் விமான சேவையைத் தொடங்க அனுமதி அளித்துள்ளோம். படிப்படியாக இது மற்ற நாடுகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

மற்ற மாநிலங்களில் இந்த நடைமுறைப்படியே இண்டிகோ, எயர் இந்தியா, ஜெட் எயர்வேய்ஸ் ஆகிய நிறுவனங்களுக்குப் புதிய வழித்தடத்தில் சேவையைத் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்றார் அஜீத் சிங். (த)

## வந்துவிட்டது மின்சார கார்



மின்சாரத்தில் இயங்கும் செடான் வகை பெரிய கார் அமெரிக்காவில் விற்பனைக்கு வந்துள்ளது. உலகப் புகழ்பெற்ற டெஸ்லா மோட்டர்ஸ் நிறுவனம் மொடல்-எஸ் என்கிற மின்சாரத்தில் இயங்கும் கார்களைக் கலிபோர்னியாவில் உள்ள தனது ஆலையில் தயாரிக்கிறது.

கடந்த வாரம் பத்து கார்கள் அறிமுகம் செய்யப்பட்டன. இந்த ஆண்டு ஐயாயிரம் கார்களை விற்க முடியும் என்று டெஸ்லா நிறுவனம் தெரிவித்திருக்கிறது. இதற்கு முன்பு சில முன் னோடிக் கார்கள் தயாரிக்கப்பட்டிருந்தாலும், பெரும் எண்ணிக்கையில் மின்சாரத்தில் இயங்கும் கார்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு வருவது இதுவே முதல் முறை. ஒரு முறை மின்சாரம் சார்ஜ் செய்தால் 257 கிலோமீற்றர் தூரம் செல்லும் இந்தக் காரில் ஐந்து பேர் பயணம் செய்யலாம். இதை வாங்குவதற்கு இதுவரை பத்தாயிரம் பேர் முன்பதிவு செய்திருக்கின்றனர். இதன் விலை 49 ஆயிரத்து 900 டொலர் ஆகும்.

## நொக்கியா நிறுவனத்தின் 10 ஆயிரம் ஊழியர்கள் பணிநீக்கம்

### 13 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் இதுவரை நட்டம்

தொடர் நட்டத்தை எதிர் கொண்டு வரும் நொக்கியா நிறுவனம் அதன் ஊழியர்களுள் 10 ஆயிரம் பேரை வேலையில் இருந்து நீக்குவதற்கு முடிவு செய்துள்ளது.

கடந்த இரண்டு காலாண்டுகளில் நொக்கியா நிறுவனம் 13 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் நட்டத்தை எதிர் கொண்டதே இதற்குக் காரணம் என நிறுவனம் தெரிவித்துள்ளது.

கையடக்கத் தொலைபேசி பிரிவின் தலைவர் மேரி மெக்கு டுவல் உட்பட நிறுவனத்தின் முக்கிய உயர் அதிகாரிகள் பலரும் நிறுவனத்தை விட்டு விலகுகின்றனர் என்று நொக்கியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

நொக்கியா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்டீபன் எலோப் கூறுகையில், தொடர் நட்டத்தை எதிர் நோக்கி வரும் நொக்கியா நிறுவனத்தை தூக்கி நிமிர்த்தி நீண்ட காலத் திற்கு போட்டியிடும் பலத்தை கொண்டதாக நாம் அதை மாற்ற வேண்டியுள்ளது என்றார்.

எமது வாடிக்கையாளர்களுக்குப் பயன்தரக் கூடிய சேவைகள் மற்றும் உற்பத்திகள் மீதே நாம் இப்போது அதிக கவனத்தைச் செலுத்துகிறோம் என்று அவர் மேலும் கூறினார்.

நொக்கியா நிறுவனத்தின் இந்த வீழ்ச்சி அதன் பங்காளி நிறுவனமான மைக்ரோசொவ்ட்டின் மீதும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கக் கூடும் என்று சர்வதேச வர்த்தக ஆய்வாளர்கள் கூறு கின்றனர்.

மைக்ரோசொவ்ட் நிறுவனம் நொக்கியா நிறுவனத்தில் பாரிய முதலீட்டைச் செய்துள்ளது. இந்த நிலை யில் நொக்கியா நட்டத்தில் மூழ்கினால் மைகிரோசொவ்ட் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கும் என்று வர்த்தக ஆய்வாளர் சாரா ரொட்மேன் எப்ஸ் தெரிவித்துள்ளார்.

## வாடிக்கையாளருக்கு பரிசுகளை வழங்கும் எயார்டெல்லின் புதிய திட்டம் ஆரம்பம்

எயார்டெல் நிறுவனம் 'Stay Active & Win' என்ற பிரத்தியேக வாடிக்கையாளர் ஊக்குவிப்புத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இத்திட்டம் ஜூன் 8ஆம் திகதி ஆரம்பமாகியது. 2012 ஆகஸ்ட் 7ஆம் திகதி நிறைவடையும். முன்னைய தினத்தில் அழைப்புக்களை ஏற்படுத்திய வாடிக்கையாளர் மத்தியில் இருந்து ஒவ்வொரு நாளும் மணித்தியாலம் தோறும் எழுமாறாக வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார்.

அவருக்கு 1,000 ரூபா பெறுமதியான பேச்சுநேரம் சன்மானமாக வழங்கப்படும். முன்னையநாளில்மேற்கொண்ட அழைப்புக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், அதாவது ஐந்தின் பெருக்கம் என்ற உச்சவரம்பிற்கு உட்பட்ட ரீதியில், 1,000 ரூபாவின் பெருக்கமாக பல தடவைகள் பரிசுகளை வெல்ல முடியும்.

அது மாத்திரமல்ல. ஒவ்வாரு தினத்திலும் சிறந்த மணிநேரம் என்ற ரீதியிலான மணித்தியாலம் தெரிவு செய்யப்படும். முன்னைய தினத்தில் அழைப்புக்களை ஏற்படுத்திய வாடிக்கையாளர் மத்தியில் இருந்து ஒவ்வொரு நாளும் எழுமாறாக வெற்றியாளர் தெரிவு செய்யப்பட்டு, அவருக்கு 1,500 ரூபா பெறுமதியான பேச்சுநேரம் சன்மானமாக வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EUROPEAN COMMISSION
Humanitarian Aid and Civil Protection

DRC DANISH REFUGEE COUNCIL

N-GACDO
என்-காக்டோ

Oxfam

# INVITATION TO TENDER

## Procurement of Construction Material & Hardware Items

The National Gender and Community Development Organization (N-GACDO) is implementing a project in the Mullaitivu District of SriLanka, in partnership with Oxfam GB and funded by the European Commission – Humanitarian aid and Civil Protection (ECHO) through the Danish Refugee Council (DRC), (Contract No: ECHO/LKA/BUD/2011/91011). The project aims to address the Shelter, WASH & Food Security Assistance to conflict affected returnees in Mullaitivu District. N-GACDO works in Mullaitivu District to support the Government's resettlement process. To this effect N-GACDO invites eligible Local Suppliers, Traders (Importers), Distributors and Contractors having the capacity to supply, construction materials, as noted below to submit bids on an urgent basis.

**Category 01: Hardware Items**

| Tender Number | Description | Specifications | Unit | Qty |
|---|---|---|---|---|
| VAVNGDHW2012/02 | Cement | 50Kg & OPC | Bag | 3750 |
| | Steel bar (Y10) | L-18' & Grade I | Bar | 900 |
| | Mild steel bar (R6) | L-12' | Bar | 900 |
| | Polythene | 1000 G & Black | Sq.ft | 30000 |
| | Pulley | Ø6" | Nos | 150 |
| | Pail | No.10 | Nos | 150 |
| | Nylon rope | 15mm | Ft | 6000 |
| | GI Pipe | D-2" & Heavy duty | Bar | 75 |
| | Fuel | Kerosene | Litre | 1200 |
| | Super chlorine | HPH | KG | 150 |

**Category 02: Local Construction Materials**

| Tender Number | Description | Specifications | Unit | Qty |
|---|---|---|---|---|
| VAVNGDLC2012/02 | Course sand | | Cube | 225 |
| | Fine sand | | Cube | 150 |
| | Metal | ¾" | Cube | 112.5 |

The solicitation tender documents with detailed specifications will be available for collection from the undernoted address from date 04/07/2012 to date 17/07/2012 during office hours, (9.00 am to 3.30 pm) on working days (Monday to Friday but not Poya days). Completed sealed bid documents must be dropped in the tender box held at the same location before 5.00 pm on date 17/07/2012. Bids will be opened through public bids opening on 18/07/2012 at 10.00 am at the same location. A pre bid meeting will be held on 06/07/2012 at 10.30 am at the same location, where the tender procedures will be briefed and the complete specifications will be made available to the intended bidders. Based on the requirements, materials will be received under separate contracts from the selected supplier.

**The Chairman Tender Committee,**
National Gender and Community Development Organization,
Pillaiyar Kovil View,
Mathavuvaitha Kulam,
Vavuniya.
Telephone 0242222267

[சி/1201][6-8]

# பாட்லீட் பினான்ஸ் பீஎல்சீ

இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட 2006 02ம் இலக்க வழிகாட்டலுக்கு அமைவான அரையாண்டுக்கான நிதிக் கூற்று

ரூ '000

| வருமானக் கூற்று | 31/03/2012 (கணக்காய்வு செய்யப்படாதது) | 31/03/2011 (கணக்காய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| வட்டி வருமானம் | 1,069,329 | 780,287 |
| வட்டிச் செலவுகள் | (614,203) | (487,491) |
| நிகர வட்டி வருமானம் | 455,126 | 292,796 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 123,631 | 370,539 |
| **மொத்த வருமானம்** | 578,757 | 663,335 |
| தொழிற்பாட்டு செலவினம் | | |
| ஊழியர் செலவு | (117,844) | (98,103) |
| தேய்மானம் | (37,979) | (29,890) |
| பணிப்பாளர்கள் கட்டணங்கள் | (2,261) | (1,740) |
| நிறுவன செலவினம் | (70,355) | (58,526) |
| வேறு பொதுவான மற்றும் நிர்வாக செலவுகள் | (216,270) | (150,269) |
| **வரிக்கு முந்திய இலாபம்** | **134,048** | **324,807** |
| நிதி சேவைகளுக்கான VAT தீர்வை | (14,395) | (14,049) |
| **வரி / சாத்தியமான இழப்புகளுக்கான ஒதுக்கீடுகளுக்கு முன்னதான தொழிற்பாடுகளிலிருந்தான இலாபம்** | **119,653** | **310,758** |
| கடன் இழப்புகள் மற்றும் முதலீட்டு பெறுமதி இழப்புகளுக்கான ஒதுக்கீடுகள் | (20,725) | (83,792) |
| ஏற்படக்கூடிய இழப்புகளுக்கான ஒதுக்கீடுகளுக்கு பின்பு செயல்பாட்டு இலாபம் | 98,928 | 226,966 |
| நிகர விசேட சாதாரண வருமானம்/ (இழப்பு) | - | - |
| வருமான வரி விதிப்பிற்கு முன்னரான இலாபம் | 98,928 | 226,966 |
| வரி விதிப்பிற்கு பின்னரான இலாபம் | **95,029** | **222,063** |

| தெரிந்தெடுக்கப்பட்ட செயலாற்ற குறிகாட்டிகள் | 31/03/2012 (கணக்காய்வு செய்யப்படாதது) | 31/03/2011 (கணக்காய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| **சொத்து தகைமை (ரூபா. '000)** | | |
| மொத்த ஒதுக்கீடுகள் (சந்கேமான நிகர வட்டி) | 5,058,951 | 3,108,168 |
| நிகர மொத்த ஒதுக்கீடுகள் ( பெற முடியாத கடன்களுக்கான ஒதுக்கங்கள் மற்றும் சந்தேகமான வட்டி ) | 5,018,786 | 3,022,942 |
| செயல்படாத ஒதுக்கீடுகள் (சந்தேகமான நிகர வட்டி) | 49,152 | 58,060 |
| **திரவத்தன்மை (ரூபா. '000)** | | |
| தேவையான திரவச் சொத்துக்களின் ஆகக் குறைந்த தொகை | 507,874 | 363,063 |
| கிடைக்கத்தக்கதாகவுள்ள திரவச் சொத்துக்களின் தொகை | 886,760 | 715,782 |
| தேவையான அரச பிணையங்களின் ஆகக் குறைந்த தொகை | 244,409 | 195,048 |
| அரச பிணையங்களின் கிடைக்கத்தக்க தொகை | 450,036 | 334,007 |
| **மூலதனப் போதுமை** | | |
| இடர்நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான மைய மூலதன விகிதம் (ஆகக் குறைந்தது 5%) | 9.25% | 14.10% |
| இடர்நிறையேற்றப்பட்ட சொத்துக்களுக்கான மொத்த மூலதன விகிதம் (ஆகக் குறைந்தது 10%) | 10.02% | 14.60% |
| மொத்த வைப்புப் பொறுப்புக்களுக்கான மூலதன நிதிய விகிதம் (ஆகக் குறைந்தது 10%) | 13.25% | 17.10% |
| **இலாபத்தன்மை** | | |
| சொத்துக்கள் மீதான சராசரி வருமானம் (%) | 1.57% | 5.10% |
| பங்கு மீதான சராசரி வருமானம் (%) | 14.69% | 43.29% |

ரூ '000

| ஐந்தொகைச் சுருக்கம் | 31/03/2012 (கணக்காய்வு செய்யப்படாதது) | 31/03/2011 (கணக்காய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| **பொறுப்புகள்** | | |
| மொத்த வைப்புக்கள் | 5,075,410 | 3,630,633 |
| வங்கி கடன்பாடுகள் | 993,030 | 434,581 |
| தொகுதிக்கடன் | 204,000 | - |
| கொடுபடத்தக்க மொத்த வட்டி | 159,798 | 123,657 |
| கொடுபடத்தக்க பங்காதாயம் | 355 | 288 |
| ஏனைய பொறுப்புக்கள் | 93,358 | 80,370 |
| **பங்குதாரர் நிதியம்** | | |
| வழங்கப்பட்டு செலுத்திய மூலதனம் | 61,205 | 61,205 |
| ஒதுக்கப்பட்ட நிதி | 142,375 | 142,375 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | 41,400 | 41,400 |
| ஏனைய ஒதுக்கங்கள் | 427,662 | 375,970 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **7,198,593** | **4,890,479** |
| **சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 118,154 | 123,477 |
| வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுடான வைப்புக்கள் | 43,210 | 88,065 |
| அரச பிணையங்கள் | 446,048 | 330,306 |
| மீள்கொள்வனவு முதலீடுகள் | 204,445 | 175,301 |
| பிணைகளில் மூலதனம் | 5.700 | 69,025 |
| செயல்பாட்டு பிணைகளில் மூலதனம் | 327,460 | 274,155 |
| நீண்டகால பிணைகளில் மூலதனம் | 209,799 | - |
| விற்பனைக்கான காணி, கட்டிடங்களின் இருப்பு | 149,277 | 175,402 |
| வாடகைக் கொள்வனவு | 3,316,782 | 2,040,838 |
| நிதிக் குத்தகைகள் | 1,358,386 | 632,617 |
| கடன்கள் | 165,035 | 164,606 |
| ஏனைய கடன் வசதிகள் | 178,583 | 184,881 |
| ஏனைய வருமதிகள் | 31,620 | 22,113 |
| ஏனைய சொத்துக்கள் | 425.073 | 410.709 |
| ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் கருவிகளும் | 219,021 | 198,984 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **7,198,593** | **4,890,479** |

மேற்கண்ட புள்ளி விவரங்கள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியவையாகும்

இலங்கை மத்திய வங்கியால் குறிப்பிடப்பட்ட நியமனங்கள் / மாதிரிகளுக்கு அமைவாக மேற் கண்ட கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஒப்பம்)
திரு. M இராஜ் விஜேசிங்க்
[illegible] பணிப்பாளர்

(ஒப்பம்)
திரு. சுசந்த டீ அல்விஸ்
பணிப்பாளர்

[சி/1141][6-8]

# நகர அபிவிருத்தி நடைமுறைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூலை 3

இலங்கை நகர அபிவிருத்தி அதிகார சபையின் கட்டளைச் சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளதாக யாழ். மாநகர ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் அறிவித்துள்ளார்.

இதில் யாழ். மாநகரசபை, சாவகச்சேரி, பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறை நகரசபைகளின் எல்லைகளுக்கு உட்பட்ட ஆதனங்களில் பிரிவிடுதல், கட்டட அமைப்பு அல்லது சேர்க்கை உபயோக மாற்றம் வேண்டி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகத் தமது சேவையை வழங்குகின்ற உத்தரவு பெற்ற நில அளவையாளர்கள், பொறியியலாளர்கள் மற்றும் பதிவு செய்த பதிவு செய்ய விரும்பும் படவரைஞர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாணப் பணிப்பாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மாநகர ஆணையாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(10-16)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஜூலை 3

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட யாழ். இணுவில் இந்துக் கல்லூரி, யாழ். அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் ஆகிய 1C பாடசாலைகளில் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை தரம்-I, தரம்-2-I ஐச் சேர்ந்த வலிகாமம் கல்வி வலயங்களைச் சேர்ந்த அதிபர்களே விண்ணப்பிக்க முடியுமென வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(16)

# உயர்தர மாணவர்களுக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்ஜூலை3

வலிகாமம் வலயப் பாடசாலைகளிலிருந்து உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சையும் கருத்தரங்கும் நாளை நடைபெறவுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இவற்றுக்கான நேர அட்டவணைகள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால் மாணவர்கள் தமது பாடசாலைகளுடன் தொடர்பு கொண்டு நேர அட்டவணையைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பரீட்சை நோக்கிலான எதிர்பார்க்கை விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் சகல மாணவர்களும் இதில் பங்குபற்றிப் பயனடையுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘இந்து பிறிமியர் லீக்’

## போட்டிகள் இன்று பிரமாண்டமாக ஆரம்பம்



யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் ஏனைய விளையாட்டுக் கழகங்களுடன் இணைந்து ‘உதய’னின் ஊடக அனுசரணையுடன் ஏற்பாடு செய்துள்ள எச்.பி.எல். கரப்பந்தாட்டச் சுற்றுத்தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது.

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று மாலை 4 மணிக்கு போட்டியின் ஆரம்ப நிகழ்வு நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக யாழ்.கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் கி.மனோகரன் கலந்துகொள்ளவுள்ளார்.

கரப்பந்தாட்ட வரலாற்றில் யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக மிக நீண்ட சுற்றுத் தொடராக எச்.பி.எல். போட்டிகள் இடம்பெறவுள்ளன. ஆவரங்கால், புத்தூர், அச்சுவேலி ஆகிய பகுதிகளில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் இந்தத் தொடரை ஏற்பாடு செய்துள்ளன.

இச்சுற்றுத் தொடருக்கென யாழ்.மாவட்டத்தில் உள்ள கரப்பந்தாட்ட அணிகளில் திறமையை வெளிக்காட்டிய முன்னணி வீரர்களைக் கலந்து தெரிவு செய்து உருவாக்கப்பட்ட ஆறு புதிய அணிகள் எச்.பி.எல். போட்டியில் களமிறங்கவுள்ளன. ஒரே அணியில் விளையாடிய வீரர்கள் இதன்போது எதிர் எதிராகச் சந்திக்க வேண்டிய நிலையும் இருப்பதால் ஆட்டங்களில் அனல்பறப்பது நிச்சயம். இதுதவிர குறித்த அணிகள் விரும்பும் பட்சத்தில் வெளிக் கழகங்களையோ அல்லது வெளி மாவட்டத்தையோ சேர்ந்த இரு வீரர்களைத் தமது அணியில் சேர்த்துக்கொள்ள முடியும்.

இன்று ஆரம்பமாகும் போட்டிகள் 17ஆம் திகதிவரை மின்னொளியில் நடைபெறவுள்ளன. இதன்மூலம் கரப்பந்தாட்டத்தில் திறமையான வீரர்களை இனம்காண்பதுடன், யாழ்.மாவட்ட ரீதியில் கரப்பந்தாட்டத் துறையை மேம்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. [ந-130]

### மோதக் காத்திருக்கும் எச்.பி.எல். அணிகள்

- ஜப்னா கிங்ஸ்
- யுத் ஸ்ரார்ஸ்
- ஜப்னா லயன்ஸ்
- சுப்பர் கிங்ஸ்
- றோயல் லீடர்ஸ்
- ஜப்னா பிரண்ட்ஸ்

### எச்.பி.எல். அட்டவணை

03.07.2012
ஜப்னா கிங்ஸ் எதிர் யுத் ஸ்ரார்ஸ்
ஜப்னா லயன்ஸ் எதிர் சுப்பர் கிங்ஸ்

04.07.2012
ஜப்னா பிரண்ட்ஸ் எதிர் றோயல் லீடர்ஸ்
ஜப்னா கிங்ஸ் எதிர் சுப்பர் கிங்ஸ்

05.07.2012
ஜப்னா லயன்ஸ் எதிர் யுத் ஸ்ரார்ஸ்
ஜப்னா பிரண்ட்ஸ் எதிர் சுப்பர் கிங்ஸ்

06.07.2012
ஜப்னா கிங்ஸ் எதிர் றோயல் லீடர்ஸ்
ஜப்னா லயன்ஸ் எதிர் ஜப்னா பிரண்ட்ஸ்

07.07.2012
றோயல் லீடர்ஸ் எதிர் யுத் ஸ்ரார்
ஜப்னா கிங்ஸ் எதிர் ஜப்னா பிரண்ட்ஸ்

08.07.2012
ஜப்னா லயன்ஸ் எதிர் றோயல் லீடர்ஸ்
சுப்பர் கிங்ஸ் எதிர் யுத் ஸ்ரார்ஸ்

09.07.2012
ஜப்னா கிங்ஸ் எதிர் ஜப்னா லயன்ஸ்
றோயல் லீடர்ஸ் எதிர் சுப்பர் கிங்ஸ்

10.09.2012
ஜப்னா பிரண்ட்ஸ் எதிர் யுத் ஸ்ரார்ஸ்
ஜப்னா லயன்ஸ் எதிர் சுப்பர் கிங்ஸ்

11.09.2012
ஜப்னா கிங்ஸ் எதிர் யுத் ஸ்ரார்ஸ்
ஜப்னா பிரண்ட்ஸ் எதிர் றோயல் லீடர்ஸ்

12.09.2012
ஜப்னா கிங்ஸ் எதிர் சுப்பர் கிங்ஸ்
ஜப்னா லயன்ஸ் எதிர் யுத் ஸ்ரார்ஸ்

13.09.2012
ஜப்னா பிரண்ட்ஸ் எதிர் சுப்பர் கிங்ஸ்
ஜப்னா கிங்ஸ் எதிர் றோயல் லீடர்ஸ்

14.09.2012
ஜப்னா லயன்ஸ் எதிர் ஜப்னா பிரண்ட்ஸ்
றோயல் லீடர்ஸ் எதிர் யுத் ஸ்ரார்

15.09.2012
ஜப்னா கிங்ஸ் எதிர் ஜப்னா பிரண்ட்ஸ்
ஜப்னா லயன்ஸ் எதிர் றோயல் லீடர்ஸ்

16.09.2012
சுப்பர் கிங்ஸ் எதிர் யுத் ஸ்ரார்ஸ்
ஜப்னா கிங்ஸ் எதிர் ஜப்னா லயன்ஸ்

17.09.2012
றோயல் லீடர்ஸ் எதிர் சுப்பர் கிங்ஸ்
ஜப்னா பிரண்ட்ஸ் எதிர் யுத் ஸ்ரார்ஸ்

## வடமாகாண கரம் சுற்றுப் போட்டி வென்ற பாடசாலைகளின் விவரம்

வவுனியா, ஜூலை 3

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையேயான கரம் சுற்றுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இதில் 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான போட்டியில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியும் வீரபுரம் மாணிக்கவாசகர் வித்தியாலயமும் மோதிக்கொண்டன. இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்று சம்பியனானது. இந்தப் பிரிவில் மூன்றாம் இடத்தை யாழ்.மத்திய கல்லூரி பெற்றுக்கொண்டது.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் யாழ்ப்பாண சென். ஜோன்ஸ் கல்லூரியும் யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்டது. மிகவும் பரபரப்பாக இடம்பெற்ற போட்டியில் யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றுக்கொண்டது. இந்தப் பிரிவில் மூன்றாம் இடத்தை யாழ். இந்துக் கல்லூரி தனதாக்கியது.

15 வயதுப் பெண்களுக்கான ஆட்டத்தில் வவுனியா அல் -இக்பால் முஸ்லிம் வித்தியாலயமும் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன. இதில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியை வீழ்த்தி, வவுனியா அல்-இக்பால் முஸ்லிம் வித்தியாலயம் சம்பியனானது. மூன்றாம் இடம் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணிக்கு கிடைத்தது.

19 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ்.சுண்டுக்குழி மகளிர் கல்லூரியும், யாழ்.இந்து மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன. இதில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியனானது. மூன்றாம் இடத்தினை வவுனியா சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை அணி பெற்றுக்கொண்டது. [ந-400]



## கரம் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது காமாட்சி

வலி.வடக்கு, ஜூலை 3

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையும் பல்கலைக்கழக ஆடவர்க்கான கரம் அணியும் இணைந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் கரம்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் விளையாட ஸ்ரீ காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றுள்ளது.

யாழ். பல்கலைக்கழக உள்ளக அரங்கில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியும் ஸ்ரீகாமாட்சி அம்பாள் அணியும் மோதிக்கொண்டன. முதலில் இடம்பெற்ற ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழகத்தை சேர்ந்த எஸ்.எம். கருணரட்ணாவும் ஸ்ரீகாமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சோபானந்த்தும் மோதிக் கொண்டனர். இதில் சோபானந்த் 25:2 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எஸ்.ஜனகனும் ஸ்ரீ காமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஜெயகாந்தனும் மோதிக் கொண்டனர்.இதில் ஜெயகாந்தன் 24:12 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் ஸ்ரீகாமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எஸ்.சற்குணமூர்த்தியும், யாழ்.பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த அன்ரனியும் மோதிக் கொண்டனர். இந்தப் போட்டியில் அன்ரனி 29:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

நான்காவது சுற்றாக இடம்பெற்ற இரட்டையர் ஆட்டத்தில் காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த பி.விஜயகாந்த எம்.சோபானந்த் இணை 28:11 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டியது.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் ஸ்ரீகாமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற சுற்றுக்கள் கணக்கில் வெற்றி பெற்று, இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. [ந-86]

## மகளிர் உதைபந்தாட்டப் போட்டி மடு பிரதேச செயலகம் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 3

மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மகளிர் அணிகள் பங்கு பற்றிய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து மடு பிரதேச செயலக அணி மோதிக்கொண்டது. ஆட்டம் ஆரம்பமாகியது முதல் முடிவடையும் வரை இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இதனால் ஆட்டத்தின் வெற்றி, தோல்வியை நிர்ணயிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் மடு பிரதேச செயலக அணியினர் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுமகளிர் உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்று சாதனை படைத்தனர். [ந-23]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சம்பியனானது ஸ்பெயின்

ஐரோப்பிய கிண்ண இறுதி ஆட்டத்தில் இத்தாலியை 4-0 என்ற கோல்க் கணக்கில் வீழ்த்தி நடப்புச் சம்பியன் ஸ்பெயின் கிண்ணத்தை தக்க வைத்துக் கொண்டது.

ஐரோப்பிய கிண்ண உதைபந்துத் தொடர் கடந்த ஜுன் மாதம் 8 ஆம் திகதி போலந்து மற்றும் உக்ரேனில் தொடங்கியது. இந்தத் தொடரில் ஐரோப்பிய கண்டத்தை சேர்ந்த முன்னணி 16 அணிகள் பங்கு பற்றின. இதில் 'சி' பிரிவில் இடம் பெற்றிருந்த நடப்புச் சம்பியன் ஸ்பெயின் மற்றும் இத்தாலி அணிகள் இறுதி ஆட்டத்துக்கு முன்னேறின. அரையிறுதி ஆட்டத்தில் ஸ்பெயின், போர்த்துக்கல் அணியை 4-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. மற்றொரு அரையிறுதியில் இத்தாலி 2-1 என்ற கோல் கணக்கில் வலுவான ஜேர்மனி அணியை தோற்கடித்து இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது. இறுதி ஆட்டம் நேற்று உக்ரேனின் கீவ் நகரில் நடை பெற்றது.

ஸ்பெயின் அணியில் முதல் 11 பேர் அணியில் பெப்ரிகாஸ் இடம் பெற்றார். இத்தாலி அணியில் எந்த பெரிய மாற்றமும் இல்லை. ஜேர்மனிக்கு எதிராக விளையாடிய அதே வீரர்களே இந்த ஆட்டத்திலும் களம் இறங்கினர்.

ஆரம்பம் முதலே ஸ்பெயின் அதிரடியாக விளையாடியது. இதனால் 14 ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் முதல் கோலை அடித்து இத்தாலிக்கு அதிர்ச்சியை அளித்தது. மைதானத்தின் வலது பக்கத்தில் இருந்து கிட்டத்தட்ட 'மைனஸ் டிகிரியில்' இருந்து பெப்ரிகாஸ் 'கிராஸ்' செய்த பந்தை மான்செஸ்டர் சிட்டி வீரர் டேவிட் சில்வா தலையால் முட்டி கோலுக்குள் அடித்தார். இந்தக் கோல் மூலம் ஸ்பெயின் 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. தொடர்ந்து 41 ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் அடுத்த கோலைப் போட்டது. நடுக்களத்தில் இருந்து சேவி செய்த 'பாஸை' பெற்ற ஜோர்டி ஆல்பா அதனை மிக நேர்த்தியாக கோலாக மாற்றினார். முதல் பாதியில் ஸ்பெயின் 2-0 என்று முன்னிலை பெற்றது.

பிற்பாதியில் இத்தாலி, அன்டனியோ காசோனாவுக்கு பதிலாக 34 வயது அனுபவமிக்க உடினிஸ் 'ஸ்டிரைக்கர்' அன்டானியோ டி நடாலி களம் இறக்கப்பட்டார். இறங்கிய உடனே மிக அருமையாக ஒரு 'ஹெடிங்' செய்தார். ஆனால் ஸ்பெயின் கோல் கம்பத்துக்கு சற்று மேலே சென்றதால் கோலாகவில்லை. இரு கோல்கள் பின்தங்கிய நிலையில் இத்தாலி வீரர்கள் கோல் அடிக்க கடும் போராட்டம் நடத்தினர்கள். ஆனால் ரியல்மட்ரிட் கோல் காப்பாளர் இகெர் கேசிலாஸ் இத்தாலி வீரர்களின் கோல் முயற்சிகளை தகர்த்து எறிந்து விட்டார்.

பின்னர் மாற்று ஆட்டக்காரராக இறங்கிய ஸ்பெயின் வீரர் பெர்னான்டோ டார்ரஸ் தன் பங்குக்கு 84 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். ஸ்பெயின் அணிக்காக டார்ரஸ் அடிக்கும் 31 ஆவது சர்வதேச கோல் இதுவாகும். முதல் சுற்று லீக் ஆட்டத்தில் இத்தாலியிடம் கடும் பாடு பட்ட ஸ்பெயின் இறுதி ஆட்டத்தில் இத்தாலியை உண்டு இல்லை என்று ஆக்கியது. ஆட்டத்தின் இறுதிக் கட்டத்தில் 88 ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் 4 ஆவது கோலை அடித்தது. பெர்னான்டோ டார்ரஸ் 'பாஸ்' செய்த பந்தை ஜுவான் மாத்தா வலைக்குள் தள்ள ஆட்ட நேர இறுதியில் ஸ்பெயின் 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை தக்கவைத்துக் கொண்டது. ஐரோப்பிய கிண்ண வரலாற்றில் முதல் முறையாக 4 கோல் அடித்து ஸ்பெயின் கிண்ணத்தை கைப்பற்றியது புதிய சாதனை ஆகும். இதற்கு முன்னர் 1972 ஆம் ஆண்டு மேற்கு ஜேர்மனி, சோவியத் யூனியன் அணியை 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றதே சாதனையாக இருந்தது.

மேலும் 2008 ஆம் ஆண்டு ஐரோப்பிய கிண்ணம் 2010 உலகக் கிண்ணம் மீண்டும் 2012 ஐரோப்பிய கிண்ணம் என்று 3 முக்கிய போட்டிகளில் சம்பியன் பட்டத்தை வென்ற முதல் அணி என்ற பெருமையும் ஸ்பெயின் அணிக்கு கிடைத்தது. ஐரோப்பிய கிண்ணத்தை ஸ்பெயின் அணி வெல்வது இது 3 ஆவது முறை ஆகும். இதற்கு முன 1964, 2008 ஆம் ஆண்டுகளில் ஸ்பெயின் கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது. (5)







## இது ரசிகர்களின் கொண்டாட்டம்....





## தங்க காலணி பெர்னாண்டோவுக்கு



ஐரோப்பிய கிண்ண உதைபந்துத் தொடரில் அதிக கோல் அடித்த வீரருக்கு வழங்கப்படும் தங்கக் காலணி விருது பெர்னான்டோ டார்ரசுக்கு வழங்கப் பட்டது.

ஐரோப்பிய கிண்ணம் நேற்று முன்தினம் முடிவடைந்தது. இறுதி ஆட்டத்தில் ஸ்பெயின், இத்தாலியை 4-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி கிண்ணத்தை தக்கவைத்துக் கொண்டது.

இந்த யூரோவில் 2 ஆட்டங்களில் முதல் 11 பேர் அணியிலும் 3 ஆட்டங்களில் மாற்று ஆட்டக்காரராகவும் களம் இறங்கிய ஸ்பெயின் வீரர் பெர்னான்டோ டார்ரஸ் 3 கோல்களை அடித்திருந்தார். இதில் அயர்லாந்துக்கு எதிராக இரு கோல்களையும் நேற்று முன்தினம் இத்தாலிக்கு எதிரான ஆட்டத்தில் ஒரு கோலையும் அவர் அடித்தார். மேலும் இறுதி ஆட்டத்தில் சக வீரர் ஜுவான் மாத்தா கோல் அடிக்கவும் அருமையாக 'பாஸ்' செய்தார். இதையடுத்து பெர்னான்டோ டார்ரஸ் இந்த யூரோவின் சிறந்த வீரராக தேர்வு செய்யப்பட்டு தங்கக் காலணி விருதை பெற்றார். இவர் களத்தில் இருந்த மொத்த நேரம் 189 நிமிடங்கள் மட்டுமே.

இரண்டாவது இடத்தை ஜேர்மனியின் மரியோ ஹோம்ஸ் பெற்றார். இவர் 4 ஆட்டங்களில் முதல் அணியில் இடம் பிடித்தார். ஒரு ஆட்டத்தில் மாற்று ஆட்டக்காரராக களம் இறங்கினார். மரியோ ஹோம்சும் 3 கோல்களை அடித்து ஒரு கோல் அடிக்க உதவி புரிந்துள்ளார். இவர் 282 நிமிடங்கள் களத்தில் இருந்துள்ளார்.

மேலும் நேற்று முன்தினம் நடந்த இறுதி ஆட்டத்தில் மரியோ பொலட்டலி ஒரு கோல் அடித்திருந்தால் கூட 4 கோல்களுடன் தங்கக் காலணி விருதையாவது பெற்றிருக்க முடியும். (5)

## மழை ஆடும் ஆட்டம் சமனிலையாகிறது

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் மழை குறுக்கீடு செய்வதால் பெரும்பாலும் சமநிலையில் ஆட்டம் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. முதலாவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணி பெற்றுக் கொண்ட 551 ஓட்டங்களுக்கு பதிலளிக்கத் தொடங்கிய இலங்கை அணி ஆட்டநேர நிறைவில் ஓர் இலக்கினை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. கடந்த வெள்ளிக் கிழமை கொழும்பில் ஆரம்பமான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத் தடுப்பைத் தேர்வு செய்தது.

அதன்படி துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஹபீஸ் 196, அஷார் அலி 157 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க நேற்றுமுன்தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேர நிறைவில் 4 இலக்குகளை இழந்து 488 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்றைய தினமும் தனது ஆட்டத்தைத் தொடர்ந்த பாகிஸ்தான் அணி ஆரம்பத்திலேயே அஷாட் சபிக்கை 2, அட்னாட் அக்மல் 5 ஓட்டங்களுடன் வேகமாக இழந்தது. இருப்பினும் அணித் தலைவர் மிஷ்பா சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். அவருக்கு இணையாக அப்துர் ரெஹிமான் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தார். சிறப்பாக ஆடிய மிஷ்பா தனது 17 ஆவது அரைச் சதத்தைக் கடந்தார். பாகிஸ்தான் அணி 551 ஓட்டங்களை 6 இலக்குகளை இழந்து பெற்றிருந்த நிலையில் தனது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

அணித்தலைவர் மிஷ்பா 66, ரெஹிமான் 18 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தனர். பந்து வீச்சில் ஹேரத் 3 இலக்குகளை கைப்பற்றியிருந்தார்.

தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி ஆரம்பத்திலேயே பரணவிதாரனவை இழந்தது. யுனைட் கானின் பந்துப் வீச்சில் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார். அதன் பின்னர் டில்ஷான், சங்ககார இணை வெளுத்து வாங்கியது. இருவரும் வேகமாக ஓட்டங்களைக் குவிப்பதிலேயே முனைப்புக் காட்டினர். இருப்பினும் மழையின் குறுக்கீட்டால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

ஆட்டம் நிறுத்தப்படும் வேளையில் இலங்கை அணி 15 பந்துப் பரிமாற்றங்களில் 70 ஓட்டங்களை ஓர் இலக்கினை இழந்து பெற்றிருந்தது. டில்ஷான் 46, சங்ககார 22 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றிருந்தார். இன்று ஆட்டத்தின் நான்காவது நாளாகும். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வேட்டையைத் தொடரும் கெய்ல் வெற்றிகளைப் பெறும் தீவுகள்

**ஆட்ட நாயகனாக சுனில் நரைனும், தொடரின் நாயகனாக கிறிஸ் கெய்லும் தெரிவுசெய்யப்பட்டனர்.**

ஐக்கிய அமெரிக்காவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 'ரி-20' தொடரில் பங்குபற்றிய நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது 'ரி-20' சர்வதேச ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டது. மேற்கிந்தியத் தீவுகள் அணி 61 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக முதலாவது ஆட்டத்தில் அதிரடியாக ஆடிய கிறிஸ் கெய்ல், இரண்டாவது ஆட்டத்திலும் மிகச் சிறப்பாக ஆடினார்.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக கிறிஸ் கெய்ல் 39 பந்துகளில் 53 ஓட்டங்களையும், ஜோன்சன் சார்ள்ஸ் 32 பந்துகளில் 36 ஓட்டங்களையும், டுவைன் பிராவோ இறுதி நேரத்தில் 11 பந்துகளில் 4 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக நதன் மக்கலம் 3 இலக்குகளையும், டக் பிரேஸ்வெல், ரிம் சௌதி, ரொப் நிக்கல் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

178 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 18.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 116 ஓட்டங்களைப் பெற்று 61 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஆரம்பத்திலிருந்தே இலக்குகளை இழந்த அந்த அணியால் எந்தவிதமான இணைப்பாட்டத்தையும் புரிய முடியாது காணப்பட்டது.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக டானியல் பிளைன் 19 பந்துகளில் 22 ஓட்டங்களையும், டக் பிரேஸ்வெல் 11 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக சுனில் நரைன் 4 பந்துப் பரிமாற்றங்களில் 12 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளைக் கைபற்றினர். (5)

**பொருளியல் புள்ளி விபரங்கள்**

MCQ,கட்டமைப்பு வினாவிடைகள் அடங்கிய நூல் 2012A/L, 2013A/L பரீட்சைகளுக்குரியது.

**ஆசிரியர்- வே.கருணாகரன்**

விலை - ரூபா 60.00

**பூபாலசிங்கம் புத்தகசாலை, அன்னை புத்தகசாலை.**

(20019) (3)

## தொடர்கின்றது இங்கிலாந்தின் வெற்றி




ஆஸ்திரேலிய அணிக்கும் இங்கிலாந்து அணிக்குமிடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளது. இங்கிலாந்து அணி 6 இலக்குகள் வித்தியாசத்தில் இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

லண்டன் ஓவல் மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றது. மத்திய பந்துப் பரிமாற்றங்களில் மெதுவாக ஓட்டங்களைப் பெற்ற அந்த அணியால் தேவையானளவு ஓட்டங்களைப் பெற முடியாது போனது.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக ஜோர்ஜ் பெய்லி 86 பந்துகளில் 65 ஓட்டங்களையும், ஷேன் வொட்சன் 80 பந்துகளில் 66 ஓட்டங்களையும், டேவிட் ஹசி 37 பந்துகளில் 29 ஓட்டங்களையும், பிரட் லீ 11 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ரிம் பிரெஸ்னன் 2 இலக்குகளையும், ஸ்டீவன் பின், ஸ்ருவேர்ட் புரோட், ரவி போப்பாரா, கிரேம் ஸ்வான் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

252 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 45.4 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக சரியான ஆரம்பம் பெற்றுக் கொடுக்கப்பட தொடர்ந்து வந்த வீரர்கள் சிறப்பாக ஆடி வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர்.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ரவி போப்பாரா 85 பந்துகளில் 82 ஓட்டங்களையும், இயன் பெல் 113 பந்துகளில் 75 ஓட்டங்களையும், மோர்கன் 40 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக கிளின்ட் மக்காய், ஷேன் வொட்சன், மைக்கல் கிளார்க் ஆகியோர் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக இங்கிலாந்து அணி சார்பாக சகலதுறைப் பெறுபேறுகளை வெளிப்படுத்திய ரவி போப்பாரா தெரிவானார். இந்தத் தொடரில் நடைபெற்று முடிந்த 2 ஆட்டங்களின் நிறைவில் இங்கிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. (5)

**02-07.2012 - 10.07.2012 வரை**

**விஷேட விலைக் கழிவுடன்**




முதல் தர லங்கா ரைல்ஸ்,
உயர் தர இறக்குமதி செய்யப்பட்ட
நவீனரக குளியலறை சாதனங்கள்
மற்றும் இணைப்புக்கள் இன்னும் பல...

(சி/1145)

**நாராயணா**

**கட்டடப் பொருட்கள் வர்த்தகர்**

115, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

021 567 8157
021 222 5390

**ஜேர்மன், சுவிஸ் டொச் மொழிகள்**

Oxford

தொடர்புகளுக்கு
077 9707322

Academy Of Logic
Palaly Road, Jaffna.

(20007) (6.3)

**தாவடி - கொக்குவிலில்**

பாடசாலை விலகியோருக்கும் அரசஅலுவலர்களுக்குமான

**சிங்கள வகுப்பு**

புதிய பிரிவுகள் ஆரம்பம்
கற்கைநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
இணையத்தினூடாக கற்பதற்கு www.cbcalanka.com

சீபி CB සීබී Computer Academy

No.325, K.K.S Rd, Thavady Junction, Kokuvil. T.P: 0213217903

(20009)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.